Office of the Registrar of Books & Newspapers,
8 - MAR 1955
CEYLON

வாரப் பதிப்பு விலை 10 சதம்

சுதந்திரன்
ESUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO- 12

புத்தகம் 8 ஐய ஆடி மாசி மீ 22உ [6-3-55] ஞாயிற்றுக்கிழமை ரஜப் பிறை 11 இதழ் 40

USHA உஷா

கை மெஷின் ரூ. 225-00.
டிரெடல் ரூ. 315-00.
போல்டிங் ரூ. 340-00.

சோல் ஏஜண்ட்: G. H. REIMOO,
17, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
டெலிபோன்: 6060.

சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்க மீண்டும் முயற்சி?

தேர்தல் கிலி காட்டி ஒரு மொழியைப் புகுத்த ஜே. ஆரின் புதிய தந்திரம்

சிபார்சுகள் செய்ய உபகமிட்டி ஒன்றை மத்திரி சபை நியமிக்கலாம்

(நமது நிருபர்)

இந்த நாட்டில் சிங்களம் மட்டுமே அரசகரும மொழியாக இருக்கவேண்டும் என்று சில சிங்களத் தலைவர்கள் வகுப்பு வெறி இயக்கம் ஒன்றை நடத்தி வருகிறார்கள் அல்லவா? இந்தக் கோரிக்கையை பற்றி சிபார்சுகள் செய்வதற்காக மந்திரி சபை ஒரு உபகமிட்டியை சமீபத்தில் நியமிக்க இருக்கிறது என்று நம்பகமான அரசாங்கச் செய்தி நமக்குக் கிடைத்துள்ளது.

இந்த யோசனையை உணவு மந்திரி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனை பிரதம மந்திரி சேர். ஜோன் கொத்தலாவலையிடம் சமர்ப்பித்திருப்பதாகவும் இது வெகு சீக்கிரத்தில் மந்திரி சபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று மேலும் நமக்குக் கிடைத்துள்ள செய்தி கூறுகிறது.

சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகரும மொழியாக இருக்கவேண்டும் என்ற இயக்கம் சிங்கள மக்களிடை பிரமாண்டமான அளவுசெல்வாக்குப் பெற்றுள்ளதாகவும், எனவே இது பொதுத் தேர்தலில் பெரும் பிரச்னையாக இருக்கும் என்றும் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனை தெரிவித்திருக்கிறாராம்.

எனவே அரசாங்கம் இது பற்றி ஒரு யுக்தியான முடிவுக்குவராவிட்டால் பொதுத் தேர்தலில் என்னநேரும் என்றுகூறமுடியாதென்றும்இந்த நேரத்தில் இது பற்றி ஒரு தீர்க்கமான முடிவுக்கு வர ஒரு உபகமிட்டியை மந்திரி சபை நியமிப்பது அத்தியாவசியமானதுஎன்று ஜே. ஆர் வலியுறுததி வருகிறாராம்.

தமது கோரிக்கையை ஒரு வேண்டுகோள் ரூபத்தில் முன்வைக்குமாறு திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனுவை பிரதமர் ஜோன் கொத்தலாவலை தெரிவித்திருக்கிறார் என்று நம்பப்படுகிறது.

சுதந்தரின் சொன்னால் சொன்னது தான்!

ஒரு வாரப் பத்திரிகையாக இருந்தபோதிலும் அரசாங்கத்தின் அந்தரங்க செய்திகளை எந்தப் பத்திரிகையையும் விட முந்தித் தருவது சுதரந்திரன்ஒன்று தான்என்பதைநேயர்கள் நீண்ட காலமாக அறிவார்கள்.

இந்தப்பட்டியலிலேசமீபத்தில் சுதந்திரன் கொடுத்த இரண்டு செய்திகளை ஈண்டு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஒன்று அடுத்த பொதுத்தேர்தலைப்பற்றியது. கடந்தவாரம் பிரதமரின் வாயிலிருந்துபுறப்பட்டு இதரபத்திரிகைகள் எல்லாம் வெளியிடுவதற்கு சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னரே, அதாவது சுதந்திரன 9-1-55 இதழிலேயே, பொதுத் தேர்தல் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பதாக, அடுத்த ஆண்டிலேயே திடீரென்று ஏற்படவிருக்கிறது என்ற செய்தியை சுதந்திரன் வெளியிட்டது.

இரண்டாவது, இதரபத்திரிகைகள் எல்லாம் நீதியரசர் திரு. நாகலிங்கம் தமது ராஜினமாவை வாபஸ்பெற்று விட்டார், விஷயம் சமரஸமாக தீர்ந்து விட்டது என்று செய்தி வெளியிட்டு, தலையங்கங்களும் எழுதியபோது, சுதந்திரன் மட்டுந்தான் ராஜினமா வாபஸ் பெறப்படவில்லை யென்றும், விஷயம் முற்றி வருகிறதென்றும் தகவல் தந்தது.

இந்த இரண்டு செய்திகளும் இப்போது உண்மையாகி விட்டதை நேயர்கள் அறிவார்களாக.

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி கிறிஸ்தோதய—தைப் பொங்கல் போட்டியில் விசேஷப் பரிசு பெற்ற திரு ச. செல்வத்துரைக்கு சைக்கிள் பரிசளிக்கப்பட்டபோது எடுத்த படம்.

கிறிஸ்தோதய-பொங்கல் போட்டியில் விசேஷப் பரிசு பெற்றவர்

வெற்றிப் பரிசுடன் காட்சி அளிக்கிறார்

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி இல: 9-10ஐயும் இணைத்த கிறிஸ்தோதய—தைப்பொங்கல் விசேஷப் பரிசுத் திட்டத்தில் சேர்ந்தாற்போல் இரண்டாவது பரிசு பெற்ற ஒரே ஒரு நபரான திரு ச. செல்வத்துரையின் படத்தை மகிழ்ச்சியோடு வெளியிடுகிறோம். இவருக்கு இரண்டாவது விசேஷப் பரிசாக வழங்கப்பட்ட பைசிக்கிளுடன் இப்படத்தில் காட்சியளிக்கிறார்.

தெல்லிப்பழை கொல்லங்கட்டியைச் சேர்ந்த திரு செல்வத்துரை இப்பொழுது காத்தான்குடியில் ஒரு ஆசிரியராக பணிபுரிகிறார்.

சுதந்திரன் குறுக்கெழுத்து விசேஷப் பரிசு போட்டியில் தனித்துப் பரிசு பெற்ற இவர் பெருமிதத்துடனும்—மகிழ்ச்சியுடனும் நமக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஒரு பாகத்தை கீழே தருகிறோம்.

கிறிஸ்தோதய—தைப் பொங்கல் குறுக்கெழுத்துப் போட்டி விசேஷப் பரிசுக்காக தாங்கள் பைசிக்கிள் அன்பளிப்பு செய்தமைக்கு என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்ப் பேசும் மக்களின் தனி உரிமைப் பொக்கிஷமாகிய ''சுதந்திரன்'' பல்லாண்டு பயன் தரும் விஷயங்கள் பல தாங்கி செழித்து ஓங்கி வளர வாழ்த்துகிறேன்.

தமிழ் மொழி வளர்ச்சியின்பொருட்டு அருஞ் சொற்களைத் தமிழ்ப் பேசும் மக்கள் மனதில், எளிதில் விளங்க வைக்கும் ஆற்றல்வாய்ந்த. தகைமையதாய சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி பல்லாண்டு தொடர்ந்து வெளிவரவும் எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்
தங்களன்புள்ள
ச. செல்வத்துரை

திரு செல்வத்துரையைப் போல இன்னும் பல நேயர்களும் எமது போட்டிகளில் பரிசுகள் பெற்று பெருமிதமடைய வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

பஞ்சப்படி நிறுத்தப்பட்டால் வேலைநீக்கம் நடைபெறலாம்!

ஸ்தல ஸ்தாபனங்களில் வேலை செய்பவர்கட்குக் கொடுக்கப்படும் பஞ்சப் படியை மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று ஸ்தல ஸ்தாபனங்கள் தீர்மானித்துள்ளன. மத்திய அரசாங்கம் இதை மறுத்தால் வேலை செய்வோர் பலரை வேலை நீக்கம் செய்துவிடலாம் என்று ஸ்தல ஸ்தாபனங்கள் அச்சுறுத்தியுள்ளன. இதனால் ரோடடுத் திருத்தங்கள், புதிய ரோட்டுகள் போடுதல் ஆதியன நிறுத்தப்படலாம்.

கொழும்பு மாநகரசபை ஆண்டுதோறும் பத்து லட்சம் ரூபாவரையில் ஒருகுறிக்கப்பட்ட வேலை செய்பவர் கட்குப் பஞ்சப்படிக்குச் செலவு செய்கிறது. இவற்றுல் வரிப்பணத்தில் பெருந் தொகையான பணம் செலவாகிறது. மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துவதற்காக கொழும்பு மேயர் டாக்டர் என்.எம். பெரேரா ஸ்தல ஸ்தாபனங்களின்மகாநாடு ஒன்றை விரைவில் கூட்டுவாராம்.

மூலம்

சகலவித மூலநோய் சங்காரி

மூல நோய்களுக்கு ஓர் வரப்பிரசாதம். ஒரே போத்தலில் குணம் தெரியும். தவிர, சகலவித வாதங்கள், ஊறல், படை, (Eczema) கிரந்தி, மற மறப்பு, முதலானவைகளுக்கும் அதியற்புத குணமளிக்கும்.

காலங்கடத்தாமல்

உடனே வாங்கிச் சாப்பிடுங்கள் ரிச்லெட்ஸ் பிளட் பியூரியர்

கேட்லாக் இனம்!

வெல்டன் ஏஜென்ஸீஸ்,
170, ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு. போன்: 2885

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதவர்க்கத்தின் மூன்றில் இரண்டு பகுதி

முப்பது வயதடையுமுன்னே மாண்டு விடுகிறது

இந்தியாவில் வருடாவருடம் 5 லட்சம் பேர் காசத்தால் மடிகிறார்கள்

இந்தோனேஷியாவில் 2 கோடி காசநோயாளர்கள்

அமெரிக்க வாலிபரில் மூன்றில் ஒருபகுதியினர் இராணுவ சேவைக்கு லாயக்கற்றோர்

உலக நாடுகளின் சுகாதாரப் பரிசீலனை தரும் திடுக்கிடும் உண்மைகள்

ஏவ்வளவு காலத்திற்கு ஒருவர் வாழ முடியும்? இந்தக் கேள்வியை சில வேளைகளில் எங்களை நாங்களே கேட்டுக்கொள்கிறோம். ஐக்கிய நாடுகள் சபை தந்துள்ள புள்ளி விபரத்தின்படி மனிதவர்க்கத்தில் சராசரி மூன்றில் இரண்டு பகுதி தனது 30வது ஆண்டை அடையுமுன்னே மாண்டுவிடுகிறது.

இந்தியாவில் சராசரி ஜீவியகாலம் 26 ஆண்டுகளே. பிரேஸிலில் 28. இந்த திடுக்கிடும் உண்மைகள் உலக மக்களில் பெரும் பகுதியினர் வாலிபப் பருவத்திற்கு மேல் வாழ்வதில்லை என்பதையே காட்டுகின்றன.

யுத்தத்திற்கு லட்சம்
சுகாதாரத்திற்கு தம்படி

இதற்கான காரணம் என்ன? இதற்கு சில நாடுகளின் வாலிபர்களது சுகாதார சூழ்நிலையைச் சிறிது கவனிப்போம். 1953ல் ஜப்பானிய அரசாங்கம் வெளியிட்ட வருடாந்திர அறிக்கையில் பின்வரும் விபரங்கள் தரப்பட்டுள்ளன. 1951ல் 16க்கும் 19 வயதிற்குமிடையிலுள்ள 100000 பேருக்கு 76 பேர் காசநோயால் இறந்தார்கள். 20-24 வயதுடையவர்களிடை 100000 பேருக்கு 163ஆக இந்த மரண விகிதம் உயர்ந்தது. 25-28 வயதுடையோரிடை இந்த விகிதம் 313ஆக மேலும் உயர்ந்தது. காசநோயால் இறப்போர்களின் சராசரி தொகைவாலிபர்களிடையே அதிகம். யுத்த காலத்தில் நிலைமை இன்னும் மோசமாக இருந்தது. 1940ல் 16-19 வயதுடையோரில் ஒவ்வொரு 100000 பேருக்கும் 461 பேரும், 20-24 வயதுடையோரில் 671 பேரும் 25-29 வயதுடையோரில் 447 பேரும் காசத்தால் இறந்ததாக இதே அறிக்கை கூறுகிறது.

நிலைமை இவ்வளவு படுபயங்கரமாக இருந்தபோதிலும் 1952ல் காசத்தை எதிர்த்து போராடுவதற்கு 93490 லட்சம் யென்களே (ஜப்பானிய நாணயம்) செலவழிக்கப்பட்டன. ஆனால் ''பொலீஸ் படை''க்கும் (ஜப்பானிய தரைப் படை) ''பொதுஜன பாதுகாப்புப் படை'' (கப்பல் படை) ''மராமத்து வேலைகள்'' (யுத்த தளங்கள்) யுத்த முடிவைத் தொடர்ந்துள்ள ஜப்பானில் முகாமடித்துள்ள அமெரிக்க துருப்புகள் இவற்றிற்காக 27301 கோடி 80 லட்சம் யென்கள் செலவழிக்கப்பட்டன. காசத்தை எதிர்த்து போராட செலவழிக்கப்படுவதிலும் இது முப்பது மடங்கு அதிகம்.

5 லட்சம் இந்தியர் காசத்தால் மடிகின்றனர்

1953 மார்ச் 15ந் தேதி வெளியான ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை பின்வருமாறு கூறுகிறது: ''இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் காசத்தில் இறப்பவர்கள் தொகை 5 லட்சம். இதில் பெரும் பகுதியினர் வாலிபர்கள். இந்தியாவில் 25 லட்சம் பேர் தொத்து நோய்களுக்கு இலக்காகியுள்ளார்கள். நாடு பூராவும் இந்த தொத்து நோயாளர்களை தனிப்படுத்தி வைப்பதற்காக ஆஸ்பத்திரிகளில் பத்தாயிரம் இடங்களுக்கு மேல் இல்லை''

இந்தோனேஷியாவில் சுகாதார மந்திரி இலாகா வெளியிட்டுள்ள தகவல்களின்படி பார்த்தால் நாட்டில் 25 சத வீதத்தினர் அதாவது மொத்தம் 2 கோடி மக்கள் காசத்தால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு லட்சம் பேருக்கும் 189 பேர் காசத்தால் இறக்கிறார்கள்.

நைகீரியாவில், மொத்த மரண விகிதத்தில் 9லிருந்து 10 சத வீதம் காசத்தாலேயே விளைகிறது என்று டாக்டர்கள் கணித்திருக்கிறார்கள்.

1951ல் மலாயா அரசாங்கம் வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு கூறுகிறது: ''மலாயா குழந்தைகளிடையே காணப்படும் பெருவாரி நோய்களுக்கு பற்றுக் குறைவு உணவும், வயிற்றுப் புழுக்களும், காசமுமே காரணமாயுள்ளது''

கிழக்கு ஆசிய நாடுகளில் பிரிட்டனுக்குள்ள அடிமை-சார்பு நாடுகளின் 1945-49 ஆண்டுகளின் நிலை பற்றி பிரிட்டன் வெளியிட்ட ஒரு அறிக்கையில், பற்றுக் குறைவு உணவாலும், நெருக்கடியான குடியிருப்பாலும் மலேரியாவிலும் பார்க்க காச நோய் பயங்கரமான அளவுக்கு வளர்ந்துள்ளது என்று கூறுகிறது. சிங்கப்பூரில் ஒவ்வொரு 9பேருக்கும் ஒருவர் காச நோயால் வருந்துகிறார்.

ஏனைய வியாதிகளுக்கும் இரையாகுபவர்களின் எண்ணிக்கை நெஞ்சை வெடிக்க வைக்குமளவுக்குத்தான் உள்ளது. 1951ல் வெளியிடப்பட்ட கலோனியல் நாடுகளின் பொருளாதார பரிசீலனை 3ம் வல்யூம், கோல்ட்கோஸ்ட் பகுதிகளிலும், மக்களிடையே பற்றுக் குறைவு உணவு நிலை தென்படும் எல்லாக் கிராமங்களிலும் மலேரியா பயங்கரமான அளவில் உள்ளது'' என்று கூறுகிறது.

உகண்டாவில் மலேரியா அதிகப்படியாக ஒங்கியுள்ளதென்றும், 1950ல் மலேரியாவா ஏற்படும் மரண விகிதம் அதிகரித்திருப்பதாகவும் உத்தியோகபூர்வமான அறிக்கைகள் கூறுகின்றன. 50 லட்சம் மக்கள்கொண்ட இந்தப் பகுதியில் குறைந்த பட்சம் ஒரு லட்சம் பேர் குஷ்டரோகிகளாக உள்ளார்கள் என்று மேலும் இந்த அறிக்கை கூறுகிறது. சுகாதார இலாகா வெளியிட்டுள்ள விபரங்களிலிருந்து றெடேஷியாவில் ஒவ்வொரு பத்தரை லட்சத்திற்கும் குஷ்டரோகிகள் எண்ணிக்கை 22660 ஆக அதிகரித்திருக்கிறது என்று தெரிகிறது. 1950ல் வெளியான உத்தியோகபூர்வமான செய்தி நயிஸ்லந்தில் 30 ஆயிரம் பேருக்கு குஷ்டம் உண்டு என்று கூறுகிறது.

குழந்தைகள் சாவு

அதன்ஸ் பத்திரிகைகளில் 1953 ஏப்ரல் மாதம் எழுதிய அதன்ஸ் சர்வகலாசாலைப் பேராசிரியர் திரு ஸ்பியோடிலொஸ், ''கிரீஸின் வட பகுதிகளில் சுகாதார பரிசீலனை நடத்தியதில் 36804 குழந்தைகளில் 14632 குழந்தைகள் நுரை ஈரல் வியாதிகளால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள்'' என்று கூறுகிறார்.

பிரிட்டிஷ் கயனாவில் கரும்புத் தொழில் சம்பந்தமாக விசாரணை நடத்திய கமிஷன் ''பரிசீலனை செய்த குழந்தைகளில் 90 சத வீதத்தினர் பல் வியாதிகளால் அவஸ்தைப்படுகிறார்கள், இதற்கு பெரிதும் பற்றுக்குறைவு உணவே'' காரணம் என்று கூறியுள்ளது.

குழந்தைகளிடையே மரண விகிதமும் பயங்கரமான அளவுக்கு அதிகரித்துள்ளது.

இந்தோனேஷியாவில், 1952 பெப்ரவரியில் பேராசிரியர் ஜுட்ஜொனோ வெளியிட்ட தகவலிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு 1000 குழந்தைகளுக்கும் 115லிருந்து 300 குழந்தைகள் உடனேயே இறக்கின்றன என்று தெரிகிறது. பிரிட்டிஷ் ரெடேஷ்யாவில் சிசு மரணத்தின் விகிதம் ஒவ்வொரு 1000க்கும் 106. (1950 வருடாந்திர அறிக்கை) நிகேரியாவில் 1000க்கு 110. கிரீஸில் 1000க்கு 389.

டாக்டர்கள் தாதியர் தட்டுப்பாடு

உலக நாடுகள் சிலவற்றில் மக்களுக்கு அளிக்கப்படும் சுகாதார பாதுகாப்புப்பற்றி சில விபரங்களை இதோ பாருங்கள். நிகிரியாவில் ஒவ்வொரு 113000 பேருக்கு ஒரு டாக்டரே உண்டு. ஒவ்வொரு 3700 பேருக்கு ஆஸ்பத்திரிகளில் ஒரு படுக்கையே உண்டு. ஒவ்வொரு ஆஸ்பத்திரிகளிலும் பல்லாயிரக்கணக்கானவர்களின் பெயர்கள் இடம் கோருபவர்கள் நிரலில் இருக்கின்றன.

பர்மாவில், 1952ல் அந்த நாட்டிற்கு விஜயம் செய்த ஐக்கிய தேசிய நாடுகள் தூதுகோஷ்டியின் அறிக்கைப்படி 16980 பேர்களுக்கு ஒரு டாக்டர்தான் உண்டு. 16130 பேர்களுக்கு ஒரு தாதிதான் உண்டு. இராணுவத்திற்கும் 'பாதுகாப்பிற்கும்' தேசிய வரவு செலவு திட்டத்தில் 67 சத வீதம் செலவு செய்யப்படும் போது சுகாதாரத்திற்காக 4 சத வீதமே ஒதுக்கப்படுகிறது.

அமெரிக்காவில் வாலிபர் பலயீனம்

அமெரிக்காவில் 45 ஆயிரம் டாக்டர்களுக்கு பொதுவாகத் தேவை இருக்கிறது. அமெரிக்காவின் நாட்டுப் புறங்களில் ஆயிரமாயிரம் நோயாளிகள் ஆஸ்பத்திரிகளில் இடமில்லாது அவஸ்தைப்படுகிறார்கள். இவர்களில் பலர், நோயின் ஆரம்பத்தில் வைத்திய உதவி கிடையாததால் நிரந்தர நோயாளர் ஆகிறார்கள்.

அமெரிக்காவில் நீகுரோமக்களின் சராசரி ஜீவியகாலம்

15-ம் பக்கம் பார்க்க)

அழகான புத்தக வேலைகள்

கதை - கட்டுரை நூல்கள், பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள், சஞ்சிகைகள் அச்சிட விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரியில் தயார் செய்யப்பட்ட அழகான புதிய 10 பொயிண்ட் 12 பொயிண்ட் எழுத்துக்களைக் கொண்டு புத்தகங்கள் அச்சிட விரும்புவோர் சுதந்திரன் ஜொப் டிபார்ட்மெண்டைக் கலந்தாலோசிக்கவும். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும் புத்தக வேலைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறைந்த கட்டணத்தில், சிறந்த வேலைப்பாடுகளுடன், குறிப்பிட்ட நேரத்தில் உங்கள் புத்தகங்களை அச்சேற்றித்தரவல்ல அச்சகம் சுதந்திரன் பிரஸ் ஒன்றுதான்.

இன்றே உங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள்.

மானேஜர்,
சுதந்திரன் பிரஸ்

194 A, தட்டா தெரு,
கொழும்பு-12.

அக்கினித் தேவனின் அருள் பெற்ற அமெரிக்கா

நாடுபூராவும் இலவசத் தீக்குச்சிப் புத்தகங்கள் வினியோகம்

அமெரிக்க கப்பனிகளின் புதுரக விளம்பர தந்திரங்கள்

அமெரிக்கர்கள் அக்கினி தேவனின் அருளை அபரிமிதமாகப் பெற்றவர்கள். ஏனென்றால் அங்கு தீக்குச்சிகளுக்கு விலையே கிடையாது. இலவசமாகவே எல்லோருக்கும் தீக்குச்சிகள் கிடைக்கின்றன.

ஒரு பாக்கட் 'சிகரெட்' வாங்கினால் அத்துடன் இருபது தீக்குச்சிகள் கொண்ட ஒரு சிறிய தீக்குச்சி புத்தகம் இலவசமாகக் கிடைக்கிறது. உங்கள் துணிகளைச் சலவை செய்யும் லாண்டிரியிலிருந்து உங்கள் 'கோட்டு' வரும் போது அதன் பையில் ஒரு தீக்குச்சிப புத்தகம் வைக்கப்பட்டிருக்கும். நீங்கள் வாடிக்கையாய் மளிகை சாமான் வாங்கும் பல சரக்குக் கடையிலிருந்து சாமான்கள் வாங்கும் போதெல்லாம் தீக்குச்சி புத்தகம் இலவசமாகக் கிடைத்துவிடுகிறது. ஹோட்டல்களில் தேநீரோ அல்லது ஏதாவது குளிர்ந்த பானமோ அருந்தப் போனால் நீங்கள் அமர்ந்திருக்கும் மேஜைமீது இருக்கும் தீக்குச்சிப் புத்தகங்களிலிருந்து உங்களுக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொள்ளலாம். நாடகம் பார்க்கச் செல்வோர்களுக்கு நாடக நிர்வாகிகள் தீக்குச்சிப் புத்தகங்களை இலவசமாக விநியோகஞ் செய்கின்றனர்.

அமெரிக்காலில் மற்ற தேசங்களில் உள்ளது போல் தீப்பெட்டியே கிடையாது. தீக்குச்சிகளை கெட்டியான ஒரு அட்டையின் கீழ் பாகத்தில் ஒட்டி மேல் பாகத்தை அதன்மீது புத்தகம் போல் மூடி வைக்கப்பட்டிருக்கும். மூடும் பாகத்தின் வெளிப் புறத்தில் தீக்குச்சியை கிழிப்பதற்கு தீப்பெட்டியிலுள்ளது போன்ற மருந்துப் பசை பூசப்பட்டிருக்கும்.

தீக்குச்சிப் புத்தகங்கள் பத்திரிகைகளைப்போல் ஏராளமாக விளம்பரக் கருவிகளாக உபயோகப்படுகின்றன. எல்லா வியாபாரிகளும் தங்கள் பத்திரிகை விளம்பரங்களுக்காக ஒரு தொகையைச் செலவிடுவதுபோல தீக்குச்சிப்புத்தக விளம்பரங்களுக்கும் செலவிடுகிறார்கள். தீக்குச்சிப் புத்தக உற்பத்தியாளர்கள் விளம்பரஞ் செய்யும் வியாபாரிகளுக்கு விநியோகிப்பதற்காகவே தான் இந்த தீக்குச்சிப் புத்தகங்களை உற்பத்தி செய்கிறார்கள். இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் அமெரிக்கக் கம்பெனிகள் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிட்டுத் தீக்குச்சிப் புத்தகங்களில் விளம்பரம் செய்து, இவற்றை பொது மக்களுக்கு இலவசமாக விநியோகஞ் செய்கின்றன. தீக்குச்சி ஒரு விலைக்க முடியாத பொருள் அல்லவா? ஏழையானாலும் சரி, பணக்காரனானாலும் சரி, தீக்குச்சியை விட்டெறிவதில்லையே! தீக்குச்சிப் புத்தகத்தை யெடுத்து ஒரு குச்சியை கிழிக்கும் போது விளம்பரஞ் செய்யும் வியாபாரியின் பெயரைப் பார்க்கிறான். அந்த வியாபாரி உற்பத்தி செய்து விற்கும் பொருளின் பெயரைத் தெரிந்து கொள்கிறான். இல்லாவிடில் எந்த நாடகத்தை, எந்தக் கம்பெனியார் எந்த நகரில், எந்த தியேட்டரில் நடத்துகின்றனர் என்பதை அறிகிறான்.

—சிவாஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. மாணிக்கம், வடலியடைப்பு

கே: குயுக்தியாரே உமக்கு எந்தப் பூவின் மணம் பிடிக்கும்?

ப: தேங்காய்ப் பூவின் மணம்!

ஃ

க. இராசலிங்கம், ஏழாலை மேற்கு

கே: அழகான பெண்ணுக்கு ஆபத்து உண்டா?

ப: அழகான பெண்ணினால் ஆபத்து உண்டு.

ஃ

நா. செகராசசிங்கம், காரைநகர்

கே: நீங்கள் ஜாதகம் பார்த்துத்தான் கலியாணம் பண்ணவீர்களாமே, உண்மையா?

ப: உண்மை. என்னுடைய ஜாதகத்தையும் மனைவியினுடைய ஜாதகத்தையும் பார்க்கவில்லை. என் அம்மாவினுடைய ஜாதகத்தையும் என் மனைவியினுடைய ஜாதகத்தையும்தான் பொருத்தம் பார்த்தேன்!

கே: என்ன குயுக்தியாரே! ரொம்ப ஆயாசமாய் இருக்கிறீர்போலத் தெரிகிறது. கொஞ்சம் பாயாசம் விடட்டுமா?

ப: தம்பி, என்ன பரியாசம் விடுறீர்போல் தெரியுது!

ஃ

கே. பரமசிவம், துலாங்கந்தை

கே: உண்மை வீரன் யார்?

ப: பிறர் உயிரைப் போக்கி ஒரு கொள்கையை நிலைநாட்டுபவனைவிடத் தன்னுயிரைப் போக்கி ஒரு கொள்கையை ஸ்தாபிப்பவன் உண்மை வீரன்.

ஃ

எம். ஐ. எம். சாஹீட், மட்டக்களப்பு

கே: நீங்கள் ஒரு பெண்ணுயிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?

ப: யாராவது ஒரு நல்லவனுகப் பார்த்து கட்டிக் கொண்டு என் தலைவிதியை அவன் கையில் ஒப்படைத்து விட்டு நிம்மதியாக வீட்டில் உட்கார்ந்திருப்பேன்.

கே: பூமி சுற்றுவிட்டால் என்ன நடக்கும்?

ப: பாதி உலகத்தில் குடைகளும், பாதி உலகத்தில் டோர்ச் லைட்களும் அதிகமாக விற்பனையாகும்.

ஃ

எஸ். ஜோசப் ஹாலிஎல்ல

கே: விஸ்வாமித்திரர் இக்காலத்தில் தோன்றினால் என்ன நடக்கும்?

ப: முடிமயிர் வியாபாரிகள் அவரை விளம்பரத்திற்குப் பயன்படுத்தியிருப்பார்கள்.

ஃ

அ. இராசகுலசிங்கம், கிளிவெட்டி

கே: மனிதனின்வாழ்க்கை முன்னேற்றத்துக்கு முதற்படி என்ன? தாழ்வுக்குமுதற்படி என்ன?

ப: முன்னேற்றத்துக்கு முதற்படி தன்னம்பிக்கை. தாழ்வுக்கு முதற்படி அடக்கமின்மை.

ஃ

செல்வி மு. காந்தா, யாழ்ப்பாணம்

கே: காதல் என்றால் என்ன?

ப: கலியாணம் ஆகும்வரை கவர்ச்சிகரமாக மலர்ந்து காணப்படும் ஒரு மலர்.

கே: ஆசை என்பது என்ன?

ப: எட்ட இருக்கும் பொருள் கிட்டிவரும்வரை மனித உள்ளத்தைப் பற்றிக்கொள்ளும் ஒருவித ஆவேசம்.

ம. மாரிமுத்து, தலவாக்கொல்லை

கே: உங்களுடைய அன்னை எத்தனை வயது வரைக்கும் உங்களுக்குப் பாலுண்ணக் கொடுத்தாள்?

ப: அவள் சாகும்வரை; நான் வாழும்வரை.

ஃ

ஆர். டபிள்யு. செல்லத்துரை, பூண்டுலோயா

கே: குயுக்தியாரே, தலைக்கு நீர் என்ன எண்ணெய் வைக்கிறீர். நானும் அதை வைக்கலாமா?

ப: நான் வைப்பது மண்ணெண்ணை. வெறுமனே வைக்கிறேன். நீரும் தாராளமாக வைக்கலாம். ஆனால் ஒரு தீக்குச்சியையும் கிழித்துக்கூட வையும்.

பரிசு ரூபா 3

யாரும் கேள்விகள் அனுப்பலாம் ஆனால் கேள்விகள் போஸ்ட்கார்ட்டில் மட்டுமே எழுதப் படவேண்டும். தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ஹாஸ்யமுமான பதில் கிடைக்கக் கூடிய சிறந்த கேள்வியை அனுப்புபவர்களுக்கு ரூ. 3-00 பரிசு வழங்கப்படும்.

ஆ. அசனார், காத்தான்குடி

கே: விதவைக்கும் விலைமாதிற்கும் என்ன ஒற்றுமை?

ப: இருவருக்கும் இராக்காலம் உபத்திரவமானது.

ஃ

★ வி. வேலாயுதம் செட்டியார், நீர்கொழும்பு

கே: அதோ கதி யென்பது எப்படிப்பட்டது?

ப: ஒரு உலக யுத்தம் ஏற்பட்டு அதில் அமெரிக்காவும் இங்கிலாந்தும் ஈடுபட்டு அணுக்குண்டை எதிரிகள் மீது வர்ஷிக்கத் தலைப்பட்டால், பிரிட்டனோடு இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் நமது "சுதந்திர" இலங்கைக்கு ஏற்படக்கூடிய கதிக்குத் தான் அதோ கதி என்று பெயர்.

ஃ

ஐ. நாகராசா, எகலியகொட

கே: உலக சமாதானத்திற்காகத் தங்களைத் தாங்களே தத்தம் செய்யத் தயாராய் இருக்கும் மூன்று பேர்களைக் குறிப்பிடுங்கள்.

ப: திருவாளர்கள் அணுக்குணடு, லைஹட்ரஜன்குணடு, கோபால்ட்குண்டு!

ஃ

வ. தவலிங்கம், கோப்பாய்

கே: செனட்சபை என்றால் என்ன?

ப: முப்பது ரப்பர் ஸ்டாம்புகளைக்கொண்டது ஒரு செனட்சபை.

ஃ

ம. த. பரமசாமி, நீர்வேலி

கே: என் அறிவைப் பெருக்க நான் ஆசைப்படுகிறேன். ஏற்ற நண்பர்களைச் சிபார்சு செய்வீர்களா?

ப: புத்தகங்கள்.

ஃ

வி. செல்வரத்தினம், மாதகல்

கே: உமது தலையை யாழ்ப்பாணம் பனம் பழத்திற்கு ஒப்பிட்டுள்ளீர்களே, என்ன [illegible]

ப: ரொம்பச் சரி. யாழ்ப்பாணம் பனம் பழம் சூப்பச் சூப்பச் சுவை குன்றுதல்லவா? அதுபோலவே குயுக்தியாரின் தலையும் சுவைக்கச் சுவைக்க இனிமை குன்றுது.

ஃ

மீ. சினிமுகம்மது காத்தான்குடி

கே: உலகத்தில் நல்ல பேரின்பமெது?

ப: 'சுத்தானந்தர் எழுதிய 'பேரின்பம்' என்ற கவிதைகள்.

ஃ

வி. எம். கணபதிப்பிள்ளை ஏறுவூர்

கே: இக்காலத்தில் இழிகுலத்தோர் என்று யாரைச் சொல்லலாம்?

ப: இக்காலத்தில் மட்டுமென்ன? எக்காலத்திலும் இட்டார் பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர்தான்.

ஃ

கே. எஸ். நாகமணி, செங்கலடி

கே: நான் ஒரு பெண்ணை விரும்புகிறேன். என்தாயார் இன்னொரு பெண்ணை விரும்புகிறாள். இதில் எவளை விவாகம் செய்வது?

ப: விவாகம் செய்யப் போவது நீரா உம் தாயாரா?

ஃ

எஸ். தம்பித்துரை, சுன்னாகம்

கே: இரண்டு இளம் உள்ளங்கள் ஒன்றோடொன்று மோதினால் என்ன நேரிடும்?

ப: அவர்களைப் பொறுத்தவரையில் ஒரு பூகம்பம் ஏற்படும்.

கே: அரசியல்வாதிகள் அதிகம் எதிர்பார்ப்பது எதை?

ப: விளம்பரத்தை

கே: அதிர்ஷ்டதேவதைக்கு கண் தெரியாது என்பது உண்மையா?

ப: உண்மைதான். இல்லாவிட்டால் சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டியின் முதல் பரிசை உம் தலையில் தூக்கிப் போடமாட்டாளா?

கே: தென்றல் புயலாக மாறுவது எப்போது?

ப: காதல் போதை ஊட்டி மயக்கிய காதலி மாற்றானுடன் கைகோத்துக்கொண்டு போவதைக் காணும்போது.

கே: காதலுக்கும் வானவில்லுக்கும் தொடர்பு என்ன?

ப: வெண்மை அழகிய ஏழு வண்ணங்களாக வானவில்லில் தோன்றி மனோமயக்கத்தைத் தருவது போல் வெறுமை பல இனிமைகளாக காதலிலும் தோன்றி மயக்கத்தைத் தருகிறது.

★ இவ்வாரம் ரூபா 3-00 பரிசு பெற்றவர்

தாமரையின் ஊடல்

கள்ளால் நிறைத்தவெள்ளிக் கிண்ணம்—வெள்ளை
கமலத்தாள் நின்றிருந்த வண்ணம்!
அள்ளிப் பருகுமனத் திண்ணம்— அங்கு
ஆசைவண்டு ஓடிவந்த எண்ணம்

"இரவெல்லாம் முல்லையுடன் வாசம் — காலை
இந்நேரம் மட்டும் என்மேல் நேசம்!
கரவெல்லாம் நான்அறிவேன் மோசம்—ஆண்கள்
காதலென்று சொல்வதெலாம் வேஷம்!"

என்றேதன் கோபமெலாம் கூட்டி — கமலம்
ஏசுகையில் வண்டு பல்லைக் காட்டி,
"ஒன்றும் அறிந்திடேன் சீ மாட்டி!—வீணாய்
உனக்கேனே முல்லையுடன் போட்டி?"

வண்டுசொன்ன வார்த்தையினைக் கேட்டு — அவள்
வாயில் வரும் துப்பாக்கி வேட்டு!
"கண்டுவிடில் சினேகம் என்ற சாட்டு — கண்
கவித்துவிடில் பல்லழகி கூட்டு!"

"கட்டழகி நீ மதுவைச் சொட்ட — கணிகை
கண்மயலை நாடுவனே கிட்ட?
விட்டுவிடு கோபத்தினை எட்ட!" — என்று
வீணைமீட்டி வண்டருகில் ஒட்ட!

"பாட்டால் மயக்கினனே நாளும் — என்
பருவம் சுவைத்ததினிப் போதும்!
மாட்டேன் மறதியில்லைக் கேளும்; — அந்த
மாதரசி மாருடன்போய் வாழும்!"

"உன்னைப் பிரிந்துஎங்கு போவேன்? — இந்த
உலகத்தை விட்டு இன்றே சாவேன்!
என்னை உனக்கின்றிக் காவேன் — எந்த
எழிலரசி மேலுமினித் தாவேன்!"

வண்டின் வருத்தங்கண்ட வஞ்சி — தன்
வண்ண இதழ்திறந்து கொஞ்சி
கண்டின் இசைபாடக் கெஞ்சி — நின்றுள்
கானம் பிறக்கும்யாழை மிஞ்சி!

"நீலாவணன்"

கல்யாணத்திற்காக 600 கோடி தங்க நகைகள்

இந்தியாவில் வருடா வருடம் செலவாகிறது

பாரதப் பெண்களின் நகைப் பித்து

இந்தியாவில் வருஷா வருஷம் கல்யாணங்களுக்காக 600 கோடி ரூபாய்க்கு தங்க நகைகள் செய்யப்படுகின்றன. கல்யாணப் பெண்களுக்கு மட்டும் வருஷா வரும் 20 கோடி ரூபாய் சவரன்களுக்கு (பவுன்கள்) நகைகள் செய்து போடப்படுகின்றன.

இந்தியாவில் வருஷந்தோறும் சுமார் 20 லட்சம் கல்யாணங்கள் நடக்கின்றன. மணப் பெண்ணுக்கு 100 ரூபாய் நகை வீதம் போடப்படுவதாக கணக்கு வைத்தாலும் 20 கோடி ரூபாய் நகை செய்யப்படுகிறது.

இந்தியப் பெண்கள் கல்யாண வயது அடைவதற்குள் வருஷா வருஷம் 125 கோடி ரூபாய் மதிப்புள்ள புதிய தங்க நகைகளைச் செய்துபோட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

நகைப் பைத்தியத்தின் விளைவுகள்

நம் நாட்டு பெண்களின் நகைப் பைத்தியத்தால் ஏற்படும் செலவு கணக்கை அகில இந்திய பவுன் விற்பனையாளர் மகாநாட்டில் பம்பாய் ஷராப் வியாபாரிகள் சங்க தலைவர் ஷவால் பிரசாத்திவாரி வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது :—

கல்யாணப் பெண்களின் நகை, கல்யாணத்துக்குப் போகும் பெண்கள் புதிதாக செய்து போட்டுக் கொள்ளும் நகைகளுக்காக 150 கோடி ரூபாய் மதிப்புள்ள பவுன்கள் தேவைப்படுகின்றன. ஆசாரிக்கு கூலி, நகை வியாபாரிகளின் லாபம் முதலியவற்றை சேர்த்து 600 கோடி ரூபாய் ஆகிறது.

நகை செய்வதையே பிழைப்பாக கொண்டு இந்தியா முழுவதும் 2 லட்சம் ஆசாரிகள் (பொற்கொல்லர்கள்) பிழைப்பு நடத்துகிறார்கள். இந்தியாவில் (பெண்களின் நகைப் பைத்தியத்தால்) 600 கோடி ரூபாய்க்கு நகை வியாபாரம் நடக்கிறது. ஆனால் பருத்தி, பஞ்சு வியாபாரம் 100 கோடி ரூபாய்க்குத்தான் நடக்கிறது. பருப்பு, பயறு வியாபாரம் 300 கோடி ரூபாய்க்குத் தான் நடக்கிறது என்று ஜவால் பிரசாத்திவாரி பெருமையாக கூறினார்.

பரமஹம்ச தேவரது 120-வது ஆண்டு விழா

மட்டக்களப்பு இராமகிருஷ்ண சங்கத்துச் சிவானந்த வித்தியாலயத்தில் இவ்விழா சென்ற 24-2-55ல் உயர் திரு. சுவாமி நடராஜானந்தாஜி அவர்களின் தலைமையின் கீழ் கொண்டாடப்பட்டது காலையில் பஜனையும், பூசையும், நடந்தேறின.

மாலை 2-30 மணி தொடக்கம் நடந்த பொது விழாவில் புலவர் மணி. ஏ. பெரியதம்பிப்பிள்ளை, கே. கணபதிப்பிள்ளை ஆசிரியர் (வித்தியாலய உப அதிபர்) செல்வன் வீ. கனேசமூர்த்தி ஆதியோர் பேசினர். சுவாமிகள் தலைமையுரையில் இராமகிருஷ்ணரது பொது நெறிகளையும், புலவர் மணியவர்கள் இளைஞரைப் பரமஹம்சர் கவர்ந்து வழிநடத்தியதையும் செல்வன். வீ. கனேசமூர்த்தி கதாதரரது இளமைக்கதைகளை நன்கு கூறினர்.

மாணவர்கள் ஞா. மகாதேவா, ச. அருளையா, ஏ. விவேகானந்தம் ஆதியோர் இசைப் பாடல்களை நிகழ்த்தினர். செல்வன் வீ. மகாலிங்க சிவம் நன்றி கூறினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கடிதம்:

மட்டக்களப்பு வைத்தியசாலை நிர்வாகம் பற்றி மக்களிடை அதிருப்தி

நகரசுத்தித் தொழிலாளி ஒருவர் இறந்ததற்கு உதாசீனம் காரணமா?

மக்கள் பிணியைத் தீர்க்க ஆட்சியாளர் ஆவன செய்வார்களா?

மட்டக்களப்பு வைத்திய சாலை பற்றி மக்கள் எழுப்பும் கண்டனக் குரல் இன்னும் அரசாங்கத்தின் காதில் நுழைந்ததாகத் தெரியவில்லை. நோயாளர்களுக்குப் போதிய படுக்கை வசதியில்லை, போதிய வைத்திய நிபுணர்களில்லை, தேவையான கருவிகளில்லை என்பன போன்ற குறைகளைப்போக்க ஓரளவு அக்கறைகாட்ட முற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. மட்டக்களப்பு வைத்தியசாலையின் சீர்கேட்டிற்கு ஆளுங்கட்சியின்—மத்திய அரசாங்கத்தின் அசமந்தத்தனம் மட்டும் காரணமாகாது. வைத்தியசாலை அதிகாரிகளின் நிருவாகக் கேடும் ஒரு காரணமாகும் என்று சொல்வதில் தவறில்லை.

மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலையிலிருந்து, இன்று வைத்திய அதிகாரிகள் திடீரென அரசினர் சேவையைத் துறந்தார்களோ அன்றே வைத்திய சாலையின் நிருவாகம் சீர்கேடுற்றது என்று மக்கள் உணரத் தலைப்பட்டனர். நிருவாகம் மோசமடைந்து வருகிறது என்பதை நிரூபிக்கக் கூடிய சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வது இயல்பாகி விட்டது. மட்டக்களப்புக்கு வடக்கே சுமார் 8 மைல் தொலைவிலுள்ள ஒரு அரசாங்க வைத்தியசாலையிலிருந்து சமீபத்தில் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒரு நோயாளி மீண்டும் அதே வைத்தியசாலையில் சேர்க்கா ரணமென்ன? கடுமையான ஒரு நோயாளி சிறிய வைத்தியசாலையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட ஒரு தொழிலாளி-எந்தச் சிறு வைத்திய சாலையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டானோ அந்தச் சிறிய வைத்தியசாலையிலே மீண்டும் சேர்ந்து மரண மடைந்தான் என்றால் அதன் பொருள் என்ன? பெரிய வைத்தியசாலை அதிகாரிகள் சரியாகக் கருமம் ஆற்றவில்லை என்பதைவிட வேறு காரணமும் இருக்குமென்று தோன்றவில்லை. குறித்த நோயாளி ஒரு நகரசுத்தித் தொழிலாளி என்றும் பெரிய வைத்தியசாலையில் 24மணித்தியாலங்கூட நோயாளியால் இருக்க முடியவில்லை என்றும், நோயாளியின் மனதில் கவலையூட்டக்கூடிய விதமாக வைத்தியசாலை அதிகாரிகளும், ஒரு சில தாதிகளும் நடந்து கொண்டனர் என்றும் பேசிக்கொள்ளப்படுகிறது. நோயாளிகளுக்கு ஆறுதல் கூறி இன்முகங் காட்டி நோய் தீர கருமம் ஆற்ற வேண்டிய தாதிகளும், வைத்தியர்களும் பொறுப்பற்ற தன்மையுடன் நடந்துகொள்வார்களாயின் பிணியாளர் துயர் தீருவதெங்ஙனம்? மட்டக்களப்பிலே உள்ள ஒரு பிரபல நாட்டு வைத்தியர் ஒருவர் ஒரு இடத்தில் நோயாளர் மத்தியிலும் கூறினார். "இந்த உலகத்திலே நீங்கள்மட்டும்நோயாளிகள் அல்ல. இன்னும் நோயாளிகள்இருக்கிறார்கள். உலகத்தில் உள்ளவர்களில் பெரும்பாலார் நோயாளர்களே" என்று. ஆம். உலகத்தில் உள்ளவர்களில் பெரும் பாலார் ஏதோ ஒரு வகையில் நோயாளிகள் என்பதை எவரும் மறுக்க முடியாது. நோயாளிகளுக்கு வைத்தியர்கள் கொடுக்க வேண்டிய முதல் மருந்து கவலை தீரும் மருந்தாக இருக்கவேண்டும். ஏழூர் நகரசுத்தித் தொழிலாளியான ஒரு நோயாளியின் விஷயமாக மட்டக்களப்பு வைத்தியசாலை அதிகாரிகள் பொறுப்பற்ற தன்மையுடன் நடந்துகொண்டது உண்மைபா? வைத்திய சாலையில் கடமை பார்க்கும் ஒரு சில தாதிகள் நோயாளிக்கு கவலை அதிகரிக்கக் கூடிய முறையில் நடந்து கொண்டது மெய்யா? இதையிட்டு வைத்திய அதிகாரிகள் தீர ஆராய்ந்து பார்க்க வேண்டும். பொலீஸ் விசாரணையால் மட்டும் உண்மை புலப்படாது. மென்மேலும் சீர்கேடுகளும், நிருவாகப் பிழைகளும் அதிகரித்து வருகிறது என்ற எண்ணத்திற்கு இடமளியாது மக்கள் மத்தியிலே நல்லெண்ணத்தைநிலை நாட்ட மேலதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

—"தயாளன்"

வேல் தைலம்

இது ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய சமய சஞ்சீவி. தலைவலி, ஜலதோஷம், வாதம், வாய்வு, பிடிப்பு, வீக்கம், ரத்தக் கட்டு, சளுக்கு முதலிய வியாதிகளை ஆச்சரியமாய்க் குணமாக்கும்.

உபயோக விபரம் மருந்துடன் இருக்கிறது.

புட்டி 1-க்கு ரூ. 1-25 பால் செலவு வேறு.

இலங்கை ஏஜண்டுகள்:

எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,

34, செட்டியார் தெரு, கொழும்பு-11.

பிரதினமும் வியாதியால் வருந்துவோர்களே!



43 வருட அனுபவம்வாய்ந்த, நான்கு தலைமுறை பரம்பரை வைத்தியர், ஆயுர்வேத டாக்டர் A. S. டேனியல் அவர்களை நேரில் காணுங்கள்.

(தந்த வியாதிக்கு பாவிக்கப்பட்டு புகழ்பெற்றுள்ளது)

1. வச்சிர தந்த கல்னர் பல்பொடி விலை சதம் 75.

(எந்தவிதமான பல்வலியையும் ஒரு வேளையில் சுகம் கொடுப்பது)

2. பல் வலி சொட்டு மருந்து விலை சதம் 75.

பாலர்களுக்கு வரும் மாந்தம், கரப்பநீர், பிரளிகனம், தெற்கத்தி கணை, வலிப்பு, செவ்வாப்பு, காய்ச்சல் இவைகளை சுகப்படுத்தி பாலர்களை போஷிக்க சிறந்த குளிகை இவை.

மகா கோரோசனை குளிகை (100) ரூ. 4-00
குளிகை (50) ரூ. 2-00
குளிகை (25) ரூ. 1-00

உங்கள் சரீர சுகத்தை பாழ்படுத்தும் எந்த விதமான நாள்பட்ட வியாதிகளிருந்தாலும், பல மருந்துகள் பாவித்தும், ஊசிகள் போட்டும் சுகமின்றி வருந்துவீர்களானால், நேரில் வியாதி தெரிந்து தக்க மருந்துகள் பெற்று சுகமடைய இன்றே எம்மை நேரில் கண்டு பரீட்சித்து தகுந்த மருந்துகளை உத்தரவாதத்துடன் பெறுங்கள்.

விபரங்களுக்கு:-

மலையாள மெடிக்கல் ஹால்,

179, செட்டியார் தெரு, கொழும்பு.

S. R. A. மெடிக்கல் ஹால் மருந்துகள் மலையாள மெடிக்கல் ஹாலில் விற்கப்படுகிறது.

கூடச்சூட

★ பம்பாயில் அம்ரெலி ஜில்லாவிலுள்ள சாமதியலா கிராமவாசிகள், பட்டப்பகலில் லாந்தர் விளக்குகளைக் கையில் ஏந்திக்கொண்டு பம்பாய் நிதி மந்திரி டாக்டர் ஜீவராஜ் மேத்தா முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள் "இப்படி ஏன் செய்கிறீர்கள்" என்று நிதி மந்திரி கேட்டதற்கு "ராஜ்யத்தில் இருள் சூழ்ந்திருக்கிறது, ஒளி, தென்படவில்லை. இந்த விளக்குகளை வைத்துக் கொண்டு நியாயம் எங்கே என்று தேடிக்கொண்டிருக்கிறோம்" என்று அவர்கள் பதில் சொன்னார்களாம்.

—ஊர்வம்பு-விகடன் 6-2-55

குருடன் லாந்தர் சகிதம் வெளியே புறப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது கண் தெரிந்தவர் குருடனின் இந்தச் செயலைக் கண்டு சிரித்தனராம். அதற்கு குருடன் 'கண் தெரிந்த நீங்கள் என்மேல் வந்து விழாதவண்ணம் விலகிச் செல்லவே லாந்தர் வெளிச்சத்துடன் செல்லுகிறேன் என்று சொன்னதும் வெட்கித்து தலைகுனிந்து சென்றனராம். இதையே ஆதாரமாகக் கொண்டு இவர்களும் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

★ குரங்கு ஏற்றுமதி செய்வதைத் தடை செய்யவேண்டுமென்று இந்திய அரசாங்கத்தைப் பிரிட்டிஷ் மிருக பாதுகாப்புச் சங்கத்தின் தூதுகோஷ்டியொன்று அண்மையில் கேட்டிருக்கிறது.

—செய்தி 6-2-55

இந்தக் குரங்குகளுடன் மனிதர்களும் இருக்கக் கண்டுதானோ என்னவோ இதற்கு ஒரு தடை உத்தரவை போட்டிருக்கிறார்கள்.

★ ஹோட்டலில் கடமையாற்றிய ஒருவர் முனிசிப்பல் சபை சட்ட சுகாதாரக்கமிட்டியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட செய்தி கேட்டு பல வாழ்த்துச் செய்திகள் வந்தன. செய்திகளோடு ஒரு பார்சலில் புண்ணாக்கும், வைக்கோலும் அவருக்கு அனுப்பப்பட்டிருந்தது. —செய்தி 6-2-55

இவர் ஒரு 'மாட்டுக்கு'ச் சமானம் என்பதைக் குறிக்கிறது இந்தச் செயல். ஆனால் எனக்கு வந்த ஒரு பார்சலில் வெறும் காகிதங்கள் மாத்திரம் வந்தன. இதை அனுப்பியவர் எவ்வளவு நேர்த்தியாக என்னை கேவலப்படுத்த வேண்டும் என்று எண்ணியிருக்கிறார். உங்களுக்கு புரியாதுதான், காகிதங்கள் தின்பது கழுதையின் வழக்கம். அதனால் நான் ஒரு கழுதை இதை புரிந்துகொள்ளவில்லையே நீங்கள்.

★ நவசீனப் படைமீது மறுதாக்குதல் ஆரம்பிக்க ஆயத்தமாயிருங்கள்" சேனாதிபதி உத்தரவு.

—செய்தி 6-2-55

தாக்கினால்தான் மறுபடியும் தாக்குவார்கள் இல்லையேல் 'சும்மா' போய்விடுவார்கள்

★ பெண்களிடம் ஒழுங்கு தவறி நடந்ததால் அலஹாபாத்தில் 5 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

—இந்தியச் செய்தி 6-2-55

கல்யாணம் செய்துகொள்ளுவோமா என்றுதான் கேட்டார்களாம். இதில் என்ன ஒழுங்கு தவறிவிட்டது.

★ அமெரிக்க நிதி உதவியுடன் கோவாவில் விமான நிலையம்.

—பெல்காம் 11-2-55

இனிமேல் கோவாவை விமானமூலம் அமெரிக்காவுக்கே ஏற்றிக்கொண்டு சென்றுவிடுவார்களோ என ஐயமுற வேண்டியிருக்கிறது.

★ திருகெனமனுக்கு ஒரு காரை அன்பளிப்பாகக் கொடுத்து அவரை கௌரவித்தார்கள்.

—செய்தி 13-2-55

'சந்தோஷம்' வாங்குவதில் இன்னுமொரு புதிய முறையோ என்று ஒருசில பொலீஸ் உத்தியோகத்தர் மூக்கின்மேல் கையை வைக்கலாம். அத்தோடு யூ. என். பி. விசாரணை கமிஷன்களும் களும் புற்றீசல்போல படை எடுக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

★ அலுத்துப்போய் விடுவதினுல் முடிவில் ஆண்கள் கல்யாணம் செய்து கொண்டு விடுகிறார்கள். எதையும் உடனே தெரிந்துகொள்ள வேண்டும் என்ற விநோத மனப்பான்மையினுல் பெண்கள் கல்யாணம் செய்து கொள்ளுகிறார்கள். முடிவில் இருபாலார்களும் ஏமாற்ற மடைகிறார்கள்.

—இலகுநோக்கு 13-2-55

குழந்தை பிறந்ததும் 'குவா' 'குவா' என்றசப்தம் கேட்டு கும்மாளம் தட்டிய ஆண்பிள்ளை, இல்லை தந்தை 'அப்பா' 'அப்பா' என்ற அழுகுரல் கேட்டு ஓடி ஒழியும் விதத்தைப் பார்த்து பெண் ஏமாறுகிறாள். அன்பே அரசே என்று சதா நாய்வால்போல பின்னல் சுற்றித் திரிந்த பெண், குழந்தை பிறந்ததும் என் கண்ணில்லியோ என்று அதைக் கொஞ்சிக் குலாவுவதைப் பார்த்துவிட்டு ஆண் பிள்ளை ஏமாறுகிறான். இது தானய்யா உலகம் சம்சார பந்தம்.

★ மதுரை கோமாயண எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டு பக்தர்கள் சார்பில் முழங்கிய கோடையிடி மகாலிங்கய்யர் யார் தெரியுமா? டைரக்டர் எம். வி. ராமனின் தந்தை.

—சினிமாச் செய்திகள்

அவர் யாராய் இருக்கட்டும். எதற்கும் இவர் எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு பற்றிக்கொண்டது தனது மகன் சாட்சாத் ராமபிரானின் நாமத்தைச் சூட்டிக் கொண்டிருப்பதனுல் தான் என்பது என் முடிவு.

கூடாதது

ஒரு மாபெரும் கூட்டத்தில் தலைமைதாங்கிய ஒரு பிரமுகரின் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் ஆரம்பத்திலிருந்தே நல்ல ரசிப்புத்தன்மையுடன் ஆரவாரம் செய்தனர் பிரசங்கி தனது சொற்பொழிவை அளவிற்கு மீறி பிரயோகித்தார். ஜனங்கள் பொறுமையை இழந்தனர். ஓரே கரகோஷம். பிரசங்கி நிறுத்தியபாடில்லை கர

(13-ம் பக்கம் பார்க்க)

நரம்புச் சக்தியும் இருதய பலமும் ரெனி

நரம்புப் பலவீனம், மூளை பலவீனம், மறதி, மயக்கம், தூக்கமின்மை, மூலச்சூடு, இரத்தக் கொதிப்பு, திரேக வறட்சி, ஊறல், தடிப்பு, உஷ்ணம், முதுகுவலி, இடுப்பு வலி, உடம்பு கைகால் வலி, அசதி, பசியின்மை, வயிற்றுநோவு, நெஞ்சு நோவு, இருதயத் துடிப்பு, நாட்பட்ட வாய்வு ரோகங்களைத் தீர்த்து திரேக சக்தியை அதிகப்படுத்தும்.

விலை ரூ. 5-85 சிறியது ரூ. 3-25 வி.பி.பி. தபால்செலவுவேறு

சென்ற் மேரி வைத்தியசாலை,

201செட்டியார்தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மலர்களில் நடந்தேன்-மக்கள் உள்ளங்களில் நிறைந்தேன்

இந்திய நடனமேதை தாராவுக்கு சுதந்திரனுக்களித்த விசேஷ பேட்டி

சூரிய கிரணங்கள் சூடேறிக் கொண்டிருந்தன. பகலவன் மேலேறித் தாவிக் கொண்டிருந்தான், என் கண்கள் அவனை எடைபோடத் துடித்தன. வெளிறி வெளுத்த வானத்திலே ஒரு நட்சத்திரம். அது விடி வெள்ளி. சூரிய சந்திர மண்டலங்களைக் கடந்து 'இந்திர மண்டல'த்திற்கு எண்ணம் ஓடித் தாவியது. அங்கு 'ஊர்வசி, ரம்பை, மேனகை'யின் சலங்கொலி ஜொலித்தது.

நடனத்திற்கு கோயிலெடுத்த பாரத நாட்டிலே அந்த நடனத் 'தேவதை'களின் பரம்பரையில்லையா? சூரிய வெளிச்சத்திலே மின்னிய அந்த வானத்துத் தாரகை வாழும் தாராவை ஞாபகப்படுத்தியது.

தாழ்ந்து கூப்பியகரங்கள். அந்த தாரா என்முன் நின்று கொண்டிருந்தாள். 'சுதந்தரா' குஜராத்தி தந்த அந்த குவலயத்து 'ஊர்வசி' குழைந்த குரலில் உச்சரித்தாள்—ஆம் ''சுதந்திர'' னுக்கு பேட்டி தரும் உவகையோடு.

கேள்வி:

1 எங்கள் நாட்டைப் பற்றி, நாட்டு மக்கள்பற்றி, விசேஷமாக எங்கள் நாட்டு கலைகள்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:

இலங்கை இயற்கையின் எழில் சித்திரம் என்று கருதுகிறேன். உங்கள் நாட்டு மக்கள் அழகு உள்ளம்கொண்டவர்களாக—பழகுவதற்கு அலாதி இன்பம் தருபவர்களாக இருப்பது கண்டு மகிழ்கிறேன். இந்த நாட்டிலுள்ள—இந்த நாட்டிற்கே உரித்தான கலைகளில் கண்டிய நடனம் தனிச் சிறப்பு வாய்ந்தது. இந்த நாட்டிலே கலையை வளர்ப்பதற்கான ஒரு கலாச்சார இலாகா (அரசாங்க) இருந்தால் இந்தியாவிலுள்ள நாம் எல்லாம், ஏன் உலகத்தின் பல் வேறு பாகங்களிலிருந்தும் கலைஞர்கள் வந்து உங்கள் கலைகளைப் பயின்று போக உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

கேள்வி:

2 கீழைத்தேய (Oriental) கலைகள், உலகக்கலாச்சாரத்தின் வளர்ச்சிக்கு உதவக் கூடிய தாரதம்யம்கொண்டவையா? அப்படியென்றால் இதை எந்தவழிகளில் சாதிக்கலாம்?

பதில்:

கீழைத்தேய கலைகள் (Oriental) என்ற பதம் குழப்பமான கருத்தைத் தருகிறது. இது இந்தியாவின் சாஸ்திரீய கலைகளையோ—கிராமியக் கலைகளையோ குறிக்காது. எனவே பாரதக் கலைகள் என்று கூறுவதுதான் பொருத்தமானது என்று நம்புகிறேன். கலை அது எந்த நாட்டினது என்றாலும்மனித வர்க்கத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் சேவை செய்ய முடியும். இதைத்தான் நாங்கள் சோவியத் நாட்டிலே செய்தோம். அங்கு சென்ற இந்திய கலாச்சார தூது கோஷ்டிமூலம் இந்தியாவினதும்—இந்தியப் பெருமக்களினதும் பண்பையும்—பாரம்பர்யத்தையும், அழகையும் ஆத்மீக சக்தியையும் (கலாச்சார) சோவியத் மக்களுக்கு முழுப் பொலிவுடனும் எடுத்துக்காட்டினோம். சரித்திர காலம்தொட்டு யாராலும் ஆட்கொள்ளப்பட முடியாத அந்த நாட்டை இந்தியக் கலை ஆட்கொண்டது—அடிமைகொண்டது. இதன் மூலம் இந்தியாவின் பெருமையை—கௌரவத்தை ஓங்கி உயர்த்தினோம். இந்தியாவின் கலைகள் ரஷ்ய மக்களை ஆகர்ஷித்தன. அதன் மூலம் இந்தியாவின் பேரில் பெருமதிப்பு கொள்ளச் செய்தன. இதன்மூலம் இருகலில்லாத கலாச்சார உறவுகள்—தூதுகோஷ்டி மாற்றங்கள் அவசியம்.

கேள்வி:

3 கீழைத் தேசங்களினதும்—மேலைத் தேசங்களினதும் கலைகள் சங்கமமாகி, அதிலிருந்து ஒரு உலகக்கலை உருவாக முடியும் என்று கருதுகிறீர்களா?

பதில்:

இதற்கு விடைகாண ஆழ்ந்த அறிவும், அகண்ட சிந்தனையும், பரந்த உள்ளமும் அவசியம். உலகம் ஒன்றுபட்டுக்கொண்டு நெருங்கிவரும் காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். இந்த உண்மைக்கு கலை உலகம் கண்ணைடைத்து நிற்க முடியாது. என்றாலும் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு இன மக்களுக்கும் அவர்களது பாரம்பர்யத்தில் வரும் ஒரு அலாதியான கலைப்பண்பும் — கலாச்சாரமும் உண்டென்பதையும் நாம் மறந்துவிடப்படாது. உலகக் கலைகளிலிருந்து நாம் எவ்வளவோ படிக்க வேண்டியுள்ளது. எமது கலைகளும் உலகக கலைக்கு எவ்வளவோ படித்துக் கொடுக்கலாம். சோவியத் நாட்டின் கலை அரங்கங்களிலே நான் ஆடியது இன்று எனக்கு ஒரு கனவுலக சஞ்சாரமாகத்தான் படுகிறது. நாங்கள் கற்பனை கூடச் செய்ய முடியாத அளவுக்கு அங்கு கலைகள்—கலை நுட்பங்கள் வளர்ந்துள்ளன. இந்த மகத்தான சாதனைகளை எல்லாம் நாம் நம்மிடமிருந்து நாடிலேகொண்டுவரவேண்டும். அவர்களிடமிருந்து நாம்

பெரும் நாடுகளுக்கிடையில், வளவோ படிக்கவேண்டியுள்ளது. எமது கலைகளிலிருந்தும் தாம் நிறைய படிக்க வேண்டும் என்றபேரவாவை அவர்கள் சென்ற சென்ற இடமெல்லாம் தெரிவித்தார்கள். இது ஒரு ஒப்பரிய கலையை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதைத்தான் காட்டுகிறது. என்றாலும் மேற்கத்தைய கலைகளையும்—கிழக்கத்தைய கலைகளையும் போட்டு குழப்புவது கூடாது என்றுதான் நான் கருதுகிறேன். ஏனென்றால் ஒவ்வொரு மக்களுக்கும் அவரவர்கள் வாழ்வோடு வளர்ந்த ஒரு தனிப்பாணி உண்டல்லவா?

கேள்வி:

4 கலை கலைக்காகவே என்ற வாதத்தை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா? அல்லது கலைக்கு ஒரு இலட்சியம் உண்டு என்று நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்:

கதகளி தொட்டு எல்லாக் கலைகளும் ஏதோ ஒரு கருவுலத்தைத்தானே அடிப்படையாகக் கொண்டுள்ளன அபிநயத்தின் ஒவ்வொரு அசைவும் ஏதோ ஒரு கருத்தைத் தானே வலியுறுத்துகிறது. ஆனால் கலை மனிதனின் ஆக உயர்ந்த — புத்திபூர்வமான பாணியில் கருத்துக்கு உருவகம் தருகிறது. எனவே கலைக்கு நிச்சயமாக ஒரு தனி இலட்சியம் உண்டு. இந்திய நாட்டு மக்களின் சுதந்திரப் போராட்டத்தில் கலை ஒரு பெரும் சாதனமாகத் திகழவில்லையா? மனிதன் தன் வாழ்வின் ஒவ்வொரு கோணத்தையும் கலை ரூபத்தில் பார்க்க விரும்புகிறான். அவனது உழைப்பு, அதன் பலாபலன், வாழ்வின் பிரச்னைகள், வாழ்வுக்காக அவன் நடத்தும் போராட்டங்கள் இவற்றைப் பிரதிபலிக்கும் கலைகள் அவனை அகர்ஷிக்கின்றன. என்றாலும் கலைவாழ்வின் வெறும்படம்பிடிப்பாக மட்டும்இல்லாமல் அதன் ஆக உயர்ந்த பண்பையும்—நிலையையும் சித்தரிக்க வேண்டும். அதில்தான் கலையின் இலட்சியம் பூரணமாகும்.

கேள்வி:

5 கலைச் சாதனங்களான நாடகம், சினிமா, நடனக் குழுக்கள் தனிப்பட்டவர்களின் சொத்தாக இருப்பது சரியா? அல்லது அவை பொதுமக்களின் சொத்தாக மாறவேண்டுமா? ஏன்?

பதில்:

கலைச்சாதனங்கள் தனி நபர்களின் சொந்தாக இராது நாட்டின் பொதுச் சொத்தாக இருப்பதே நல்லது. கலையிலே லாபவேட்டையின் வாடை வீசினாலே அது கொலையாகிவிடுகிறது. அத்தோடு தனிப்பட்ட கோஷ்டிகளுக்கிடையில் பூசல்-பொள் எரிச்சல் இல்லாமல் மக்கள் நலனின் அடிப்படையில் கலை பூரணமாக வளர இது உதவும். இத்தகைய கலையைத்தான் சோவியத்

(12-ம் பக்கம் பார்க்க)

அவரவர் அபிப்பிராயம்

''நான் இறந்தாலும் சோவியத் மக்கள் மத்தியில் லட்சோப லட்ச ஆண்டுகள் சிரஞ்சீவியாக வாழ்வேன்'' என்று பெருமிதத்தோடு கூறும் இந்திய நாட்டின் கலைஞர் வேறு யாருமல்ல நடன மேதை தாரா சௌத்திரியே.

குஜராத்தியைச் சேர்ந்த தாரா தமிழ் நாட்டுக் கலைக் குரு மீனாட்சி சுந்தரனாரின் தலை சிறந்த சிஷ்யை. பரதநாட்டியம், கதகளி, மணிப்புரி முதலிய கலைகளில் மேதாவியாகத் திகழ்கிறார்.

சமீபத்தில் சோவியத் நாட்டுக்கு இந்திய கலைத் தூதுகோஷ்டியில் சென்ற தாரா ''சோவியத் நாட்டை ஆட்கொண்டுவிட்டார்'' என்று கூறலாம். அங்கு கலைஞர்களின் கோயிலாக உள்ள மாஸ்கோ கலைஞர் காட்சிசாலையில் அவரது உருவம் செய்து வைக்கப்பட்டுள்ளது. 3 கோடி பிரதிகள் விற்பனையாகும் தலைசிறந்த கலைச் சஞ்சிகையான 'ஒக்ளியொக்' தாராவின் படத்தால் தன் முகப்பை அலங்கரித்துள்ளது. இதன் பிரதி ஒன்றை சோவியத் ஆட்சி தாராவுக்கு அன்பளிப்பாக சமர்ப்பித்திருக்கிறது.

மீண்டும் உலகச் சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பிக்க இருக்கும் தாரா சமீபத்தில் சீனாவுக்குப் போகிறார். தனது பிரயாண அனுபவங்களுக்கு புத்தக ரூபம் தரவும் எண்ணியுள்ளார்.

சுதந்திரனுக்கு உவகையோடு பேட்டி தந்த தாராவுக்கு எமது வாசகநேயர்களினதும்—எமதும் வாழ்த்துக்களை சமர்ப்பிக்கிறோம்.

பேட்டி கண்டவர் : பிரேம்ஜி

அறிமுகப்படுத்துகிறோம்

கலைஞர்: 8

புதுமைப்பாணி அமைத்த புதுமைலோலன்

--''கீரன்''

''எழுதுவதையும்படிப்பிப்பதையும் இன்பம்தரும் தொழில்களாகக் கருதுகிறேன்'' என்று கூறும் இவ்வாசிரியர் வெறும் தமிழ் ஆசிரியர் என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள். மாத இதழாயிருந்து அண்மையில் வார இதழாக வெளிவரும் 'ஆனந்தன்' இதழுக்கு இணை ஆசிரியராகவும் உள்ளார். ஈழத்துச் சிறுகதைச் சிற்பிகளுள் ஒரு புதுமைபித்தனை இல்லாவிட்டாலும் ஒரு புதுமைலோலனை இவர் விளங்குகிறார் என்று துணிபாகக் கூறலாம். 25 வயது நிரம்பிய இவ்விளைஞர் இதுவரையில் 50க்கு மேற்பட்ட சிறுகதைகளையும், சில நாவல்களையும் சிருட்டித்துள்ளார்.

சொந்தப் பெயர் கந்தசாமி; யாழ்ப்பாணத்தை அடுத்த [illegible] ஊரில் அன்னம்மா; நாவலர் பாடசாலையிலும் வித்தியாலயத்திலும் ஆரம்பக் கல்வி கற்று பலாலி அரசினர் பயிற்சிக் கல்லூரியில் நுழைந்து 19 வயதிலேயே பயிற்சிபெற்ற ஆசிரியராக வெளியேறினார். பின்னர் கிங்ராக்கொடை, வெளிகந்த பாடசாலைகளில் கடமையாற்றினார். அண்மையில் அங்கிருந்து வெளியேறி யாழ்ப்பாணம் மஸ்தான் பாடசாலையில் பணி புரிகிறார்.

பகுத்தறிவுக் கொள்கையில் ஊறிய இவர் 18 வயதிலேயே கதைகளும் கட்டுரைகளும் எழுத ஆரம்பித்தார். சுதந்திரன், ஈழகேசரி, தினகரன், ஐக்கிய தீபம், சமூகத் தொண்டன் ஆகிய இதழ்களில் அவை வெளிவந்தன. ''காணிவல் காதல்'' என்ற சிறு நாவலை 1950ல் வெளியிட்டார். 'தாலி', 'மனமும் பெண்ணும்' ஆகிய நாவல்கள் விரைவில் வெளிவரவுள்ளன.

அவன் - அவள், மாடிவீடும் குடிசையும் இவரது சிறந்த சிருட்டிகளாகும்

நெட்டை உருவம், நடுத்தர உடற்கட்டு, சிவந்த மேனி, இடதுபுறம் வகிடு விட்டு வாரிய மயிர், பருமனான தலை, பெரிய கண்கள், இவரை அறிமுகப்படுத்துவன. புத்தரின் உருவத்தின் மேல் இவருக்கு அளவுமீறிய பக்தியுண்டு. பேச்சிலில் மட்டுமல்ல பேச்சிலும் வல்லவரான இவர் அகில இலங்கை சுயபாஷா சங்கத்தின் தலைவராக உள்ளார். தி.மு.கழகத்திற்கும் தலைமை தாங்கியுள்ளார். சொந்த இதழ்ஆரம்பமானதன்மூலம் இவர் எழுத்துலகம் மேலும் மிளிரும் என நினைத்து பார்க்கிறோம்.

இவருக்குப் பிடித்தமானவை: காண்டேகர், அகிலன், மாப்பஸான், கோகோல், ஓ'கென்றி, பாரதிதாசன், சிகரெட், கலைமகள், தேசபக்தன் குறிப்பு, மு.வ. புத்தர், பகுத்தறிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நவீனம்:

37. மூன்று கலங்கிற்று

சிறிது சிறிதாகக் கிழக்கு வெளுத்தது. நாதன் இறப்புடன் போராடிக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றி வைத்தியப் பேராசிரியர், உடலமைப்புப் பேராசிரியர்—இம்மூவரும் நாதனுடைய நண்பர்கள்—வேறு பல வைத்திய நிபுணர்கள் ஆகியவர்கள் நின்றார்கள்.

''நாதனுடைய உயிரைத் தப்பவைப்பது விஞ்ஞான வளர்ச்சிக்கு ஒரு பணி செய்வதற்குச் சரி'' என்று கூறினர் வைத்தியப் பேராசிரியர் கந்தையா. அதே நேரத்தில் ஒரு பணியாளன் ஓடிவந்து ஒரு சிறு துண்டை வைத்தியப் பேராசிரியரிடம் நீட்டினன். அவர் அதனை வாசித்துக்கொண்டு ''யார், குமாரசுவாமியோ? ஓ...ஓ... அந்தப் பையனை வரச் சொல்'' என்றார்.

இரண்டு விநாடிகளில் குமாரசுவாமி—என்னுடைய தனை நான் நடிக்கும் குமாரசுவாமி—கண்ணீர் சொரிந்து கொண்டு விக்கிவிக்கி அழுதபடி வந்தார்.

''ஐயா பேராசிரியர் நாதன் தப்பிவிடுவாரோ?'' என அழுதழுது வைத்தியப் பேராசிரியரைக் கேட்டார். ''எங்களால் இயன்றதைச் செய்கின்றோம். மேலே ஒருவனிருக்கின்றான்'' எனப் பேராசிரியர் சொன்னார்.

அந்த நிலையில் பத்து நிமிடங்களாக நின்ற பின்னர் குமாரசாமி என்னைக் கண்டார். நான் அவரைக் கண்டபோதும் அவரை அணுகவில்லை; இல்லை. நான்தானே இப்போது கொலைகாரக் குற்றஞ் சாட்டப்பட்டவள். என்னைக் கண்டதும் அவர் நேராக வந்து என்னிடம் பேசத் தொடங்கினர்.

''கட்டாயம் தப்புவார்; என எனக்கென்னவோ சொல்கின்றது'' என்றார்.

''உங்களுடைய வாய் பொன்வாயாக இருக்கட்டும்'' என்றேன்.

''பேசுவதானால் சற்றுத் தூரத்தில் நின்று குரலைத் தாழ்த்திப் பேசுங்கள்'' என ஒரு தாதி எங்களுக்குச் சொன்னாள். இருவரும் அவ்விடத்தைவிட்டு விலகிச் சிறிது தூரம் போனோம். பொலீசுக்காரன் ஒருவன் ஓடிவந்து ''அதிக தூரம் போகப்படாது'' என்று என்னைப் பார்த்துச் சொன்னான். நான் தப்பி ஓட முயற்சிக்கின்றேன் என்பது அவன் எண்ணம்போலும். அதனை அறியாத குமாரசுவாமி ''நாங்கள் போகவில்லை'' என்றார்.

''இன்றைக்கு எனக்கு நஞ்சும் அமிர்தமும் கலந்தாற் போன்ற நாள் கடவுளே!'' என்றார் குமாரசுவாமி.

''ஏன்? எனக்கு நஞ்சு மாத்திரம் கலந்த நாள்'' என்றேன்.

''ஏனோ? இன்றுதான் என்னுடைய சோதனை மறுமொழி வந்தது. காலைச் செய்தித் தாளில் இருக்கின்றது.''

முந்த நாளல்லவோ மறுமொழி வந்தது? ஆனால் உங்களுடைய பெயரைக் காணவில்லையே அதில்?''

''நீங்களும் என்னுடைய ஐயாவைப்போல் பிழை விட்டுவிட்டீர்கள். சோதனை மறுமொழி வெளியான செய்தித் தாளில் கடைசிக்கு முதலில் ''ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிய மாணவர்களின் மறுமொழி நாளை வரும்'' எனவிருந்ததை நீங்கள் பார்க்கவில்லையோ?''

''இல்லை.''

''நான் ஆராய்ச்சிக் கட்டுரையுடன்தான் சோதனை எடுத்தேன். அதாவது பேராசிரியர் நாதனுடைய மேற்பார்வையில் ஒரு சிறிய ஆராய்ச்சி செய்தேன். அதை ஒரு கட்டுரையாக எழுதினேன். அதிலும் தேர்ச்சியடைந்தால் தான் எனக்குச் சோதனையில் தேர்ச்சி கிடைக்கும். அதனாலேதான் என்னுடைய மறுமொழி பிந்தியது. முதலாம் பிரிவில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்றுளேன். இதற்கு முன்னர் இந்தப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் நாதனைத் தவிர இப்படியான புள்ளிகளை ஒருவரும் பெறவில்லையாம்'' எனச் சொல்லும்போது குமாரசாமியின் கண்கள் நாதனை நினைத்துக் கலங்கின.

என்னுடைய கண் கலங்கிற்று. உள்ளம் கலங்கிற்று. வயிறு கலங்கிற்று. மூளை கலங்கிற்று. குமாரசுவாமி மீது நாதன் பழிவாங்கிவிட்டாரென்றல்லவோ நான் எண்ணினேன். செய்தித் தாளில் வந்த அந்த இரண்டு வரிகளையும் நிதானமாக நான் வாசித்திருந்தால் இந்த நிலையும் வந்திருக்க மாட்டாது. பெண் புத்தி பின்புத்தி என்பதில் என்ன பிழை; நான் சாகவேண்டும். கட்டாயம் சாகவேண்டும். தற்கொலை.....தற்கொலை.....எனக்கு இதுவும்.....இன்னமும் வேண்டும்.

குமாரசுவாமி அழுதழுது சொல்லத் தொடங்கினர்.

''உங்கள்மீது நான் காதல் கொண்டுள்ளேன். என்னுடைய வாழ்க்கையைப் பற்றி நான் ஒருபோதும் சொல்லவில்லை. காரணத்தைக்கொண்டே இப்பொழுது என் வாழ்க்கை வரலாற்றினைச் சொல்லப் போகின்றேன். என்னுடைய தகப்பனார் வர்த்தக நிலையம் ஒன்றில் எழுத்து வினையனாக கடமை பார்க்கின்றார். அவருக்கு ஒருமாதம் 120 ரூபா சம்பளம். அந்தச் சம்பளத்தைக் கொண்டு குடும்பம் நடாத்த வேண்டும். கீழ் வகுப்புக்களில் என்னைப் படிப்பிப்பது சிரமமான அலுவலல்ல. ஒருவாறு என்னுடைய கல்வியை வளர்த்தேன். பல்கலைக்கழகத்திற்கு வந்தபோதுதான் சிக்கல் ஆரம்பமாயிற்று. வீட்டுச் செலவுக்கு மாதம் 100 ரூபா தரவேண்டுமென்று தாயார் கேட்டார். என்னால் முடியவில்லை. இருந்தும் கடன்பட்டு இரண்டு மாதங்கள் கடத்தினேன். என்னிடம் புத்தகங்கள் இல்லை. உடையென்றால் கந்தைதான். என்னுடைய இயல்பான திறமையை அறிந்த பேராசிரியர் நாதன் ஒரு நாள் என்னைத் தன்னுடைய அறைக்கு வரச் சொன்னார். நான் அங்கு போனதும், ''எந்த நேரம் பார்த்தாலும் உங்களுடைய முகம் வாடியிருக்கின்றது. காரணம் என்ன? காசுத் தட்டுப்பாடோ'' என்றார். என் உள் உயிரிலிருந்து கிளம்பும் குரலுடன் அவருடைய உளத்தில் இருந்து கிளம்பும் குரல் உரையாடியது. நான் அழுதுவிட்டேன்.

குமாரசாமி இப்படிச் சொல்லும்போது, ''எடி சண்டாளி! உடனே சா!'' என என் உள்ளுயிர் கட்டளை இட்டது.

''அதன் பின்னர் அவர் ஒன்றும் பேசவில்லை. பின்னர் சற்று நேரஞ் செல்லப் பேசினார். ''தம்பி ஆண்டவன் தந்த அறிவும் வறுமையும் உன்னிடம் இருக்கின்றன. வறுமையை நான் போக்குகின்றேன். இதோ உனக்கு 500 ரூபா. புத்தகம் உடுப்பு ஆகியவைகளுக்கு எடுத்துக் கொள்'' எனக் கூறி காசோலையை எழுதி என்னிடம் தந்தார். என்னுடைய கை தழதழத்தது. ''இல்லை என்று சொல்லாதே. உளம் கோணமல் நான் தருகின்றேன். பெற்றுக்கொள். இனி மாதம் மாதம் உனக்கு 100 ரூபாய் தருவேன். இன்று தொடக்கம் நான் உனக்குச் சிறிய தகப்பன். உன்னுடைய படிப்பு என்னுடைய கண்காணிப்பில் நடக்கும்'' என்றார். இப்படியாகப் பேராசிரியர் நாதன் என்னையும் உங்களையும்விடப் பலருக்குதவி செய்திருக்கின்றார் என்பதை நான் பின்னரே அறிந்தேன். வருங்காலத்திலும் பலருக்கு உதவி செய்வார்.

''அப்படியிருக்க நாதன் ஏன் உங்களிடம் சிடுசிடுப்பாக நடந்தார்?'' என்றேன்.

''அது சிடுசிடுப்பல்ல, நூற்றிற்கு நூறு புள்ளி நான் பெற வேண்டும் என்பது அவர் விருப்பம். 94 புள்ளிகள் பெற்றால் ஏசுவார். மகனை ஏசுவது தந்தை தானே! என்னுடைய கல்விக்கு அவர்தான் தந்தை''

''எனக்கும் அப்படித்தான். தந்தையைக்கொன்ற பாதகி'' என உள்ளம் துடித்தது.

''எங்களுடைய காதலைப் பற்றியும் பேராசிரியர் நாதன் எவ்வாறோ மணந்து பிடித்துவிட்டார்'' என்றார் குமாரசாமி.

''என்ன?''

''ஓம் அவருக்குத் தெரியும். ஒருநாள் என்னைப் பட்டதும் படாததுமாகக் கேட்டார். உள்ளதை மறைக்காமற் சொன்னேன். ''அருமையான பெண். என்னுடைய இனத்தவள். ஆனால் ஒரு குறை. பகுத்தறிவு அதிகம் இப்போது வளரவில்லை: சின்ன அலுவலையும் பிழையாக விளங்கிக்கொண்டு உளத்தை முறிப்பாள். வயதாக எல்லாம் சரியாகும். இதனைக் கவனித்து நடக்க வேண்டும். காதலில் இறங்குமுன்னர், இங்கிலாந்திற்கு சென்று கலாநிதிப் பட்டமும் பெற்று வந்தால்தான் திருமணம் செய்யவிடுவேன்'' எனப் பேராசிரியர் நாதன் குறுநகை அரும்பச் சொன்னார். நான் ஒன்றுமே பேசாமல் நின்றேன். ''இரண்டாண்டுகள்தானே இங்கிலாந்தில் கழியும். பவானியை நான் பார்த்துக் கொள்கிறேன். அவளுக்கு வயது வரட்டும்'' என்றார் பேராசிரியர் நாதன்.

''வெட்கித் தலை குனிந்தேன் நான். 'ஓம்' என மறுமொழி சொல்வதாக அவர் கொண்டார்''

இப்பொழுதுதான் எனக்கு எல்லாம் விளங்கியது. எங்களுடைய திருமணத்திற்கு நாதன் தடை போடவில்லை. முட்டுக்கட்டையாக அமையவில்லை. எங்களுடைய காதலை அவர் தூண்டியுள்ளார். அத்துடன் என்னுடைய நடத்தையும் வேண்டிய வேண்டிய இடத்தில் என் நன்மையை ஓட்டியே கண்டித்தார். ஐயோ! அந்த நாதன் இன்னும் சில நிமிடங்களில் சவமாகிவிட்டால் நான் என்ன செய்யலாம். என்னுடைய உளப்பூர்வமான மன்னிப்பை, நன்றியை அவர் ஏற்றுக்கொண்டால் இறக்கப்போகும் என்னுடைய உயிர் அமைதியடையும். குமாரசாமி தொடர்ந்து பேசினர்:

''என்னுடைய மேற்படிப்பிற்கு வேண்டிய ஒழுங்குகளையும் இங்கிலாந்திற்குச் செல்ல வேண்டிய கப்பல் ஒழுங்குகளையும் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னரே பேராசிரியர் நாதன் செய்து முடித்தார்'' எனச் சொல்லிக் குமாரசாமி தன் தலையிலடித்தார். என்னுடைய தலை பிளந்தது.

எங்களை விலத்திக் கொண்டு ஒருவர் போனர். ''நீதவான் வந்துவிட்டார்'' என ஒரு பொலீசுக்காரன் சொன்னான். என்னுடைய நெஞ்சு திக்கென்றது. பேராசிரியர் நாதனுடைய வாய்ப் பிறப்பை இப்போது எடுக்க முடியாது. நிலை சரியாக இல்லை'' என வைத்தியப் பேராசிரியர் சொன்னர்.

''அப்படியானால் அந்தப் பெண்ணின் வாய்ப்பிறப்பை எடுக்கலாம் ஐயா!'' என ஒரு பொலீசுப் புலி நீதவானிடம் யோசனை கூறியது.

''தேவையில்லை'' என்றார் நீதவான், அதன் பின்னர் அவர் வைத்தியப் பேராசிரியரைப் பார்த்து ''அவசரம் என்றால் அறிவிக்கவும்'' என சொல்லிவிட்டுப் போனர். என்னைக் கிட்டி வந்த சாவு ஒரு அடி பின்னுக்கு வைத்தது என எண்ணினேன் நான். அதற்கிடையில் என்னுடைய வழியை நான் பார்க்க வேண்டும். தற்கொலை.....ஒரு துள்ளி நஞ்சு.....என்னுடைய உயிரை நான் மாய்த்துக்கொள்வதற்குக் கூடப் பொலீசுக் கண்காணிப்பு இருக்கின்றது. இந்த நில உலகில் என்னுடைய உயிரும் கூட எனக்கில்லையோ?

எஸ். பி. எஸ். பதிமருந்து

ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டிய மிகச் சிறந்த சஞ்சீவி

தலைவலி, ஜலதோஷம், அஜீர்ணம், வயிற்றோட்டம், வயிற்றுவலி, பசியின்மை, இழுப்பு, ஜன்னி, எல்லாவித வாதரோகங்கள், ஜுரம் இருமல் முதலிய சகல வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து.

உபயோக விபரம் மருந்துடன் வைக்கப்பட்டிருக்கிறது.

விலை ரூ. 1-00 தபால் செலவு வேறு

இலங்கை சோல் ஏஜெண்டுகள்:
எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,
34ம் நிர். செட்டியார்தெரு, கொழும்பு-11.
போன்: 6084.

தலைவலிக்கு
ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்

உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது. மேலும் இத்தைலத்தின் உபயோகத்தில் கண் சிகப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் அரிப்பு, கண் பார்வைகுறைவு, கண் கூச்சம், கண்ணிலிருந்து பீளை வடிதல், கண்வலி, கண்குத்து, வெள்ளெழுத்து, ஒருத்தலைவலி, கைகால் தேக எரிச்சல், மண்டையிடி, மூலச்சூடு, அஸ்திகாங்கை, கெர்ப்பச் சூட்டால் உண்டாகும் திரேகாந்தல், காதுநோய், காதுசெவிடு, காதுஇறைச்சல், காதில் சீழ்வடிதல், பீனிசம், தடுமல், மூக்கிலிருந்து நீர்வடிதல், மயக்கம், தலைமயிர்உதிர்தல், செம்பட்டமயிர், பித்தநரை முதலியவைகளை ஆச்சரியமாய் குணம்செய்யும். கூந்தல் நன்றாய் வளரும். இத்தைலத்தை உபயோகித்த எவரும் குணமில்லை என்று சொல்ல முடியாது. ஆகையால் நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். உண்மை விளங்கும்.

புட்டிக்கு ரூ. 1-00 தபால் செலவு சதம் 85

யாழ்ப்பாணம் சோல் ஏஜண்ட்:
எஸ். சுப்ரமணியம் அன் கோ.,
53, கே.கே.எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்

ஞானசுந்தர வைத்தியசாலை.
187, செட்டியார் தெரு, கொழும்பு.

ஓய்வு நேரங்களை பயன்படுத்தி மாதம் ரூ. 100 முதல் ரூ. 300 வரை சம்பாதியுங்கள். மூலதனம் வேண்டியதில்லை. இலவச விபரங்களுக்கு எழுதவும். கிர்லன் நிட்டிங் வேர்க்ஸ், லுடியானா-10 (இந்தியா)

வியாசக விதரணன் எழுதிய
நாகரிக நிர்மலா
அல்லது
மலைக்குறத்தி மகள்
சீக்கிரம் வெளிவந்துவிடும்
வாசிக்கத் தவறுதீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன் சிரிப்பிலே பொங்கி வரும் கவலையைப்

போக்கி புத்துணர்வு தரும் பூங்குழந்தை

தேன்போலப் பேசி-மான்போலத் துள்ளும் பாலகனின் பால் வடிவு

சின்றெடுத்த அன்னையும்-வளர்த்தெடுக்கும் அப்பனும் இதயம் பூரித்து நிற்கும் காட்சி

பூங்குழந்தைக்கு பொன்னிலக்கியம் படைக்கும் கவிஞர்கள்

ஏழில் தவழும் இயற்கைக் காட்சிகளைக் காணும் பொழுது இதயம் இன்பத்திலே மூழ்கித் திளைக்கின்றது என்பர் கலையுள்ளம் படைத்தவர்கள். அடுக்குமாளிகைகளில் அறுசுவையுணவை அமர்ந்தில்லாளுட்ட ஆனந்தமாக உண்டு வாழ்வதில்தான் ஆரா இன்பமிருக்கிறது என்று எண்ணுகின்றனர் அளவிலாச் செல்வம் படைத்தவர்கள். எத்தனை செல்வமிருந்தபோதும் பூத்த மலர்போலச் சிரித்து, மழலை மொழியிலும் மக்களையில்லாதவிடத்து அத்தனையும் பயனில்லாது போய்விடும் என்பது அனுபவித்தறிந்த ஆன்றோர் கருத்து. இன்பமெலாந்தரும் இயற்கையெழில்கூட, அந்தக் குறையினால் துன்பந்தருவதாக மாறிவிடும் என்பது அவரபிப்பிராயம். இந்த உண்மையை வையகம் புகழும் வள்ளுவப் பெருந்தகையின், 'குழலினிது யாழினிதென்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்ற வாக்கு உறுதிப்படுத்துகின்றது. இதைப்,

'பொன்னுடையரேனும்
புகழுடையரேனும் மற்
றென்னுடையரேனும்
உடையரோ - இன்னடிசில்
புக்கனையும் தாமரைக்கைப்
பூநாறுஞ் செய்யவாய்
மக்கனையிங்கில்லாதவர்'

என்ற புகழேந்திப் புலவரின் பொன்மொழியும் வலியுறுத்துவதைக் காணலாம்.

நிறைந்த இன்பம் வேண்டுமானால் குழந்தை இருக்க வேண்டும் என்பது இவற்றால் வலியுறுத்தப்படுகின்றது தெளிவு. 'குழலினுமினிய மொழி பயிலும் குழந்தையின் மதலை மொழியைக் கேட்பதனால் செவிக்கின்பம் ஏற்படுகின்றது. அவர்தம் பூப்போன்ற மேனியைத் தீண்டுவதினால் உடலுக்கே இன்பம் ஏற்படுகின்றது' என்பதும் பொய்யா மொழிப் புலவரின் கருத்தாகும். அனுபவித்தவரல்லவா அந்த இன்பத்தை அறியமுடியும்!

இத்தகைய இன்பத்தையெல்லாம் தன்னுள்ளடக்கி இன்பக் களஞ்சியங்களாகத் திகழும் குழந்தைகளைப்பற்றிக் கவிஞர்கள் பாடும் அழகு இன்பத்திலும் இன்பம் பயப்பதாகும்.

'பசுங் கன்றும் பாலுண்டிடாது கேட்கும் பான்மையிலே கவிதைகளை இயற்றிப் புகழ்கொண்ட தேசிகவிநாயகம்பிள்ளையவர்கள், 'தெள்ளமுதுண்டு' தெவிட்டாக் கனியுண்டு, எம் உள்ளங் குளிர உரையாடும் பைங்கிளியைப் போன்ற' ஒரு பச்சிளங் குழந்தையைப் பார்க்கிறார். புன்னகை காட்டிப் பொலிவுடன் நின்ற அக் குழந்தையைக் கண்ட அவருக்கு ஏற்பட்ட இன்பத்திலே எழுந்த ஒரு சந்தேகம்.

''நெஞ்சிற் கவலையெலாம்
நீங்கத் திருமுகத்தில்
புஞ்சிரிப்பைக் காட்டியெமைப்
போற்றும் இளமதியோ''

இது என்று ஏங்கி நிற்கின்றார் கவிஞர்.

கவிமணிக்கேற்பட்ட சந்தேகத்தைத் தெளியவைத்து உண்மையை உணர்த்துவதாக அமைந்திருக்கின்றது சுவைமிக்கதான சுத்தானந்த பாரதியாரின் பாடல்.

அன்புருவான தன் மைந்தனின் அமுத மொழிகளைக் கேட்டு அகமகிழ்ந்து நிற்கிறாள் அன்னை. 'அம்மா' நாலெழு குட்டியுலகம், நான்தானம்மா இனிவரும் நாடு! உன் இன்பக் கனவல்லவா அம்மா நான்? நீ ஏன் கவலை கொள்ளவேண்டும்!' என்று இன்பமொழி பேசிக் கொண்டிருந்த அவனைத்தான் கவிமணி கண்டாரோ, யாதோ! யோகியாரின் கற்பனை வளம், கவிமணியின் சந்தேகத்தைத் தீர்ப்பதாக அமைந்துள்ளது பயிலுந்தோறும் இன்பம் பயப்பதாகும்.

இளமதியோ இது என ஏங்கிய கவிமணியை, அதே இடத்தில் நோக்கி மறுமொழி கூறுவதுபோன்று,

''மான்போலத் துள்ளும்
குழந்தை - பூத்த
மலர்போலச் சிரிக்கும்
குழந்தை
தேன்போலப் பேசும்
குழந்தை - என்
தெய்வ வடிவான குழந்தை';

இது என்று அன்பொழுகக் கூறித் தன் 'கண்ணனை கண்ணுக்கு முத்தம்' கொடுக்கும் அன்னையின் வாக்கைக் கவிஞர் பாடியுள்ளார்.

அன்னை அன்பே வடிவான தன் குழந்தையை அரவணைத்து, முத்தமிட்டு, ஆட்டங்களாடி மகிழவிட்டு, வேலைகளைக் கவனிக்கச் சென்றுவிட்டாளோ, என்னவோ! அங்கே 'சீருடைய முகம் சிவக்கச் சிறுகையாற் கண்பிசைந்து விம்மி, விம்மி அழுதுகொண்டு நிற்கிறது ஒரு குழந்தை. மனோரம்மியமான மாலைப் பொழுதிலே உலாவச் சென்ற கவிஞர் பெரியசாமித்தூரன் காணுகின்றார் அக்குழந்தையை. 'சேர்ந்த கவலைகளெல்லாம் தேய்ந்து மடியும்படியாகப் புன்னகைக்கும் பச்சிளங் குழந்தையின், மின்னுடல் வளைவிலேனும் விண் சுவை அமுதையுண்டு' திளைப்பவர் கவிஞர். 'வண்ணச்சிறு விருந்தாகிய குழந்தையை அதன் கண்கலங்குமாறு அன்பிலாவார்த்தைகளை யாராவது சொன்னால் கன்றிக்கரையும் பண்பினது' கவிஞரதுள்ளம். அவருடைய உள்ளந்தான் அக்காட்சியைக் கண்டு கலங்குகின்றது 'அம்மம்மா; என்று சொல்லி அக்குழந்தை அங்குமிங்கும் பார்த்து அழுவதற்குக் காரணம் யாதோ என்று அறிந்திலர் கவிஞர்.

''கன்னத்தில் முத்துதிரக்
கவலையிருள் தான்படர
என்னத்துக்காக இந்த
இளங்குருந்துவாடினதோ?
சின்னஞ்சிறு மொட்டு
சிரித்து மகிழ்ந்தாடாமல்
கொன்னி இதழ் பிதுக்கிக்
குலைகின்ற காரணமென்!''

என்று உளத்திலே எண்ணி, 'ஆருடைய குழந்தையிது, அழுதுகொண்டு நிற்கிறதே' என்று வாய்விட்டு வினவுகிறார் கவிஞர்.

அவன், பிள்ளைச் செல்வமாகிய பெருஞ் செல்வமில்லாது நீண்ட நாட்களாகத் தவமிருந்து பெற்ற தவப்பேறு அது. அழகேயுருவான அக்குழத்தையை, அவன் பெற்ற கிடைப்பருஞ் செல்வமாகக் கவிஞர் பாரதிதாசன் காட்டும் இனிமை பாடிப்பாடி அனுபவிக்கத் தக்கதாம்.

''இளகிய பொன்னுருக்கின்
சிற்றுடல் இருநீலக் கண்
ஒளிபடுப் பவளச் செல்வாய்
ஒரு பிடிக் கரும்பின்
கை கால்
அளிதமிழ் உயிர்பெற் றங்கே
அழகொடும் அசையும்
பச்சைக்
கிளியினைக் காணப் பெற்றான்
கிடைப்பருஞ் செல்வம்
பெற்றான்!''

அத்தகைய செல்வம் 'பிள்ளைக் கனியமுதே, பேசும் பொற் சித்திரமே' என்று பாராட்டிச் சீராட்டி வளர்த்துவரும் பெரும்பேறுன அன்புக் குழந்தை தேம்பித் தேம்பி அழும்போது சிந்தை கலங்காது எப்படித்தான் அவள் பொறுத்துக்கொண்டிருக்க முடியும். அழுங் குழந்தையைக் கண்ட அவனுள்ளம் படுந்துயரை அமரகவி பாரதியார் அழகுறக் காட்டுகின்றார். குழந்தையிடம் அவன் கொண்டுள்ள அன்பின் ஆழத்தை,

''உன் கண்ணில் நீர்
வழிந்தால் - என்னெஞ்சில்
உதிரம் கொட்டுதடி!
என் கண்ணிற் பாவையன்றே
கண்ணம்மா
என்னுயிர்
நின்னதன்றே!''

என்ற அமுதவாக்கிலே அனுபவித்தறியலாம்.

அக்குழந்தையை, 'என்னைக் கலிதீர்த்தே உலகில் ஏற்றம்புரியவந்த 'என் இன்பமே' என்று அள்ளி அணைத்துக்கொள்கிறான். 'சின்னஞ்

(11-ம் பக்கம் பார்க்க)

மக்கத்துல்லாவை பரிசுத்த பைத்துல்லாவை இஸ்லாமியர் தொழுவது ஏன்?

இது இஸ்லாத்தின் ஏகத்துவத்தைக் குறிக்கும் எல்லைக் கல்லு

[அல்-ஹாஜ் வி. எம். சம்சுதீன்]

(20-2-55 சுதந்திரன் தொடர்)

சென்ற பத்திரிகையில் முஸ்லிம்கள் ஏன் திசை நோக்கித் தொழுகின்றார்கள்? என்ற காரணத்தைச் சொன்னேன். அவர்கள் மக்கத்திலுள்ள பைத்துல்லா என்னும் அல்லாஹ்வின் வீட்டை ஏன் வலம் சுற்றுகிறார்கள்? அதில் பொறிக்கப்பட்டிருக்கும் கறுங்கல்லை ஏன் முத்தமிடுகிறார்கள்? ஹஜ்யாத்திரையின் போது எப்படி முஸ்லிம்கள் சந்நியாசிகளின் கோலத்தில் இருக்கின்றார்கள் என்ற விஷயத்தை இனி கவனிப்போம்.

''நிச்சயமாக மனிதர்களுக்கென்று ஏற்பாடு செய்யபபட்டமுதல்வீடானதுமக்காவிலுள்ள பைத்துல்லாவாகும். அஃது ஆசீர்வதிக்கப்பட்டதாயும், பூலோகத்தவர்கட்கு நேர்வழி என்னும் ஒருமையைக் காட்டக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது பிரயாண வசதிகளை உடைய மனிதர்கள்மீது அவ்வீட்டை இறைவனுக்காக யாத்திரைசெய்து தரிசிக்க வேண்டுவது கடமையாக்கப்பட்டிருக்கிறது'' (அல்குர்ஆன் 3: 95. 96)

''நபியே! நீர் மனிதர்களை நோக்கி ஹஜ்ஜுக்கு வருமாறு அறிக்கை வெளியிடும். அவர்கள் கால் நடையாகவும், ஒட்டகங்கள்மீதும் வெகு தொலையிலிருந்து வருவார்கள் (ஆப்ரஹாமை) இப்ராஹீமை நம்முடைய இந்த வீட்டில் வசிக்கும்படி செய்து நீர் இறைவனுக்காக எவரையும் இணையாக்காதீர். இந்த வீட்டை வலஞ் சுற்றி வருவோருக்கும் அதில் நின்று குனிந்து சிரம்தாழ்த்தித் தொழுவோருக்கும் அதனைப் பரிசுத்தமாக்கிவையும்'' (அல்குர் ஆன் 22: 26. 27)

''பைத்துல்லா'' என்றால் இறைவனின் ஆலயம் என்று பொருள். இறைவனுக்கு ஒரு ஆலயம் இருக்கவேண்டுமென்றால் இறைவனும் ஒரு சிருஷ்டியாக இருக்கவேண்டும். ''இறைவனுக்கு மனிவி மக்கள் கிடையாது. அவன் அரூபி'' என்பது குர்ஆனின் நம்பிக்கை. இவ்வாறே உலகிலுள்ள எல்லா புறசமயத்தவர்களும் சொல்கின்றார்

கள். சித்தத்துக்கு அறியாமல் சித்தத்தில் இயங்கும் ஒரு பொருளை ''நூர்'' என்றும் ''அருள் ஒளி'' என்றும் ''சுயஞ்ஜோதி'' என்றும் பல பெயரால் அழைப்பார்கள். ''கடவுள் வடிவம் ஜோதி வடிவம்'' என்பர். இதை அறிந்து தேடியவன் கடவுள் தன்மையை அடைகின்றான் என்பது சகல மதங்களின் ஒருமித்த நம்பிக்கை அவன் உள்ளத்தில் தோன்றும் ஜோதிவடிவை அவன் கடுமையான தவத்தாலும் அப்பியாசங்களாலும், நேர்மையான ஒழுக்கத்தாலும். வெள்ளையான கபடமற்ற உள்ளத்தாலும், தன்பொருட்களை பட்டினத்தடிகளைப் போன்று, ஏழைகளுக்குத் தானம் செய்வதாலும் இவ்வுலகிலுள்ள சகல சீவராசிகளும் தன்மீது கொண்ட கருணையாலும், அவன் அதை அடைகின்றான். இவனுக்கு மூவாசையாகிய மண், பொன், பெண் கிடையா. ஆகவே தான் உத்தமத் துறவிகள் பெண்களை வெறுக்கின்றனர். போலித் துறவிகள் கறுப்புச் சட்டையோ காவியோ அணிந்து பல பெண்களை வைப்பாட்டியாக வைத்திருக்கின்றனர். இக்கயவர்களைப்பற்றி இங்கு பேசவேண்டியதில்லை.

மனிதன் கடவுள் தன்மையை அடைந்தவுடன் அவன் இறைவனது அருட் ஜோதியில் கலந்து விடுகின்றான். இதை முஸ்லிம்கள் ''பனா பில்லாஹ்'' ''அனல் ஹக்'' என்று கூறுவர். இறைவனின் தரிசனமே மனிதன் அடையும் மேலான இன்பம்'' என்று குர்ஆன் கூறுகிறது.

இமாம் கஸ்ஸாலி அஸ்லிம் எழுத்தாளர்களுக்குப் பிதா. அவர் கி. பி. 1111ம் ஆண்டு காலமானார். அவர்கள் எழுதிய நூல்கள் நூற்றுக்கணக்கில் இருந்தன. அவைகளில் முதன்மையானது ''இஹ்யா உல்—உலூம்'' ''கீமியாயே ஸஆதத்'' ''இஹ்யாஉல்—உலும்'' என்னும் சிறந்த நூலில் இமாம் கஸ்ஸாலி அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்:—

''ஆன்மாவின் முதலாவது

(11-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரு நாளில் அறிந்துகொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை, என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில்வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன் ''ஆனந்தா தைலத்தை'' தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

புரொப்ரைட்டர்: எம். பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1955 மார்ச் மாதம் 6ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411

வெந்த புண்ணிலே வேல்!

"நீதி அரசர் திரு நாகலிங்கத்திற்கு கொடுத்த வாக்குறுதியை அரசாங்கம் மீறவில்லை" என்று பிரதம நீதியரசர் நியமனம் சம்பந்தமாக, நீதி மந்திரி திரு ஈ. பி. விக்ரமநாயகா வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகவும், நொந்த உள்ளத்தை நொட்டை பேசி நோப்படுத்துவதாகவும் இருக்கிறது.

அதேசமயத்தில் நீதி மந்திரியின் அபத்தக் களஞ்சியமான அந்த அறிக்கையைப் படிக்கும்போது, ஒருபுறம் தமது சுய கௌரவத்தையும், மறுபுறம் தமது மந்திரிப் பதவியையும் காப்பாற்றிக்கொள்வதற்காக சேர் ஜோன் கொத்தலாவலையின் கைப்பாவையாக அவர் படும்பாட்டைப் பார்த்து அனுதாபப்பட வேண்டியுமிருக்கிறது.

போதாக்குறைக்கு, தங்கள் சப்பைக்கட்டு வாதத்திற்கு பக்கபலம் தேடுவதற்காக செத்துப்போன அந்த மனிதர் திரு டி. எஸ். சேனநாயகாவை வேறு இப் பிரச்னையில் இழுத்துப்போட்டு அடிக்கிறார்கள்.

சேர் ஆர்தர் விஜயவர்தனவும், சேர் எட்வர்ட் ஜயதிலகாவும் உயர்தர நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதியரசர்களாக கடமை பார்த்தபோது வரிசையிலும் வயதிலும் அவர்களுக்கு கீழ்ப்பட்ட நீதியரசராக இருந்தவர் சேர் அலன்ரோஸ். இவரை அட்டோர்னி ஜெனரலாக நியமனம் செய்யப்படுகையில் ஒரு விஷயம் அவருக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டது. அதாவது அட்டோர்னி ஜெனரல் பதவி சாதாரண நீதி அரசர்களின் பதவியைவிட சற்று உயர்வுபட்டதாகக் கருதப்பட்ட போதிலும், பிரதம நீதியரசர் பதவிக்கு இடம் காலியாகும்போது, சேர் விஜயவர்தனா, சேர் ஜயதிலகா ஆகியோர் பதவி வகித்த பின்னர்தான் சேர் அலன்ரோஸிற்கு பிரதம நீதியரசர் பதவி வழங்கப்படும் என்பதுதான் அப்போது எடுத்து சொல்லப்பட்ட விஷயம்.

இதற்கிணங்க சேர் அலன்ரோஸ் அட்டோர்னி ஜெனரலாய் இருந்தபடி இருக்கவே, சேர் விஜயவர்தனாவும், சேர் ஜயதிலகாவும் ஒருவர் பின் ஒருவராக பிரதம நீதியரசர் பதவிக்குஉயர்த்தப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவருடகாலசேவையும்நீடிக்கப்பட்டது. பின்பு அவர்கள் இளைப்பாறினர். இவை யாவும் சாட்சியத்திற்கழைக்கும் காலஞ்சென்ற திரு டி. எஸ். சேனநாயகாவின் காலத்தில் அவர் செய்வித்த காரியங்களாகும். இவற்றுல் திரு சேனநாயகாவிற்கு வேறுபட்ட கருத்து எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை.

இந்த அநுசாரத்தின்படி திரு பஸநாயகாவிற்கு முன்பதாக பிரதம நீதியரசர் பதவிக்கு வர வேண்டியவர் திரு நாகலிங்கம்தான் என்பதில் எள்ளளவேனும் ஐயப்பாட்டிற்கு இடமில்லை.

திரு. பஸநாயகா, உயர்நீதிமன்ற நீதியரசர் வரிசையில், திரு. நாகலிங்கத்திற்கு கீழ்ப்படியில் இருந்தவர். திரு. நாகலிங்கம் சிரேஷ்ட நீதியரசர் பதவியையும், பல தடவை தற்காலிகப் பிரதம நீதி அரசர் பதவியையும் வகித்தவர். திரு. பஸநாயகாவைவிட வயதிலும் சேவையிலும் அதிகப்பட்டவர். அதாவது ஒன்பது வயது மூத்தவர். திரு. பஸநாயக்காவிற்கு ஆசிரியராக இருந்திருக்கக் கூடிய தகைமை பெற்றவர். இப்படிப்பட்ட வரைப் புறக்கணித்துவிட்டு, அவருக்கு ஜூனியரான திரு. பஸநாயகாவை பிரதம நீதியரசராக நியமிக்க காரணம் என்ன என்பதைத் தமிழ் மக்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

சேர் விஜயவர்தனாவும், சேர். ஜயதிலகாவும் சிங்களவர்கள். எனவே அவர்கள் நியமனத்தின் போது, வெள்ளைக்காரரான சேர். அலன்ரோஸ் வகித்த அட்டோர்னி ஜெனரல் பதவி குறுக்கிட முடியவில்லை. திரு. நாகலிங்கம் ஒரு தமிழர். உடனே திரு. பஸநாயகா என்ற சிங்களவர் வகிக்கும் அட்டோர்னி ஜெனரல் பதவி குறுக்கிட்டு விட்டது!

இந்த அக்கிரமமான வகுப்புவாத நடவடிக்கை திரு. நாகலிங்கத்தை மட்டுமல்ல, தமிழ் பேசும் மக்கள் அனைவரையுமே வேதனைக்குள்ளாக்குகிறது. இந்த நிலைமை தமிழ்ப்பேசும் மக்களுக்கு ஏற்படுவதற்கு காலாயிருப்பது இன்றைய அரசியல் திட்டமும் அதற்கு ஒத்தூதிப் பிழைக்கும் மானங்கெட்ட தமிழ் அரசியல் வாதிகளும்தான்.

இந்த ஒற்றையாட்சி அரசியல் திட்டத்தையும் ஒத்தூதிப் பல்லிளிக்கும் அரசியல் விபீஷணர்களையும் ஒழித்துக்கட்டாதவரை தமிழ்ப் பேசும் மக்களுக்கு சுய மதிப்பில்லை, மரியாதையில்லை—ஏன் விமோசனமே இல்லை.

உருப்படியான தீர்மானம் ஒன்றுகூட இல்லை

உள்ளே வளரும் வேற்றுமையைத்தான் யு. என். பி. மகாநாடு பிரதிபலித்தது

(சுதந்திரன் அரசியல் விபர்சகர்)

ஆட்சிக் கட்சியான ஐக்கியதேசியக் கட்சியின் ஏழாவது ஆண்டு மகாநாடு கடந்தவாரம் கொள்ளுப் பிட்டியிலுள்ள கட்சித் தலைமைக்காரியாலயமான "ஸ்ரீ கோத்தா"வில் நடைபெற்றது. முன்பெல்லாம் யு. என். பி. யின் ஆண்டு விழாவைப்பற்றி நாம் எழுதுகையில் "கோலாகலமாக" நடைபெற்றது என்று எழுதுவது வழக்கம். இம்முறை அப்படி எழுத முடியவில்லை. முன்பெல்லாம், மூன்று தினங்களுக்கு, இல்லாத பொல்லாத தமாஷாக்களுடன் நடைபெறும்இவ்விழா, இம்முறை ஒரே ஒரு தினத்தோடு பிசுபிசுத்துவிட்டது. "புத்தளை உபதேர்தல் மும்முரமாக சமீபித்துவிட்டதாலும், கட்சியைச் சேர்ந்த பல அரசியல்வாதிகள் அங்கு கவனம் செலுத்த வேண்டியிருப்பதாலும் மகாநாட்டை மூன்று தினங்களுக்குத் தொடர்ந்து நடத்தி காலத்தையும் உழைப்பையும் அவம்போக்க விரும்பாத காரணத்தால் ஒரு தினக் கொண்டாட்டத்தோடு விழாவைக் கட்டுப்படுத்திக் கொண்டோம்" என்று நாட்டின் பிரதமரும் யு. என். பி. கட்சியின் தலைவருமான சேர் ஜோன் கொத்தலாவலை காரணம் கூறியிருக்கிறார்.

ஆனல் இது உண்மைக் காரணம் அல்ல என்பதும் வெறும் சாக்குப்போக்கு என்பதும் கட்சியின் அந்தரங்க விஷயங்களை அறிந்தவர்கள் அறிவார்கள்.

சேர் ஜோன் தமது தலைமைப் பிரசங்கத்தில் ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்: "ஜனநாயகத்துவத்தை நிலைநாட்ட உறுதி பூண்ட ஒரே ஒரு கட்சி நமது யு. என். பி. கட்சியாகும். கடந்த பொதுத் தேர்தலில் நமக்கு கிடைத்த வெற்றி ஜனநாயகத்திற்கு கிடைத்த பாராட்டு என்றே கொள்ள வேண்டும். கடந்த இரண்டாண்டுகளுக்குள் யு. என். பி. கட்சி பொதுமக்களிடையே செல்வாக்கு இழந்து விட்டது என்றும், நாட்டில் நமக்கு ஆதரவு குறைந்து விட்டது என்றும், நமது எதிரிகளும் அரசியல் விரோதிகளுமான இதர கட்சியாளர்கள் கருதுகின்றனர். இந்தக் கருத்தில் துளிகூட உண்மை கிடையாது. இதற்கு மாருக நமது பலமும் செல்வாக்கும் வளர்ந்து வந்திருக்கிறது, வருகிறது என்றே கூறவேண்டும்." இப்படியாக சேர் ஜோன் பேசியிருக்கிறார்.

யு. என். பி. கட்சிக்கு செல்வாக்கும் பலமும் நாட்டில் அதிகரித்துவிட்டது என்பது உண்மையானுல், கேவலம், ஒரு உபதேர்தலில் வெற்றிபெறுவதற்காக, மூன்று நாள் நடைபெறும் ஒரு முக்கிய வருடாந்த மகாநாட்டை ஒரு நாளாகக் குறைத்துக்கொண்டு, கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் மந்திரிகளும், அரசியல்வாதிகளும் புத்தளைத் தொகுதியை முற்றுகையிட வேண்டியது அவசியமா? புத்தளைத் தொகுதி இடதுசாரிகளின் ஒரு கோட்டை என்றுலும் பாதகமில்லை; ஏற்கனவே இத்தொகுதிக்கு ஒரு யு. என். பி. தூண்தான் பிரதிநிதியாய் இருந்திருக்கிறார். இங்கு யு. என். பியின் செல்வாக்கு, பிரதமர் கூற்றுப்படி, பலமடங்கு வளர்ச்சியடைந்திருக்க வேண்டுமல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரைப் பந்தய தடுப்பு, மதுவிலக்கு சம்பந்தமாக திரு டட்லி சேனநாயகா கொண்டு வந்த பிரேரணை விவாதிக்கப்பட்டபோது இந்த நிலை தெளிவாகப் பிரதிபலித்திருக்கிறது. இப் பிரேரணை நிறைவேறி, அதை அரசாங்கம் மேற்கொண்டு, நாட்டில் சுபீட்சம் ஏற்பட வேண்டும் என்ற ஆர்வத்தைவிட, இப் பிரேரணையின்மூலம் தமக்கு கட்சிக்குள் எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பதைக் கண்டறிவதற்காகவே டட்லி கோஷ்டியினர் இப் பிரேரணையை மேற்படி கூட்டத்தில் திணித்து விவாதித்திருக்கின்றனர் என்று அனுமானிப்பது தவருகாது. இந்த சூட்சுமத்தை சேர் ஜோனும் ஊகித்தறிந்துகொண்டார் என்பதை மேற்படி அதிமுக்கியமான விவாதத்தில் அவர் காட்டிய அசாதாரண மௌனம் நன்கு துலாம்பரப்படுத்துகின்றது.

எனவே, இப்முறை நடைபெற்ற யு. என். பி. கட்சியின் வருடாந்த மகாநாட்டு நிகழ்ச்சிகள் பிரஸ்தாப கட்சிக்குள் ஐக்கியம் குன்றி வருகின்றதென்பதையும், வேற்றுமை வளர்ந்து வருகின்றதென்பதையும்தான் ஊர்ஜிதம் செய்திருக்கின்றன என்று கொள்ள வேண்டும்.

★

ஒரு அரசியல் கட்சி வருடாந்த மகாநாடு நடத்துகிறதென்றுல், அந்த கட்சியின் செயல்குழுக் கூட்டத்தில், கடந்துபோனஆண்டில் கட்சி செய்த காரியங்களையும், செய்யத் தவறிய காரியங்களையும் அலசி ஆராய்ந்து தன்னைத்தானே திருத்திக்கொள்ள வேண்டியது அதன் பிரதான கடமைகளில் ஒன்று. மற்றொரு பிரதான கடமை, எதிர்வரும் ஆண்டில் அக்கட்சி செய்ய வேண்டிய காரியங்களைத் திட்டமிட்டு விவாதித்து அவற்றைத் தீர்மானங்கள் ரூபத்தில் நிறைவேற்றுவது.

இந்த இரண்டு காரியங்களையும் கடந்த வாரம் கூடிய யு. என். பி. கட்சி செய்யத் தவறிவிட்டது. உருப்படியான எந்த தீர்மானங்களும் கட்சியின் ஆண்டுக் கூட்டத்தில் நிறைவேறவில்லை. ஆட்சியை நடத்தும் பிரதம மந்திரியும் இதர மந்திரிகளும் முறையே கட்சியின் தலைவராகவும் இதர உத்தியோகஸ்தர்களாகவும் இருப்பது ஒரு பெருங்குறை. இந்தக் குறையின் காரணத்தினுலேதான் தங்களைத் தாங்களே விசாரணை நடத்த முடியாத நிலையில் தங்களைத் தாங்களே தட்டிக் கொடுத்து பரஸ்பரம் ஒருவரை ஒருவர் மெச்சிக் கொண்டனர், மேற்படி விழாக் கூட்டத்தில்.

பிரதமர் பேசும்போது மட்டும், தம்மையும் தம்மைச் சேர்ந்தவர்கள் சிலரையும் ஒதுக்கி வைத்துவிட்டு, மற்றும் அங்கத்தவர்கள் பலர் அளவுக்கு மீறி சுயதிருப்தியோடு இருந்து வருவதாகவும், இந்த நிலை கூடாதென்றும், புத்திமதி கூறியிருக்கிறார். இதை 'ஊருக்கு உபதேசம்' என்றுதான் கொள்ள வேண்டும். ஏனென்றுல் எந்த சுயதிருப்தி கூடாதென்று பிரதமர் போதித்தாரோ அந்த சுயதிருப்தியைத்தான் மகாநாட்டில் நிறைவேறிய ஒரு பிரேரணை வலியுறுத்துகிறது.

பிரஸ்தாப பிரேரணை வருமாறு: "(அ) பொதுமக்களின் வாழ்க்கைத்தரத்தை ஸ்திரப்படுத்தியது (ஆ) நியாயமான விலையில் போதிய உணவுப் பொருட்கள் கிடைக்க ஏற்பாடு செய்தது (இ) தேசங்களிடையே சமாதானத்தை நிலைநாட்ட முற்பட்டது (ஈ) தேசிய பாஷைகளைக் கல்வி போதனு பாஷைகளாகவும், அரசகரும மொழிகளாகவும் செய்தது (உ) எல்லா மதங்களிடையேயும் பாரபட்சமின்மையையும் சகிப்புத்தன்மையையும் ஏற்படுத்தியதுபோன்ற நற்காரியங்களை செய்து முடித்தமைக்காக இம்மகாநாடு இப்போதைய அரசாங்கத்தைப் பாராட்டுகிறது"

இது ஒரு சுயதிருப்தித் தீர்மானமே தவிர வேறு என்ன? அரசாங்கம் செய்யாத, செய்யத் தவறிய, தவருகச் செய்து முடித்த காரியங்கள் எவ்வளவோ உள்ளனவே, அவற்றைப்பற்றி ஒரு தீர்மானம்கூட, நிறைவேற்றப்படாவிட்டாலும், விவாதத்திற்குத்தானும் வராத காரணம் எதைக் காட்டுகிறது? ஆட்சிக் கட்சியின் சுயதிருப்திக் கொள்கையைத்தானே காட்டுகிறது!

★

தமிழ் காங்கிரஸ் வாதியாக விளங்கிய சாவகச்சேரிப் பிரதிநிதி திரு வி. குமாரசாமி சமீபத்தில் யு. என். பி. கட்சியில் ஒரு அங்கத்தவராக சேர்ந்து கொண்டார். கடந்த வாரம் நடைபெற்ற யு. என். பி. மகாநாட்டில்தான் அவர் முதன்முதலாகக் கலந்து கொண்டு, தாம் ஏன் யு. என். பியில் சேர்ந்தார் என்ற காரணத்தையும் விளக்கியிருக்கிறார். "வகுப்புவாத வாடையும், சமயபேதமும் இல்லாத ஒரே ஒரு கட்சி உண்டென்றுல் அது யு. என். பி. கட்சிதான். இலங்கையில் வகுப்புவாதத்திற்கும் சமயபேதத்திற்கும் இடமில்லை. அதனுல்தான் நான் யு. என். பி. கட்சியில் சேர்ந்துகொண்டேன்" என்று கூறியிருக்கிறார்.

இவருடைய பழைய அரசியல் குருவான திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் இவருக்கு மாருக, அதாவது இப்போதைய அரசாங்கத்தில் வகுப்புவாதமும், தமிழர்களைப் புறக்கணிக்கும் சுபாவமும் வளர்ந்துவிட்டதாக, மேடைக்கு மேடை ஏறி முழங்கி வருகையில், இவர் மட்டும் யு. என். பிக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்குவதைக் கண்டு தமிழ்ப் பேசும் மக்கள், இவர்களில் யார் கூற்று சரியானது என்று சிந்திக்க முற்படுவது இயற்கையே.

திரு குமாரசாமி யு. என். பியில் சேர்ந்தமைக்கு கூறும்

(9-ம் பக்கம் பார்க்க)

திரு. நாகலிங்கத்திற்கு அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை மீறவில்லையாம்!

நீதி மந்திரியாரின் மழுப்பல்

"நீதியரசர் நாகலிங்கத்திற்கு கொடுத்த வாக்குறுதியை எந்தவிதத்திலும் அரசாங்கம் மீறவில்லை. திரு நாகலிங்கம் திரும்பவும் கடமையாற்ற முன்வந்தால் பிரதம நீதியரசாக அவரது தற்காலிக நியமனம் கஸட்செய்யப்படும்" என்று நீதி மந்திரி திரு. விக்கரமநாயகா பத்திரிகை நிருபர்களிடம் பேசும் போது கூறினர். அவர் இது பற்றி தொடர்ந்து வெளியிட்ட தகவலை கீழே தருகிறோம்.

இன்றுள்ள அமைப்பில் நீதியரசர்களை விட உயர்ந்த அந்தஸ்து அட்டர்ணி ஜெனரலுக்கு இருக்கிறது. அட்டர்ணிஜெனரலே பிரதம நீதியரசாக வரவேண்டும் என்றும் காலஞ்சென்ற பிரதமர் திரு டி. எஸ். சேனநாயகா விரும்பியிருந்தா ரென்றும், திரு. எச். எஸ். பஸ்நாயகா அட்டர்ணிஜெனராலாக நியமிக்கப்பட்டபோது அவருக்கு இந்த வாக்குறுதி கொடுக்கப்பட்டதென்றும் நான் அறிகிறேன்.

இந்த விஷயமாக பிரதம மந்திரி என்னைக் கலந்தாலோசியாததற்கு காரணம் இது தான்.

எப்படிப் பார்த்தாலும் திரு. அலன் ரூஸின் இடத்திற்கு திரு. பஸ்நாயகாவே வரவேண்டும். ஏனெனில் திரு நாகலிங்கத்திற்கு அடுத்த படியாக சுப்ரீம்கோட் நீதியரசர் பதவியில் இருந்தவர் அவர்தான்.

திரு. நாகலிங்கம் அக்டோபர் மாதம் ஓய்வுபெறுகிறார் ஆனால் சேர் அலன்ரூஸ்ஜனவரி வரை கடமையாற்றுவார். ஆகவே நிரந்தரமாக அப்பதவிக்கு வரவேண்டியவர் யார் என்பது பற்றி தகராறே வேண்டியதில்லை.

அட்டர்ணிஜெனரல்முன்பு அவரது பதவிகளிலிருந்து விடுவிக்கப்பட முடியாதிருந்த சந்தர்ப்பங்களில் தான் திரு. நாகலிங்கம் ஓய்வு பெறுவதற்கு முன் ரஜாவில் செல்லும்வரை அப்பதவியை வகித்து வருவாரென்றும் அதன்பின் திரு. பஸநாயகா பதவியேற்பாரென்றும்நான் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். திரு. நாகலிங்கம் எப்போது ரஜாவில் செல்ல வேண்டுமென்பதிலும் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. ஆனால் இந்தத் திகதி வெளியிடக்கூடாதென்று அவர்-விரும்பியதால் நானும் இணங்கினேன்.

திரு. நாகலிங்கம் தற்காலிக நீதியரசராக கடமையாற்ற அனுமதிக்கப்பட்டார் என்று பிரதமர் மூலம் நான் அறிகிறேன்.

தற்போதைய சந்தர்ப்பத்தில் சேர். அலன்ரூஸ் விடுமுறையில் செல்லும் நாளிலிருந்து - அதாவது ஜனவரி முதலாம் திகதியிலிருந்து திரு பஸ்நாயகா பதவி ஏற்கவேண்டியவர்.

வேண்டியவர்: சட்டப்படி பார்க்கப் போனால் அரசாங்கம் சரியான நடவடிக்கைதான் எடுத்துக் கொண்டிருக்கிறது. திரு. நாகலிங்கம் இரண்டு தடவை தற்காலிக பிரதம நீதியரசராகக் கடமையாற்றியிருப்பதனாலும், அவர் தமது பதவிகாலத்தை பிரதம நீதியரசரென்ற முறையில் பூர்த்தி செய்யச் சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்பதனாலுமே நான்இந்த விஷயத்தில் தலையிட்டேன். இந்த விஷயத்தை நான் பிரதமமந்திரியோடு விவாதித்து ஒரு ஏற்பாட்டுக்கு வந்தேன். இது திரு. பஸநாயகா, திரு. நாகலிங்கம் ஆகிய இருவருக்கும் உடன்பாடாக இருந்தது.

அறிக்கை

இதன் பிறகு நான் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை விடுத்தேன். ஜூலை 15-ல் சர் அலன்ரூஸ் விடுமுறையில் செல்வாரென்றும் திரு. நாகலிங்கம் ஓய்வு பெறுவதற்கு முன் ரஜாவில் செல்லும்வரை அப்பதவியை வகித்து வருவாரென்றும் அதன்பின் திரு. பஸநாயகா பதவியேற்பாரென்றும்நான் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். திரு. நாகலிங்கம் எப்போது ரஜாவில் செல்ல வேண்டுமென்பதிலும் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. ஆனால் இந்தத் திகதி வெளியிடக்கூடாதென்று அவர்-விரும்பியதால் நானும் இணங்கினேன்.

நிபந்தனை

பிறகு கவர்னர்—ஜெனரலைக் கண்டு இவரது ராஜினாமாப் பத்திரத்தை வாபஸ் வாங்கிக்கொள்ளுமாறு நான் திரு நாகலிங்கத்தைக் கேட்டுக்கொண்டேன். அவரும் அவ்வாறே செய்தார். ஆனால் தமது நியமனம் கஸெட்டில் வெளியிடப்பட வேண்டுமென்று திரு நாகலிங்கம் ஒரு நிபந்தனை விதித்தார்.

அப்போது இங்கிலாந்திலிருந்த பிரதம மந்திரியின் உத்தரவில்லாமல் இவ்வாறு செய்ய கவர்னர் ஜெனரல் விரும்பவில்லை. ஆகவே அவசியமான உத்தரவுகளை விடுக்குமாறு நானும் திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவும் பிரதமருக்கு எழுதினோம். பிரச்னை திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டுவிட்டதால் தாம் திரும்பி வரும்வரை நியமனக் கடித விஷயத்தை ஒத்தி வைக்குமாறு பிரதம மந்திரி தந்தியடித்திருந்தார்.

அவர் திரும்பிய பின், நானும் பிரதம மந்திரியும் இந்த விஷயத்தை திரு நாகலிங்கத்தோடு விவாதித்தோம். ஆனால் தமது நியமனம் கஸெட்டில் வெளியிடப்படத்தான் வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார்.

சங்கடங்கள்

இதில் சில சங்கடங்கள் எழுந்தன. இந்த நியமனத்தை கஸெட்டில் பிரசுரிக்கும் போதே திரு. பஸநாயகாவின் நியமனத்தையும் திரு நாகலிங்கம் விடுமுறையில் செல்லும் தினத்தையும் கஸெட் பத்திரிகையில்வெளியிட வேண்டியது அவசியமாகிவிட்டது.

ஆகவே நான் இதைபற்றித் திரு. நாகலிங்கத்துக்கு எழுதினேன். அவரது நியமனம் ஏற்கனவே பத்திரிகை மூலம் தேசமக்களுக்கு அறிவிக்கப்பட்டுவிட்டதால் உடனடியாக கஸெட்டில் வெளியிட வேண்டிய அவசியமில்லையென்றும் வேலையை ஏற்றுக் கொள்ளுமாறும் கூறி சந்தர்ப்பம்வரும்போது கஸெட்டில் வெளியிடுவதாக நான் வாக்களித்தேன்.

இப்போதுள்ள நிலைமை இது தான். திரு. நாகலிங்கத்துக்குக் கொடுத்த வாக்குறுதியை அரசாங்கம் எந்தவிதத்திலும் மீறவில்லை. அவர் மீண்டும் பதவி பேற்பாராஞல் சரியான சந்தர்ப்பம் வரும் போது அவரது நியமனம் கஸெட்டில் வெளியிடப்படும்.

உருப்படியான....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

காரணம் அந்தரங்க சுத்தியானதா என்பதை ஆராய்ந்து பார்க்குங்கால் அப்படி இருக்க முடியாது என்பது அவர் பேச்சிலிருந்தே புலப்படும் திரு. பொன்னம்பலத்திற்கு சிறிது காலத்திற்கு முன்பு ஏற்பட்டதுபோலவே, திரு குமார சாமிக்கும் இப்போது பதவி ஆசை கொஞ்சம் தலைக்கேறியிருக்கிறது. எப்படியாவது ஒரு முழு மந்திரிப் புரமோஷன் (பதவியேற்றம்) பெற்றுவிட வேண்டும் என்று அவர் துடியாய்த் துடிக்கிறார். மேலும், தொடர்ந்து பதவியில் இருக்க வேண்டும் என்பதும் அவர் ஆசை. அப்படி இருப்பதற்கு ஏற்ற கட்சி எது என்பதைத் தேடிப் பிடித்து அதில் சேர்ந்துகொண்டார் என்றுதான் சொல்ல வேண்டும். அவருடைய இந்த நோக்கம், அவர்தொடர்ந்து பேசிய கீழ்க்கண்ட வாக்கியங்களில் பிரதிபலிக்கிறது.

"இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து யு. என். பி. கட்சி பெற்றிருக்கும் தராதரத்தைப் பார்க்கும் பொழுது, இந்த அரசாங்கம் இந்த நாட்டை இப்பொழுது மட்டுமல்ல, அடுத்த தலைமுறைக்கும், அதற்கப்பாலும் தொடர்ந்து ஆட்சி செய்து வரும் என்பதில் எனக்கு துளிகூட ஐமிச்சங்கிடையாது" என்று கூறியிருக்கிறார்.

இப்பொழுது விளங்குகிறதல்லவா இவருடைய நோக்கம் என்ன என்பது? தமிழ் வாழ வேண்டும், தமிழ்ப் பேசும் மக்கள் வாழ வேண்டும் என்பதெல்லாம் இவர் நோக்கம் அல்ல. எந்தக் கட்சி தொடர்ந்து அரசியல் அதிகாரங்களை வைத்துக் கொண்டு ஆட்சிபுரியுமோ அந்தக் கட்சியோடு ஒட்டிக் கொண்டு பட்டம் பதவிகள் சகிதமாக தான் மட்டும் வாழ வேண்டும் என்பதே இவர் நோக்கம் என்பதை

சென்னைத் தெருக்களிலே 20 ஆயிரம் பேர் வசிக்கிறார்கள்

சென்னை நகரில் உள்ளவர்களா என்று திரு தெய்வநாடை பாதைகளில் 20746 மக்கள் வசித்து வருவதாக சட்டசபையில் மந்திரி பக்தவத்சலம் கூறினர்.

திரு ஏ. ரத்தினத்தின்கேள்விக்கு மந்திரி பதிலளிக்கையில்நடைபாதைகளில் 6292 குடும்பங்கள் வசித்துவருவதாக கூறினர்.

நடைபாதைகளில் மக்கள் வசிப்பதால், நடந்து போகிறவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே நடைபாதையில் வசிப்பவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுத்து, நகரை அழகு படுத்து சிகாமணி கேட்டார்.

15 ஆயிரம் மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க நகரசபை ஒரு திட்டம் தயாரித்துள்ளதாக மந்திரி ஷெட்டி பதில் கூறினர்.

திரு பாலகிருஷ்ணன்: நடைபாதையில்வசிப்பவர்கள்கிராமத்திலிருந்து வந்தவர்களா? அவர்கள் திரும்ப தங்கள் கிராமத்துக்கு சென்று வாழ்க்கையை நடத்த நிலம் ஒதுக்கி, வசதி செய்து தரப்படுமா?

மந்திரி: அவர்கள் வேலை தேடி கிராமத்திலிருந்து, சென்னை வந்துள்ளனர்.

50 சத சுவீப்

12 திகதி 20 திகதி

இன்று முதல் 12 திகதிக்குரிய 50 சத சுவீப் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம். தபாலில் பெற விரும்புவோர் போஸ்டல் ஆர்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

லோட்டர்ஸ் விக்டரி வோர்ட்ஸ் வவுச்சர்களும் பெற்றுக்கொள்ளலாம்.

தேவகி ஸ்டோர்ஸ்,

154, செக்கடித் தெரு, கொழும்பு.

இன்ஷூரன்ஸ் சம்பந்தமானதா .....

கலந்தாலோசியுங்கள்!

வான் காட்

குறைந்த சிலவில் நிகரற்றசேவை

★ மோட்டார். ★ ஆயுள்.

★ தொழிலாளர் நஷ்டஈடு.

கே. கிருஷ்ணசாமி

பிரதம ஏஜன்ட்

வான்காட் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்

மன்சூர் கட்டடம்

மெயின் விதி, கொழும்பு—11.

போன்: 5054 தந்தி: கார்டியன்.

விட்டமின் நிறைந்த போஷாக்கு உணவு குழந்தைகட்கு

"லக்டோஜன்"

டாக்டர்களால் சிபார்சு செய்யப்படுவது

நிதானமாகவும் விடமின் நிறைந்தது இலகுவில் சீரணிப்பது

காய்ப் பாலுக்கு அருந்த படி சிறந்தது

இலவசம் தாய்மார் புத்தகம் கேட்டுப் பெறுக

பெயர்_____

விலாசம்_____

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 12

பிரவேசக் கட்டணம்சதம் 50



பிரவேசக் கட்டணம் சதம் 50

மேல் இரண்டு கட்டங்களுக்கும் பிரவேசக் கட்டணம் ரூ. 1-00 செலுத்தினால் இந்த மூன்றுவது விடையை இனாமாக அனுப்பலாம்.

பெயர்.....

விலாசம்.....

.....

அனுப்பும் மொத்த விடைகளின் தொகை.....

கட்டணத்தின் தொகை ரூ.....ச.....

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்.....

ரொக்கப் பரிசு ரூ. 1,000-00

முதலாவது பரிசு ரூ. 600-00

இரண்டாவது பரிசு ரூ. 300-00

அதிகப்படியான விடைகள் அனுப்பு பவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00

முடிவு திகதி 16-3-55 பி. ப. 5 மணி

சரியான விடை 20-3-55ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றோர் விபரம் 27-3-55ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 2-4-55ல் செக் மூலம் அனுப்பப்படும்

இடமிருந்து வலம்

1. கிறிஸ்தோதயம்—தைப் பொங்கல் விழாக்களை முன்னிட்டு நடைபெற்ற சுதந்திரன் விசேஷ குறுக்கெழுத்துப் போட்டிகள் இரண்டிலும் சேர்ந்தாற்போல் இரண்டாவது பரிசு பெற்ற ஒருவருக்கு இது விசேஷ பரிசாக வழங்கப்படுகிறது.
3. சோவியத் நாட்டில் இது இல்லாதவர்களே கிடையாதாம்
5. காம்பு
6. வைத்தியர்களின் ஏடு
7. அறிவின்மை
9. அந்தக்காலத்தில் தமிழ் மொழி இந்த நாடுவரை பரவியிருந்ததாக சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்
10. எந்த நல்ல காரியத்திற்கும் இதுபுரியும் சிலரும் இருக்கிறார்கள்.
12. வல்லவனுடைய இது மணலிலும் ஆடுமாம்
13. இது என்றால் குழந்தைகளுக்கு கொண்டாட்டம்தான்
16. பிரேதத்தை அடக்கம் செய்வதை விட..... செய்வது மேல் என்று இந்துக்கள் நம்புகிறார்கள்.
17. ஐந்தும் மூன்றும் அடுக்காய் இருந்தால் அறியாத பெண்ணும் இது சமைப்பாள் என்பது பழமொழி
18. இலங்கை முழுவதற்கும் இந்த மொழியையே அரசகரும மொழியாக்கிவிட வேண்டும் என்ற கொள்கையுடையாரும் சிலர் இருக்கிறார்கள்.
19. இதன் காயையும் சிலர் விரும்பி உண்கிறார்கள்.
20. பெண்களுடைய மொழியை இதன் மொழிக்கு ஒப்பிடுவர் புலவர்

மேலிருந்து கீழ்

1. இது பிடித்தவர்களுடைய மூளை சரியாக வேலை செய்யாது.
2. இதுபண்ணுகிற வேலை தான் எல்லாம் என்பார் சோதிடர்
3. தேங்காயை.....யாமல் பால் எடுக்க முடியுமா?
4. இது உள்ள கவிஞர்களை யாரும் போற்றுவர்.
5. ஒருவித ஆடை
6. இந்த ஐந்துவைக் கண்டால் குழந்தைகள் குதூகலமடைவர்
7. கடையேழு வள்ளல்களில் ஒருவன்.
8. பாடகர்களுக்கு பக்க சுருதியாக உதவும் ஒரு நரம்புக் கருவி.
11. இதனுள் முதலில் பிரவேசிக்க யாரும் அஞ்சுவது இயற்கைதான்.
12. இந்தக்கால இரவுகுளிர் நிறைந்ததாய் இருக்கும்.
14. தண்ணீர் வைக்கும் ஒரு பாத்திரம்.
15. மீன் போடும் கூடை
16. இலை
17. விஷ்ணுவின் பத்தாவது அவதாரம்
18. இதை அளவிற்கு மிஞ்சி அலங்காரம் செய்து கொள்வதில் பெண்களுக்கு ஆசை அதிகம்.

இவர்கள் உல்லாசமான சவாரியின் சுகத்தை

நியூ ஹட்ஸன்

அல்லது

ஸன்பீம்

சைக்கிள்களினால் அனுபவிக்கிறார்கள்

★ நியூ ஹட்ஸன் 22 அங்குலம் ரோட்ஸ்டர் கியர் கேஸ், லகேஜ்காரியர், ஸ்டாண்ட் & டெரீ ஆசனத்துடன் விலை ரூ. 205-00

★ ஸன்பீம் (ஆண்களுடையது) 21 அங்குலம் லயிட்டுவரிஸ்ட் விலை ரூ. 210-00

★ ஸன்பீம் (பெண்களுடையது) 21 அங்குலம் லயிட்டுவரிஸ்ட் விலை ரூ. 210-00

சிறுவர் சிறுமிகளின் சைக்கிள்களும் கிடைக்கும்.

பிரிட்டிஷ் ரெயில் அன்கோ. லிமிட்.

மக்லம் ரோட், கொழும்பு.

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி விதிகளின் சுருக்கம்

1 சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள் யாவும் சுதந்திரனில் வெளியாகும் கூப்பன்களில் அல்லது சுதந்திரன் ஸ்தாபனத்தார் அச்சிட்டு இலவசமாக விநியோகிக்கும் கூப்பன்களில் மட்டுமே எழுதப்பட வேண்டும்.

2. போட்டிக்குரிய கட்டணம் இலங்கைப் போஸ்டல் ஆடர், இந்திய மணிஆடர் அல்லது சுதந்திரன் போட்டி வவுச்சர் மூலம் சுதந்திரன், கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

3. சம்பந்தப்பட்ட ஒரு போட்டியில் பரிசுபெற தாங்கள் தகுதியும் உரிமையும் உடையவர்களெனக் கருதும் நேயர்கள் அப்போட்டி முடிவும் பரிசு பெற்றவர்கள் விவரமும் வெளியான மூன்று நாட்களுக்குள் தங்கள் கோரிக்கைகளை ரூபா 25 பிணைப் பணத்துடன் பதிவுத் தபால் மூலம் சுதந்திரன் மனேஜருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

போட்டிவிடை அனுப்ப வேண்டிய விலாசம்.

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி

தபால்பெட்டி இலக்கம் 1183

சுதந்திரன் காரியாலயம், 194ஏ, தட்டாதெரு, கொழும்பு—12.

மக்கத்தலுள்ள....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பதாகும். இதுவே மனிதனுடைய உச்ச நிலையாகும் இறைவனை வெளிக்கண்ணால் பார்க்க முடியாது. ''புலனை அடக்கிப் பூரண அறிவைப் பெற்றவனுக்கு இறைவனின் தரிசனம் கிடைக்கும்'' ஆண்டவனுடைய தரிசனமே பூரண இன்பம் கொடுக்கக் கூடியதும் நிரந்தரமானதுமாகும். ஆண்டவனைப் பற்றிய அறிவை இவ்வுலகில் பெறுகிறோம். இதைப் பெறுவது எப்படி? ''அவர்கள் இறைவனின் திருப்பொருத்தத்தைப்பெற எத்தகைய கஷ்டங்களையும் பொறுமையுடன் சகித்துக் கொள்வார்கள். தொழுகையும் கடைப்பிடித்தொழுகுவார்கள். அவர்களுடைய பணத்தை இரகசியமாகவும் பராசியமாகவும் ஏழைகளுக்கு கொடுத்து உதவிவார்கள். ஆண்டவன் ஒருவனே என்றுலும் பலர் பலவிதமாகத் தரிசிப்பார்கள். இதைப் பெறுவதற்கு முதலில் இறைவனைப் பற்றிய அறிவு வேண்டும். ''அறிவானதெய்வமே'' என்று தாயுமானவர் கூறியதையும் இங்கு கவனிக்க. மக்கள் கொடுத்தநஞ்சை முகமலர்ச்சியுடன் வாங்கி உண்ட சாக்ரடீஸ் ஞானியின் தத்துவமும் இதுவே.

''ஆண்டவன் ஒருவனே என்றுலும் பலர் பலவிதமாகத் தரிசிப்பார்கள்'' என்று இமாம் கஸ்ஸாலி அவர்கள் கூறியதின் கருத்து மற்றும் சமயத்தவர்கட்கும் ஞானமுண்டு என்பதுதான். ''அவர்கள் அவர்கள் வழிபடும் தெய்வங்களை பலவிதமாகத் தோத்திரம் செய்து ஞானமடையலாம்'' என்பதுதான். ஆனால் முஸ்லிம் ஞானிகள் விக்கிரஹத்தை வணங்குவதில்லை என்று முன்னர் சொன்னேன்.

முஸ்லிம்கள் மக்கத்துக்குப்போய் அங்கு வலம்சுற்றும் ''பைத்துல்லா'' என்னும் புனிதப் பள்ளியானது இஸ்லாத்தின் ஏகத்துவ ஒருமைப் பாட்டைக் குறிக்கும் ஒரு எல்லைக் கல்லாகும். இப் பரிசுத்தப் பள்ளியில் விக்கிரஹங்கள் கிடையா. இப்பள்ளியை ''உலக ஏகத்துவ ஆலயம்'' என்று திட்டமாகக் கூறலாம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறு கதை:

அதிஷ்டம்

"சிவகாமசுந்தரி"

சண்முகம் புரண்டு படுத்தான். கண்கள் சூனிய இருளை வெறித்துப் பார்த்தன. உள்ளத்தில் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் கார்த்திகை மாதத்து கருமுகில்கள்போல் ஓடி மறைந்தன. இரவில் ஒரு "சிகரெட்" புகைத்தால்தான் அவனுக்கு நித்திரைவரும். அது இன்று நேற்றல்ல, பன்னிரண்டு வயதிலேயே பழகிவிட்ட பழக்கம். இன்று அவனிடம் ஒரு பீடித்துண்டுகூட இல்லை; எழுந்தான். இருளில் தட்டித் தடவி தன் மேசையடிக்குப் போனான். டோச் லைட்டின் உதவியுடன் மேசையெல்லாம் ஆராய்ந்தான். 'லைட்டும்' இன்னும் சிறிது நேரத்தில் இறந்துவிடுவேன் என்பதுபோல் மின்னியது. நல்ல வேளை! ஒரு பீடி மேசை "டிராய"ரின் இடுக்கில் கிடந்தது. எடுத்துக் கொண்டு கட்டிலுக்குவந்து தலையணையின்கீழ் கையை விட்டுத் தடவினான். அங்கே நெருப்புப் பெட்டியில்லை. சே! என்ன பீடைதரித்திரம் என அனுங்கிக் கொண்டான். மனைவியின் படுக்கைக்கு ஒசைப்படாமல்போய் நெருப்புப் பெட்டியை எடுத்தான். அவள் அமைதியாக தூங்கிக் கொண்டிருந்தாள். குழந்தை மூச்சுவிட முடியாமல் திணறுவதுபோலிருந்தது. கட்டிலில்வந்து உட்கார்ந்து ஒரு குச்சியை தட்டினான். அது மின்னிவிட்டு அணைந்தது. இப்படித்தான் சிலருடைய வாழ்விலும் அதிர்ஷ்டம் மின்னிமறைந்துவிடுகிறது என்ற ஒரு எண்ணம் மனதில் எழுந்தது. இன்னும் இரண்டு குச்சிகள் தான் மிச்சமாயிருந்தன.

அவற்றையும் பாழாக்கிவிட்டால் சோதி ஏசுவாள். காலையில் எழுந்ததும் தேநீர் வைப்பதற்கு அடுப்பு மூட்டவும் குச்சி இல்லாமல்போய்விடும்! மீண்டும் எழுந்து சென்று "டிராய"ரை திறந்தான். கையை உள்ளே விட்டுத் தடவினான். ஒரு சிறு கடதாசித்துண்டு அகப்பட்டது. அதை கசக்கி உருட்டிக்கொண்டான். நெருப்புப் பெட்டியைத் திறந்து ஒரு குச்சியை எடுத்து மிகவும் கவனமாகத் தட்டினான். தீ பிடித்துக் கொண்டதும் உருட்டிய கடுதாசியில் கொழுத்தினான். உடனே நெருப்புப் பிடித்துக் கொண்டது. பீடியைப் பற்றவைத்தான். கடுதாசியில் பிடித்த நெருப்பை ஊதி அணைத்துவிட்டு அதை வீசினான். இரண்டு புகையை இழுத்துவிட்டு வெளியேவந்து வானத்தைப் பார்த்தான். கிழக்கே தேய்பிறைச் சந்திரன் உதயமாகிக் கொண்டிருந்தான். கரிய பெரிய முகில் ஒன்று சந்திரனை மூடிக்கொண்டிருந்தது. நிலாவிற்கும் முகிலுக்கும் இடையில் நடைபெற்ற போராட்டத்தின் தோற்றமாக இருளின் ஓரத்தில் பொற்கோடு ஒன்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. காதலர்களாக இருந்தகாலையில் இப்படியான வேளைகளில் தாம் அனுபவித்த இன்பங்களை எண்ணியபோது பெருமூச்சு விட்டான். மீண்டும் உள்ளே நுழைந்தான். கட்டிலின் மேல் உட்கார்ந்தான். குழந்தையின் அனுங்கல் சத்தத்தைக் கேட்டு அவள் கணகளை விழித்தாள். கணவன் கட்டிலில் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். வாயிலே பீடியின் தணல் தெரிந்தது.

"ஏன் நீங்கள் இன்னும் தூங்கவில்லையா" என்று கேட்டாள்.

'தூக்கம் வந்தால்தானே' என்றான் பெருமூச்சோடு. கையில் எடுத்த பீடியை மீண்டும் வாயில் வைத்து ஒரு புகை இழுத்தான்.

"யோசித்துத்தான் என்ன செய்யலாம்" என்றாள்.

"யோசிக்காமல்தான் கிடக்க முடிகிறதா?"

"வெளியே எங்காவது சாப்பிட்டு வந்தீர்களா?" என்று கேட்டாள். அவன் பேசாமல் இருந்தான்.

"வந்ததும் நீங்கள் ஏன் என்னை எழுப்பவில்லை. நீங்கள் பட்டினிகிடக்க நான் சாப்பிட்டுவிட்டேன்" என்றாள்.

"எனக்குப் பசிக்கவில்லை சோதி நீ சாப்பிட்டதான் வேண்டும். உனக்காக வல்ல—உன் வயிற்றில் வளரும் சிசுவுக்காக" என்று சொன்னான்.

"இப்போது படும்பாடு போதாதென்று இன்னும் ஒன்றில்லை என்று யார் அழுதார்கள்" என்றாள்.

"ஓ! அப்படியெல்லாம் சொல்லாதே—அவன் கந்தசாமி வட்டியை 15ம் திகதிக்கிடையில் கட்டச் சொல்லியிருக்கிறான். தங்கை இந்திரா பொங்கலுக்கு இங்கு வருகிறாளாம். அவளுக்கு எங்கே தெரியப் போகிறது எங்கள் கஷ்டமெல்லாம். வெளியே போனால் மளிகைக் கடைக்காரன் "என்னப்பா! எப்பகாசுதருவாய்" என்று பலர் முன்னிலையில் மானத்தை வாங்குகிறான். வேலையும் கிடைத்தபாடாய் இல்லை"—ஓய்ந்த குரலில் கூறினான்.

"இதற்கு மண்டையைப் போட்டு உடைத்துத்தான் நடப்பதென்ன. பேசாமல் கிடவுங்கள்" என்றாள் எழுந்திருந்தபடி.

"பேசாமல் கிடப்பதென்ன? தூக்குப்போட்டுக் கொள்ள வேண்டியதுதான்" என்றான். அதைக் கேட்டதும் அவள் விம்மி விம்மி அழுதாள்.

"பெண்களே இப்படித்தான். சும்மா சொன்னேன் சோதி! ஏன் அழுகிறாய்"—அவன் கெஞ்சிக் கேட்டான்.

"உங்களுக்குப் பசிக்கவில்லையா?"—சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்தபடி கேட்டாள். அவன் ஒன்றும் பேசாமல் அடிக்கட்டை பீடியை உறுஞ்சினான். குழந்தை அழுதது. தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டாள். கட்டிலிலிருந்து எழுந்து நெருப்புப் பெட்டியைத் தடவினாள்.

"என்ன தடவுகிறாய்?" என்றான்.

"நெருப்புப் பெட்டியைக் காணவில்லை"

"இங்கே கிடக்கிறது. இன்னும் ஒரு குச்சிதான் அதற்குள்ளே இருக்கிறது. இப்ப என்ன செய்யப்போகிறாய்"

"அதை இங்கே தாருங்கோ. அடுப்பை மூட்டிக் குழந்தையின் "லக்டோஜ"னில் கொஞ்சம் கரைத்து உங்களுக்குத் தருகிறேன்" என்றாள்.

"நான் என்ன குழந்தையா? பேசாமல் கிட" என்றான்.

"நீங்கள் பட்டினியாய் இருக்கும்போது எனக்கு எப்படி நித்திரைவரும்" என்று சொல்லிக்கொண்டே குழந்தையைத் தேற்றி நித்திரையாக்கினாள்.

"எனக்குப் பசிக்கவில்லை என்று எத்தனை தரம் சொல்கிறது" என்று கண்டிப்பான குரலில் சொன்னான். அவள் கண்களில் கண்ணீர் அரும்பியது. அதை அவன் எங்கே காண முடியும்? அவளது அமைதி தனது கருஞ்சொல்லால் ஏற்பட்டது என்பதை உணர்ந்தவன் போலப் பேச்சை மீண்டும் ஆரம்பித்தான்.

"சோதி! மனவேதனையால் சில வேளைகளில் கடுமையாகப் பேசிவிடுகிறேன். உன் உள்ளத்தை நான் அறிகிறேன். என்ன செய்வது. என்றோ ஒருநாள் எங்களுக்கும் அதிர்ஷ்டம் வராமலா இருக்கப் போகிறது" என்று சமாதானம் கூறினான்.

"ஏதோ அதிர்ஷ்டம், அதிர்ஷ்டம் என்று கண்ட அதிர்ஷ்டச் சீட்டுகளுக்கெல்லாம் கஷ்டப்படுகிற வேளையில் கிடைக்கும் சிறு பணத்தையும் வீணுக்குகிறீர்கள். எனக்கு இந்த அதிர்ஷ்டத்திலேயே நம்பிக்கை கிடையாது."

"நீ ஒரு அதிசயமான பெண்தான். பெண்களிலே அதிர்ஷ்டத்தை வரவேற்காத பெண் நீ ஒருத்திதான் என்று துணிபாகச் சொல்லுவேன்."

"அதிர்ஷ்டம் என்ற பெயரால் லட்சக்கணக்கான மக்கள் ஏமாறுகிறார்கள். ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து ஏங்கி ஏங்கி எத்தனையோ மக்களின் கவனம் வீணுக்கப்படுகிறது. உழைப்பில் நம்பிக்கை இல்லாதவர்கள்தான் அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்கிறார்கள். எமது அரசாங்கமும் இதை ஆதரிக்கிறது. எவனெவனோ பணத்தைக் கொள்ளையடித்து ஒரு சிலரிடையேபங்கிட்டுத் தானும் பணம் சேர்க்கின்றான். நீங்கள்கூடஇதில் ஏமாறுவதா" என்று அவள் கூறிய வார்த்தை அவனையும் தாக்கியது. அவளுடைய சில விசித்திரமான கருத்துகளை அவன் முன்னரும் பல தடவைகளில் கேட்டிருந்தான். அதனால் ஆச்சரியப்படவில்லை.

"இப்போது என்னையும் உழைப்பில் நம்பிக்கை இல்லாதவன் என்று கூறுகிறாயா" என்றான் அவன்.

"உங்களைக் கூறவில்லை. உங்களுடைய உழைப்புச் சக்தி வீணுகுகிறதே என்று கவலைப்படாத அரசாங்கத்தைத்தான் சொல்ல வேண்டும்" என்று அவள் பேசியது அவனுக்குத் தெளிவாகப் புரியவில்லை. புரிந்ததாகக் காட்டிக் கொண்டான். மேலும் விவாதத்தைத் தொடராது படுத்துக் கொண்டான். அவளும் குழந்தையை அணைத்தபடி தூங்கினாள்.

சண்முகம் பெற்ற தாய் தந்தையரை அறியாதவன். ஒரு அருமைத் தங்கை மட்டும் இருந்தாள். பெற்றோரின் சொத்துச் சிறிதாக இருந்தது. அத்தையின் ஆதரவில் இருவரும் வளர்ந்தனர்; கல்வி கற்றனர். சண்முகத்திற்கு ஒரு கம்பெனி ஏற்பட்ட கடன்களைச் சொத்துகளை விற்று அடைத்தான். மிகவும் சிக்கன வாழ்வு வாழ்ந்து சிறு தொகை சேமித்தான். தங்கைக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்துவைக்க எண்ணியிருந்தான். ஆனால் அவளுக்கு ஒரு காதலன் இருப்பதைப் பின்னரேயே அறிந்தான். ஒரே தங்கை; அவளின் வாழ்வை வளமாக்கி வைக்கவேண்டும் என்பதே அவன் குறிக்கோளாயிருந்தது. அந்தக் காதலன் ஒரு பத்திரிகையின் ஆசிரியன். முற்போக்குவாதி என்று பலராலும் புகழப்பட்டவன். இதை அறிந்து சண்முகம் மகிழ்ச்சி அடைந்தான். திருமணப் பேச்சை எடுத்தபோது அவன் 'சீதனம்' என்ற பேச்சை எடுத்தது சண்முகத்திற்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. தனது தந்தையைத் திருப்திப்படுத்த என்று அந்த முற்போக்குவாதி கூறினான். தங்கையின் வாழ்வு பாழாகிவிடப்படாது என்ற எண்ணத்தில் உடன்பட்டான். சேர்த்துவைத்திருந்த பணத்தோடு மேலும் கடன்பட்டு 5000 ரூபா பணமாகக் கொடுத்தான். மேலும் சில செலவுகள் ஏற்பட்டன. திருமணம் முடிந்ததும் அவனுக்கு ஓரளவு நிம்மதி ஏற்பட்டது. மிகவும் சிக்கனமாக இருந்து பாதிக் கடனை அடைத்தான். இதற்கிடையில் அவனையும் திருமணம் செய்துகொள்ளும்படி தங்கை வற்புறுத்தினாள். சோதி அவனது சொந்த மைத்துனிதான். ஆனால் ஏழை. அவனுக்கு அவளை நன்கு பிடித்துக்கொண்டது. தொழில் என்ற துணிவில் கைப்பிடித்தான். ஒரு ஆண்டு அவர்கள வாழ்வு இன்பமாகத்தான் ஓடியது. அவன் ஓரளவுக்கு சுயமரியாதை உள்ளவன். எனவே பழி விழுந்தது. தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டான் என்று பொய்க் காரணம் காட்டி வேலைக்குச் சீட்டுக் கிழிந்தது. அவன் வேலை இழந்து விட்டான். இதனால் ஏற்பட்ட துன்பங்கள் அப்பப்பா! அவன் வேலை தேடி அலைந்தான்; அலைந்தான்; அல்லும் பகலும் அலைந்தான். ஓயாத மனப் போராட்டத்துடன் அலைந்தான். கட்டிய மனைவி, பெற்ற குழந்தையைக் காப்பாற்ற முடியாது கலங்கினான். கடன் வாங்கி எத்தனை நாள்தான் சீவிக்க முடியும்—சிந்தனைச் சிக்கலிலும் எப்படியோ அயர்ந்துவிட்டான்.

காலையில் எழுந்தபோது ஏழு மணியாகி விட்டது. அவ்வளவு நேரம் தூங்கிவிட்டதை எண்ணி ஆச்சரியப்பட்டான். மூஞ்சைக் கழுவிவிட்டுக் கடைத்தெருப் பக்கம் போனான். காலை வண்டி ஆறு மணிக்கே அங்கு வந்துவிடும். தெருவிலே எல்லோரும் பத்திரிகையைப் புரட்டிப் பார்த்துக்கொண்டு நின்றனர். ஜிம்காணா அதிர்ஷ்டப் பரிசு அன்று வெளியாகும் என்பது அவன் ஞாபகத்தில் வந்தது. பத்திரிகையை ஒருவர் பின்னே போய் நின்றான். ஒரு தொண்டு கிழம் கூட தடியை ஊன்றியபடி, "மேனை இந்த 'டிக்கெட்' நம்பரைப் பார்த்துச் சொல்லனை" என்று கேட்டது. பத்திரிகை வைத்திருந்தவன் பார்த்துவிட்டு, "உனக்கு இல்லையப்பா" என்று சொன்னான். மூஞ்சியைத் தொங்கப் போட்டபடி கிழவன் போனான்.

சண்முகம் வாரம் முழுதும் மனனம் செய்து வைத்திருந்த அந்த இலக்கத்தை எண்ணிப் பார்த்தான்! பத்திரிகையைப் பார்த்தான்! கண்களைத் துடைத்துப் பார்த்தான்! ஆமாம்! மூன்றாவது பரிசு! என்று பிரமை, எழுபத்தையாயிரம்! மகிழ்ச்சியால் உடல்பூரித்தது! வீடுநோக்கி ஓடினான்—ஓடினான் — அவன் மனதிலே இதுவரை பட்ட துன்பங்கள் எல்லாம் ஓடின-கடன்கள் மறைந்தன; புது வீடு; சோலைகள்; வயல்கள்; புதிய தொழில்கள்; மனைவியோடு வாழப்போகும் இன்ப வாழ்வு; வறுமை வந்தபோது திரும்பிப் பாராதவர்களின் கெஞ்சல் யாவும் மனத்திரையில் ஓடின. வீட்டிற்கு வந்துவிட்டான். "சோதி! மூன்றாம் பரிசு, எழுபத்தையாயிரம்" மூச்சுவிட முடியாமல் கூறினான். ஓடிப்போய் மேசை 'டிராய'ரை இழுத்தான். தடவினான் - தடவினான். 'டிக்கெட்' டைக் காணவில்லை. ஒரு கணத்தில் உடலெல்லாம் வியர்த்துவிட்டது. 'டிராய'ரில் இருந்தவற்றையெல்லாம் எடுத்து வீசினான். இல்லை! "சோதி! டிக்கெட்டை எடுத்தாயா என்று கத்தினான். 'இல்லையே' என்றபடி கணவனின் கோலத்தைப் பார்த்து அஞ்சினாள். அவள் நிலத்தைப் பார்த்தாள். "இது என்ன" என்று கூறியபடி பாதி எரிந்து கருங்கிய துண்டை எடுத்துக் கொடுத்தாள். "ஆமாம் அதுதான்! அதுதான்!" என்றபடி அதைப் பிரித்தான். இரவு பீடிபற்ற வைத்த ஞாபகம் வந்தது. ஆவலோடு விரித்தான். எரிந்து எஞ்சிய துண்டு. இலக்கம்கூட அரைகுறையாய் எரிந்துவிட்டிருந்தது.

அவன் அறிவிழந்து வீழ்ந்தான். சிறிது நேரத்தில் அறிவு தெளிந்தது. மாயை தெளிந்தது போன்ற ஒரு உணர்வு. அவன் உள்ளத்திலே புதுத் தெளிவு ஒன்று ஏற்பட்டது.

"உழைப்பில் நம்பிக்கை இல்லாதவர்கள்தான் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை வைக்கிறார்கள்" என்று அவன் மனைவி கூறியது அவன் இதயத்தில் ஒலித்தது. அதிர்ஷ்டத்திற்காக ஏங்குபவர்கள் உழைப்பில் நம்பிக்கை இல்லாதவர்களல்ல—உழைப்பாளர் சக்தியில் நம்பிக்கை அற்றவர்கள். உழைப்பவர் சக்தி ஒன்று திரண்டால்? இந்தக் கேள்வி அவன் முன் பூதாகாரமாக—வாழும் வழிகாட்டி நின்றது.

சண்முகம் ஒரு ஏழை. வேலையின்றித்திண்டாடும் மனிதக்கூட்டத்தில் அவன் ஒரு அங்கம். சுயமரியாதை கொஞ்சம் இருந்ததால் முதலாளிவர்க்கத்தால் வஞ்சிக்கப்பட்டவன்.

வாழத் தெரியாது-வாழ முடியாது புழுப்போல் துடித்த அவனுக்கு சுவீப் டிக்கட் அதிர்ஷ்டத் தேவதையாகக் காட்சியளித்தது. அதன் அனுக்கிரகத்திற்காக-ஆயிரமாயிரம் அப்பிராணிகளுடன் சேர்ந்து அவனும் அங்கலாய்த்தான்.

என்றாலும் ஒருநாள் சுவீப் டிக்கட் விழுந்தது. தனக்கே என்ற பிரமை. ஆனால் அந்த டிக்கட் எரிந்து கருகி அரைகுறையாய்க் கிடந்தது. அதிலே அவன் பிரமை கருகியது. மூட அங்கலாய்ப்பும் கருகியது.

வாழ்வுக்காகப் போராட வேண்டுமே அல்லாது அதிர்ஷ்டத்திற்காக அங்கலாய்ப்பதல்ல என்ற புதிய உண்மை அவன் உள்ளத்திலே கொழுந்துவிட்டது. வாடிய அவன் வாழ்விலே ஒரு புதிய தெம்பு. எதிர்கால வெற்றியிலே ஒரு நம்பிக்கை.

இந்த வாழ்க்கை உண்மையை அழகாகச் சித்தரித்து சோபையோடு தருகிறார் செல்வி சிவகாம சுந்தரி.

புன் சிரிப்பிலே.....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறு கிளியே - கண்ணம்மா செல்வக் களஞ்சியமே' அழாதே என்று சிங்காரப் பண் பாடித் தேற்றுகிறான்.

அழுத குழந்தை அடங்கித் தந்தைகாட்டிய தமிழினைத்திலே மகிழ்ந்து சிந்திய ஒள்ளிய மணிச்சிரிப்பு அவனுள்ளத்தைக் கொள்ளைகொண்டது.

அழுங் குழந்தையாயினுஞ் சரி; அன்பு மொழி பேசிப் புன்னகைத்து அளவிலா மகிழ்வூட்டும் பூங்குழந்தையாயினுஞ்சரி, அவர்களுடன் வாழும் வாழ்க்கையே இன்பத்திலும் இன்பம் பயப்பது என்பதைச் 'சின்னச் சின்ன வீடுகட்டிச் சிங்கார வீடு கட்டி ஒன்றுசேர்ந்து விளையாடி உவப்பூட்டும் குழந்தைகளுடன் ஒன்றிப் பழகி உணர்பவர்களன்றி, மற்றையோர் எப்படித்தான் அறிந்துகொள்ள முடியும்!

எம். ஜி. எம். ஸனபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படார்! ஆம், பத்மினியின் இந்த அடி (விழுந்தபிறகு) சிவாஜிக்கு ஒரு அதிர்ஷ்ட அடியாக மாறியது. தனது அடிக்கு ஈடு செய்ய பத்மினி, கணேசனுக்கு ஒரு புதுக் காரே வாங்கிக் கொடுத்தாளாம் 'எதிர்பாராதது' படத்தில் நிகழ்ந்த இந்த எதிர்பாராத சம்பவம் எதிர்பாராத அதிர்ஷ்டத்தை அளித்து விட்டது.
இப்படம் சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் சீக்கிரத்தில் திரையிடப்படும்



சோகத்தின் சித்திரம் "அசோகா"

ஒரு ஏழைக் குடும்பம். பிறப்பதெல்லாம் 'பெட்டை குட்டிகள்' சீதனத்தை எண்ணிய பெற்றோர்கள் ஏங்குகிறார்கள். வேறு மொரு பெண் குழந்தை பிறக்கிறது. இந்த நேரத்தில் யாத்திரை சென்ற ஒரு குடும்பம் வந்து சேர்கிறது. 'சீமாட்டிக்கு' பிரசவ வேதனை. குழந்தையை மாற்றிவிடுகிறாள் கிழப் பேத்தி.

இரு குழந்தைகளும் இரு வீடுகளில் வளர்கிறார்கள். ஒரு வீட்டில் பட்டினி. மற்ற வீட்டில் படாடோபம். ஏழை வீட்டில் வாழும் செல்வந்தரின் மகன் நகரத்திற்கு வேலை தேடி வருகிறான். அதே செல்வந்தர் வீட்டில் வேலை கிடைக்கிறது. செல்வந்தர் வீட்டில் வாழும் ஏழை வீட்டு மகளுக்கும் அவனுக்கும் காதல் ஆரம்பிக்கிறது. பெற்றோர் எதிர்க்கின்றனர். அவன் வெளியேற்றப்படுகிறான். வேறு ஒருவருக்கு விவாகம் செய்து வைக்கும் முகூர்த்தமும் நெருங்குகிறது. காதலன் தன் இதயக் காதலியை கடத்திச் செல்கிறான் சொந்த வீட்டிற்கு. வெறி

அசோகா படத்தில் ஒரு நடனக் காட்சி

பிடித்த செல்வந்தனும் பின் தொடர்கிறான். ஏழை வீட்டில்—அவன்மீது சுடுகிறான்; வாலிபன் விழுகிறான். உண்மையறிந்த ஏழை வீட்டுத் தாய் நிஜத்தை ஆத்திரத்தோடு கூறுகிறாள். அதற்கிடையில் காதலன் உலகுக்கு காதலியும் போய்விட்டாள்.

இந்தக் கதையின் கருவுலம் முன் வெளிவந்த ஹிந்திக் கதையைப் பிரதிபலித்தபோதிலும், பணவெறியையும்—ஏழைகள் கஷ்டத்தையும் ஓரளவுக்கு நெஞ்சுருகத்தரிக்கிறது. எவருடைய நடிப்பும் பிரமாதம் என்று சொல்வதற்கில்லை. சிலபாட்டுகளின் ஒலிப்பதிவு காதை மட்டுமல்ல உயிரையே பதைத்தெடுக்கிறது.

மொத்தத்தில் இது ஒரு சோகக் கதை. சமுதாயத்தின் சோகத்தை காட்டும் கதை. நடிப்பு, தயாரிப்பு எல்லாமே சோக மயம்.

அசோகா தயாரிப்பாளர்களின் இந்தப் படம் சினிமாஸ் லிமிட்டட் ஸ்தாபனத்தாரால் காமினி, சபயர் இன்னும் பல தியேட்டர்களில் திரையிடப்படுகிறது.

—ஸ்ரீ

மலர்களில் நடந்தேன்..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் நாங்கள் கண்டோம். அதோடு ஒவ்வொரு கலைஞனும் பூரண வளர்ச்சியடைய கலை மக்கள் சொத்தாக வேண்டும்.

கேள்வி:-

6 சோவியத் நாடு கலையின், கலைஞர்களின் சொர்க்கம் என்று கூறியுள்ளீர்களே. இப்படி நீங்கள் கூறுவதற்கான காரணம் என்ன?

பதில்:

ஆம்; அந்த நாடு உண்மையில் கலையின் சொர்க்கமே தான். அங்கு கலை, கலைஞர்கள் என்றுல் 20 கோடி மக்களுமே பக்திப்பரவசப்பட்டு நிற்கிறார்கள். கலைமீது மக்களின் இத்தகைய ஈடுபாட்டை நான் வேறு எந்த நாட்டிலும் கண்டதுகிடையாது. கலைக்காக அவர்கள் எதையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். கலையை வளர்க்க அங்கு மந்திரி இலாகாவே உண்டு. நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கலை அரங்குகளும், படக்காட்சி மண்டபங்களும் ஏராளமாக இருக்கின்றன. ஒவ்வொரு தொழிற்சாலையிலும், கூட்டுப் பண்ணையிலும் கலாநிலையங்கள் உண்டு. அங்குலட்சக்கணக்கானவர்கள் கலை பயில்கிறார்கள். அந்த நாட்டின் ங்ந்தக்கோணத்திலாவது ஒருவர் கலையில் தன் திறமையை காட்டிவிட்டால்போதும், உடனே முழு நாடுமே செயல்படுகிறது. அவர் பற்றி சாதாரண மக்களின் கூட்டங்கள் தொட்டு ஆட்சியின் மாமன்றம்வரை விவாதிக்கிறது. ஆற்றலுள்ள ஒவ்வொரு கலைஞனும் அந்த நாட்டிலே புகழின் உச்சாணிக்கு உயருகிறான். இது கலையின், கலைஞர்களின் சொர்க்கமல்லாமல் வேறென்ன?

அந்த நாட்டிலே கலைஞனுக்கு வாழ்க்கைப் பிரச்னையே கிடையாது. ஆட்சியின் தலைவர்களுக்கு கிடைக்கும் ஊதியத்திற்கு மேலாக அங்குள்ள சிறந்த கலைஞர்களுக்கு கிடைக்கிறது. ஒவ்வொருவரும், கலா நிகழ்ச்சிகள் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி மாதா மாதம் மிகப் பெரிய சம்பளம் பெறுகிறார்கள். அதோடு சோவியத் மக்கள் கலைஞர்களை கடவுள்கள் போல மதிக்கிறார்கள்! உதாரணமாக போல்ஷி தியேட்டரைச் சேர்ந்த, உலகத்தின் முதல்தர பலே நாட்டியக் காரி கலினுலனோவா அங்கு தேவதையாக மதிக்கப்படுகிறாள். அவளுக்கு ஆவன செய்து தருவதில் முழு சோவியத் ஆட்சியுமே செயல்படுகிறது. மாதம் 15 ஆயிரம் ரூபிள் பெறும் அவளை சோவியத் மக்கள் தங்கள் பெருமைச் சின்னமாக மதிக்கிறார்கள். மறைந்துபோன ஒரு கலைஞர். அவரது பதிவுத்தட்டை மாஸ்கோ ரேடியோவிலும் சரி வேறெங்கும் சரி போடுமுன் அறிவிப்பு வரும். உடனே மக்கள் கண்ணீர் வடிய மௌனம் அனுஷ்டித்து அவருடைய ஞாபகத்திற்கு கௌரவம் செய்கிறார்கள். 'ஏன் இந்த பக்தி' என்று அவர்களிடம் இதுபற்றிக் கேட்டேன். "அவர் எங்கள் கலைஞன். எங்கள் ஆத்மீக கடவுள்' என்று விடை வந்தது. கலைஞனுக்கு உள்ளத்திலே கோயிலெடுக்கும் அந்த நாடு கலைஞனின் சொர்க்கமல்லாது வேறென்ன?

இந்த நேரத்தில் என் அனுபவங்களில் சிலவற்றை இங்கு கூறுவது பொருந்தும். உலகப் பெரிய கலை அரங்கான போல்ஷி தியேட்டரில் நடனம் ஆட நான் தயாரானேன். மேடைக்குப் போகும் பாதையில் இரத்தினக் கம்பளங்கள், அதன் மேல் நெடுக பூக்குவியல்கள். திகைப்படைந்த நான் ஒதுங்கி நடந்தேன். என்னை அழைத்துச் சென்ற அலங்கரிப்புப் பெண் ஏதோ 'தாரா-தாரா' என்று சைகை காட்டினாள். புரியாத நான் மொழிபெயர்ப்பாளியை வினவினேன். "தாரா, இந்த நாட்டிலே நாங்கள் கலைஞர்களை மதிக்கிறோம். உங்கள் பாதங்கள் பட இந்தக் கம்பளங்கள் போதாது. எனவே நீங்கள் மலர்கள் மீது நடக்கவேண்டும் என்று சோவியத் மக்கள் விரும்புகிறார்கள்." இந்த வார்த்தைகளைக் கேட்டதும் என் இதயம் உணர்ச்சியால் வெடித்தது. என்றும் கலங்காத என் கண்கள் கண்ணீர் உகுத்தின.

நடனம் முடிந்த திரை இழுக்கப்பட்டது. என் காலடியிலே மக்கள் கூட்டம் மலர்களை வாரிச் சொரிந்தது. உடனே ஆட்சித் தலைவர்களிடமிருந்து விருந்துக்கு அழைப்பு வந்தது. போனேம். அங்கு மார்ஷல் புல்கானின் என்னை வரவேற்றார். தாழ்ந்து என் கரத்தை மிருதுவாகவும்—கௌரவத்துடனும் எடுத்து அரை மணித்தியாலங்களுக்கு முத்துமிட்டார். அவர் கண்களில் நீர் வடிந்தது. குழந்தைபோல என் நடனத்தை மெச்சிக்கொண்டே இருந்தார்.

பெரியவர்கள் மட்டுமல்ல, சின்னஞ்சிறு குழந்தைகளும் கூட கலைஞர்கள் என்றுல் பையித்தியம் பிடித்தவர்கள் போலாகிவிடுகிறார்கள். ஒரு நாள் ஒரு கடையில் நான் நின்றுகொண்டிருந்தேன். ஒரு சிறுமி. 12 வயதிருக்கலாம். 'தாரா, தாரா' என்று கத்திக்கொண்டு ஓடிவந்து என் வதனங்களை மாறி மாறி முத்தமிட்டாள். 'உங்களை டெலிவிஷனில் பார்த்தேன். அபாரமாயிருந்தது' என்று ஆனந்தக் கண்ணீர்விட்டபடி கூறினுள். இதுபோல நூற்றுக்கணக்கான அனுபவங்கள். இவை எல்லாம் கலைக்கு, கலைஞர்களுக்கு சோவியத் ஆட்சியும், மக்களும் அளிக்கும் மதிப்பையும்—மட்டிட முடியாத ஆதரவையுமே குறிக்கிறது. கலையும்—கலைஞனையும் போற்றும் நாடு உண்மையில் கலையின் சொர்க்கம் தானே.

இத்துடன் பேட்டி முடிவடைந்தது. கரங்கள் மீண்டும் கைகூப்பின.

மாஸ்கோ போல்ஷி தியேட்டரில் திருமதி தாரா கௌதமி நடனமாடியபோது எடுத்த படம். இதன் வேறொரு தோற்றத்தைத்தான் 3 கோடி பிரதிகள் விலையாகும் சோவியத சஞ்சிகை தனது அட்டைப் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் கால் பந்தாட்ட கோஷ்டியோடு ருஷ்ய பந்தாட்ட வீரர்கள் சமீபத்தில் விளையாடிய போது எடுத்த படம். இந்த பந்தாட்டத்தில் ருஷ்யா 11-0 கோல்களால் வென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமான 3வது வாரம்!

எல்பின்ஸ்டன் ரொக்ஸி

காலை 10மணி, பி.ப. 2மணி, மாலை 6, இரவு 9-30மணி

மாளிகைப் பிரபுவிற்கும் மண்குடிசை மடந்தைக்கும் ஏற்பட்ட காதலைச் சித்தரிக்கும் சிறந்த சமூகக் கதை.

எடிஜூனியர், டிஸ்னி ரஞ்சனி

முதலியோர் நடிக்கும்

சிலோன் தியேட்டர்ஸாரின் மகத்தான வெளியீடான

சுரங்கனி (சிங்களம்)

வெற்றிகரமான 3-வது வாரம்!

செல்லமஹால்

காலை 10-00, பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30

வீ. நாகையா, பி. கே. சரஸ்வதி, பாஞ்சயா, மனேகர், வித்யாவதி, நம்பியார் நடித்த

நண்பன்

"திலக்"

விற்பனையாகிறது!

தினகரன் குறுக்கெழுத்துப் போட்டி நிர் 8க்கும் சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி நிர். 12க்கும் சரியான விடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தனிப் பிரதி சதம் 25.

தபால் மூலம் சதம் 30க்கு முத்திரைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

மோகன் குமார் அன் கோ.,

66, முதலாம் குறுக்குத்தெரு, கொழும்பு-11

முருகன் டாக்கீஸ்

[ஜிந்துப்பிட்டிய]

தினசரி மாலை 6-30 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு பிற்பகல் 3-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கும்
ஞாயிறு காலை 10-00 மணிக்கும்

உங்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்கும் குதூகலச் சித்திரம்!

ஷையாம் - கோப்
குலாம் - மீனு

முதலியோர் நடிக்கும்

கலேபாதல்

[ஹிந்தி]

சங்கீதம்: ஷியாம், சுந்தர்.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

சென்ட்ரல்

தினசரி மாலை 6-30 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு பிற்பகல் 3-15 மணிக்கும், ஞாயிறு காலை 10-15 மணிக்கும் காட்சிகள்.

வெற்றிகரமான 2வது வாரம்!

பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் வேண்டுகோளின்பேரில் மீண்டும் திரையிடப்படுகிறது

சென்ற ஆண்டின் மிகச் சிறந்த ஹிந்திப் படம்!

இரண்டு அனுதைக் குழந்தைகளின் சோகக் கதை.

நம் சமூகத்தில் இன்றுள்ள ஒரு பெரும் பிரச்னை—அனுதைக் குழந்தைகளின் பராமரிப்பு

அனுதைக் குழந்தைகளின் வாழ்க்கைப் போராட்டத்தைச் சித்தரிக்கும் ஒரு மாபெரும் கலாசிருஷ்டி

ராஜ்கபூரின் துணிகர முயற்சி.

ஒவ்வொருவரும் அவசியம் பார்க்கவேண்டிய உன்னதமான படம்!

ரத்தன்குமார், பேபி நாஸ், டேவிட் (சென்ற ஆண்டின் சிறந்த குணசித்திர நடிகர்)



ஆர். கே. பிலிம்ஸ்

பூட்பொலிஷ் (ஹிந்தி)

(தமிழ் உரை விளக்கத்துடன்)

வருகிறது!

எதிர்பாருங்கள்!!

கஸ்த்தூரி பிலிம்ஸாரின்

"மேனகா"

லலிதா, கே. ஆர். ராமசாமி, ராகினி நடிப்பது.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சுடச்சுட

கோஷமும் நின்றபாடில்லை. கரகோஷம் செய்தால்தான் பிரசங்கி நிறுத்துவார் என்பது ஜனங்களின் முடிவு. இதை உணர்ந்துகொண்ட பிரசங்கி யெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தைரியத்தை இழக்காது—வெட்கத்திற்கு அஞ்சி—கண்டபடியெல்லாம் பேசினார். அப்பொழுது திடீரென எங்கிருந்தோ ஒரு நபர் ஓடிவந்து தலைமைதாங்கிய பிரமுகரை படம் பிடித்தார். அதோடு முடிவுற்றது பிரசங்கியின் சொற்பொழிவு. அவ்வளவுதான் அங்கே கூடியிருந்த அத்தனை பேரும் போட்டாக்காரரை சூழ்ந்து கொண்டார்கள். இதுதான் தருணம் என்று மெதுவாக, தலைமைதாங்கிய அந்தப் பிரமுகர் நழுவிவிட்டார். இந்த நரக வேதனை தாங்க முடியாதவாறு படம் பிடித்தவர் மேடையின் மேல் ஏறிக் கொண்டு 'மகாஜனங்களே உங்களைப்போன்று நானும் இந்த பிரசங்கியின் பிரசங்கத்தில் அதிக கேரிபமுற்றவனானேன். என் கை உங்களுடைய கரகோஷத்திற்கு ஒத்துழைத்தது ஆனால் வலித்தது. இதில் ஒரு யுக்தியைக் கையாண்டேன். படம்பிடிப்பதற்கென ஒரு நிருபர் வரும் வரை பேசிக்கொண்டிருக்கப் போகும் இந்த பிரமுகரை ஒரு வெறும் 'காமரா' கொண்டே படம் பிடித்தேன். அவரும் திருப்தியுடன் பேச்சை நிறுத்திஞர். உங்களுடைய பிரமத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க எண்ணிய என்னை சும்மா விட்டுவிடுங்கள்' என்று சபையோர்களைக் கேட்டுக் கொண்டார். ஒரே கரகோஷம். ஒரே ஆரவாரம். அதிகப் பிரசங்கியைத் தேடினார்கள். "மண்மாலை" சூட அதற்கு அவர் அங்கிருந்தால் தானே. 'நிதில்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல் மிக்க சூரிய சக்தி

சூரியன் பல்லாண்டுகளாக படும். சூரியன் மிகுந்த வெப் பிரகாசித்துக் கொண் பத் தன்மையை அடைந்தவு டிருக்கிறது. சூரியனிட டன் அதிலுள்ள சகல ஜல மிருந்து வெளியாகும் சக்தி வாயும் தீர்ந்து நிலை தடு அபூர்வமானது. சூரியனிட மாறிச் சுருங்கிக் கொண்டே மிருந்து வெளிப்படும் சக்தியி வந்து, அது சுருங்கும் போது லிருந்து பூமிக்குக் கிடைப் இழுக்கும் சக்தியால் சுருங்கு பது இருநூறு கோடியில் ஒரு வதால் சிறிய சக்தி வெளிப் பங்கேதான். ஆகவே சூரிய பட்டு, அதைக் கொண்டு னின் சக்தியை அளவிடுவது சில நூறு மில்லியன் (Million) சுலபமல்ல. சூரியனின் ஒளி ஆண்டுகள் வரை நிலைக்கும். வீசும் சக்தியானது எவ்வித பின்பு இருளடைந்து போ இரசாயன மாறுதலாலும் கும். ஆனால் சூரியனின் (Chemical reaction) ஆனதன்று அழிவுக் காலத்தை நாமோ சூரியனில் அதிகம் அல்லது எந்த உயிரோ காண ஜலவாயு (Hydrogen) இருப்ப உயிருடன் இருக்கப் போவ தாகவும் இந்த ஜலவாயு காலத்தில் ஹீலியமாக (Heluim) மாறுவதாகவும், இப்படி மாறுவதால் பொ ருள் அழிவு உண்டாகின்ற தெனவும் கூறுகின்றனர். இத னால் உண்டாகும் சக்தியே (Energy) சூரியனிலிருந்து வெளிப்பரவும் அபாரமான உஷ்ணத்துக்கும், ஒளிக்கும் காரணமென்பதே ஜெர்மன் தேசத்து விஞ்ஞானியாகிய பேதே (Bethe) அவர்களின் முடிவாகும். இதை விஞ் ஞான உலகம் ஒப்புக்கொண் டிருக்கின்றது.

இந்த நூற்றாண்டின் ஆரம் பத்தில் கதிரியக்கம் (Radio-activity) கண்டுபிடிக்கப்பட்டு அதினின்று பரவிய அணு ஆராய்ச்சியின் மூலம் சூரி யன் அளவற்ற, சக்தியைப் பெற்றிருக்கும் தன்மையை, விளக்கிக் கூற முடியும் என் பது டலனுயிற்று. சூரியனின் உட்புறத்தே தோன்றும் அணுசக்தியே இதற்குக் கார ணமாகும். சூரியனின் உட் புறத்தே உள்ள ஜலவாயுவா னது ஹீலிய (Heluim) மாக மாறும்போது வெளியாகும் சக்தியே, சூரியனின் சக்திக் கும் காரணமாகும் என்பதே யாகும். இந்த ஜலவாயுவா னது ஹீலியமாக ஒரே தட வையில் மாறிவிடுவதில்லை. ஆனால் ஒன்றுக் கொன்று சம் பந்தப்பட்ட தொடர்ச்சி யாக ஏற்படும் ஆறு மாறுதல் களுக்குப் பின்பே ஜலவாயு வானது ஹீலியமாக (Heluim) மாறுகின்றது. முதலில் எந்த மூலப் பொருளைக் கொண்டு தொடர்ச்சிகரமான மாறு தல்கள் ஆரம்பிக்கப்பட்ட னவோ அதே மூலப் பொரு பொருளில்தான் கடைசி முடிவும் ஏற்படுகிறது என் பதுதான். இந்த மாறுதல் கள் முடியாது நடைபெறு கின்றன.

சூரியனின் மொத்த நிறை யில் மூன்றிலொரு பங்கா னது ஜலவாயுவால் ஆக்கப் பட்டுள்ளது. அதாவது விஞ் டிக்கு $5.92X10^{14}$ கிராம்கள் ஜலவாயு அழிக்கப்படுமா யின் சூரியன் இன்னும் 33-35 ஆயிரம் மில்லியன் (Mjllion) ஒரு மில்லியன் பத்து லட்சம் ஆண்டுகள்வரைதான் செய லாற்ற முடியும். ஜலவாயு ஹீலியமாக மாற்றப்படும் போது உண்டாகும் இந்த ஹீலியச் சாம்பல் சூரியனின் மத்திய பாகத்திலே அளவில் அதிகமாகிக் கொண்டே வரு கின்றது. இந்த ஹீலியமா னது கனமானதும், வெளிச் சம் சுலபமாக அதனுள்ளே செல்ல முடியாமற் போய் விடும். இதனால் சூரியனின் மத்தியிலே ஏற்படும் உஷ்ண மானது தற்போதுள்ளதை விட மிக உயர்த்தப்படும். அப்போது ஜலவாயு ஹீலிய மாக விரைவில் மாற்றப் படும். இதனால் சூரியன் மிக வும் உஷ்ணமாகவும், பிரகா சமாகவும் மாறிவிடும். அதிக சக்தி உண்டாவதால் அதிக மான ஒளி வெளிப்படும்.

காலம் செல்லச் செல்ல உயிரினம் இந்த வெப்பத் தைத் தாங்க முடியாமல் அழிந்து போக வேண்டி ஏற் கையே ரசாயன சக்தியாக மாற்றிச் சேமிக்கின்றன. சுமார் இரண்டாயிரத்தி லொரு பங்குதான் உணவின் மூலம் நமக்குக் கிடைக்கின் றன. சூரிய சக்தி இன்றேல் தாவரங்கள்—ஏன் நாமே வாழ முடியாது. சூரிய சக்தி மூலம் பல பல புதுமைகளை விஞ்ஞானிகள் ஏற்படுத்தி யுள்ளனர். வெப்பம் மிகுந்த நாடுகளில் இன்று சூரிய வெளிச்சத்தால் சுடு நீரைப் பெறும் யந்திரங்கள் ஏற்ப டுத்தியுள்ளனர். சூரிய வெப் பத்தை உபயோகித்து, சமையல் செய்யக் கூடிய, சூரிய வெப்பச் சமையற் கருவியைத் (Solar Cooker) தயாரித்துள்ளனர்.

மின்சாரத்தை ஏற்படுத்த வும் சூரிய சக்தியைப் பயன் படுத்துகின்றனர். ஒரு பட்ட ரியின் (Battery) ஒரு புறத் தைச் சூடாக்கினால் அதில் உண்டாக்கும் சக்தி மறுபுறம் சென்று மின்சார சக்தியை (Current effect) ஏற்படுத்தும் முறையை ஆராய்ந்து கண்டு பிடித்துள்ளனர்.

"கனகவாசன்"

மாணவர் கடமை

மாணவர்களாகிய நாம் இன்று கல்வி பயிலுகி றோம் என்றால் உத்தியோகம் பெற மாத்திரம் அல்ல..... அறிவு பெறுவதற்கு..... ஆகையால் மாணவர்கள் சமுக சேவையை தன் முதற் கடமையாக குறித்துக் கொள்ள வேண்டும். நமக் காக நாற்பது சத வீதமும் மற்றவர்களுக்காக அறுபது சத வீதமும் பாடுபட வேண் டும். படித்துவிட்டோம்— அதற்காக பட்டிக்காட்டுமக் களோடு பழகக்கூடாது என்ற பிற்போக்கு எண்ணம் அடியோடு ஒழிய வேண்டும்; ஓய்வுநேரத்தில் கிராமங்க ளுக்குச் சென்று சமுக சேவையில் ஈடுபாடு கொண்டு கல்வியறிவில்லாத வர்களுக்கு, "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைப் புகினும் கற்கை நன்றே" என்றமுதுரையை உணர்த்தி கல்வி கற்க தூண்ட வேண் டும்.

இன்றைய மாணவர்களே வருங்காலத் தலைவர்கள். அமைச்சர்கள்! ஆகவே மாணவர்கள் இப்போ திருந்தே உயர்ந்த குறிக் கோள்களையும், கடமையாற் றும் பண்பையும் தன்ன கத்தே கொண்டு விளங்க வேண்டும்.

நம்நாடு தன்னுரிமைபெற் றுவிட்டது. நாடு தன்னுட்சி பெற்ற பின்பும், யாங்கணும் வறுமையும், பதவி வேட் டையும் சுயநலமும் தாண்ட வமாடுவதையே காணுகின் றோம். நம் அருமைத் தலை வர்கள் அரும்பாடுபட்டு அடைந்த சுதந்திரத்தின் பலன் இதுதானு? என்ற கேள்வி நம்மை வருத்துகி றது. இந்நிலை மாறுவிடில் பெற்ற சுதந்திரத்தால் ஒரு பயனும் இல்லையன்றோ! இதற்கெல்லாம் ஒரு நாடு டினின் மாணவர்களின் கடமை களையே பொறுத்திருக்கி றது. மாணவர்கள் "இது எனது நாடு...எனக்கும் இந் நாட்டின் குறைபாடுகளைக் களையும் பணியில் பங்கு கொள்ள உரிமையுண்டு" என்று சொல்ல வேண்டு மென்றால், அவன் தன் கட மைகளை நாட்டிற்கு காணிக் கையாக செலுத்தியே ஆக வேண்டும்.

ந. அபூர்வம்

நாடும் மொழியும் இணை பிரியாத தொடர்புகொண் டவை. ஒரு நாட்டின் சீரை யும், சிறப்பையும் பண்டைப் பெருமைகளையும், அறிவிக் கும் கருவி அந்நாட்டில் வழங்கும் மொழியே! ஆகை யால் மாணவர்கள் தம் தாய் மொழியையே முதற்கண் விருப்பமாகக் கற்க வேண்டும். ஏனைய மொழிகளை நந்தாய் மொழியுடன் கலக்கக் கூடாது.

மேலும் மாணவர்கள் தன் நாட்டின் வறுமையையும், பஞ்சத்தையும் போக்கிட பாடுபட வேண்டும். ஒரு நாட்டில் வறுமை ஒழிய வேண்டுமானால் அந்நாட்டில் பொருள்வளம் பெருகவேண் டும். பொருள்வளம் பெருக தொழில்வளம் ஓங்க வேண் டும். தொழில் ஓங்க வேண்டு மென்றால் அது மாணவர்க ளின் கடமையைப் பொறுத் ததே! மாணவர்கள் நாட்டி லுள்ள தொழிலாளர்களை ஊக்கமூட்ட வேண்டும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் அதிக விலையா னாலும் அவைகளையே வாங்க வேண்டும். தொழிலாளர் கள் சோர்வுற்ற நேரத்தில் அவர்களுக்கு உற்சாகமூட்டி ஊக்கு[illegible]

அண்மையில் தமிழகத்தில் மாணவர்களும் மக்களும் தன் நாட்டிலே குவிந்து கிடந்த கைத்தறி ஆடைகளை வாங்கிவிடாது கண்ணைக் கவ ரும் வெளிநாட்டு பட் டாடைகளை விரும்பியதால், எத்தனை கைதறி நெசவாளர் கள் திருவோடேந்தி பிச்சை காரர்களாக திரிந்தனர்! நஞ் சுண்டும் கயிற்றிலே தூக்கிட் டும் இறந்தோர் எத்தனை பேர்!! கிணற்றிலே விழுந்து மடிந்தோர் தொகை எண்ணி முடியாதே!!! அந்தோ அவற்றை கூறவும் நா கூசுகிறதே! இந்நிலை ஏன் ஏற்பட்டது? உள்நாட்டுப் பொருள்களை உதவாக்கறை யென்று உதறித் தள்ளியதனலன்றே! ஆகவே மாணவர் கள் தன் நாட்டுத் தொழிலா ளர்களையும் அவர்தம் திருக் கரங்கள் ஆக்கிடும் பொருட் களையும் ஆதரித்து பிரச்சா ரம் செய்வதையும் தன் கட மைகளில் ஒன்றாக குறித்துக் கொள்ள வேண்டும்

மாணவர்கள் சாதி, மதம் காரணமாக குறுகிய மனப் பான்மையுடன் வேற்று மையை வளர்க்கக்கூடாது. பல சமயங்களைக்கொண்ட நாட்டில் மாணவர்கள் ஒற் றுமையின்றி ஒருவருக்கொரு வர் சண்டையிட்டுக் கொண்டு இருந்தால் மாற்ரு ரின் ஏளனத்திற்கு உள்ளாக வேண்டி வரும். நாட்டின் உயிர்நிலை ஒற்றுமையே! அத னலன்றே,

"நன்ருய்ப் படியுங்கள்!
நாட்டின் குழந்தைகாள்
ஒன்ருய் இருங்கள் உயர்வினை
எண்ணுங்கள்!"

என்று புரட்சிக் கவி பாரதி தாசன் கூறுகின்ரூர். ஆகவே ஒன்ரூய் இருந்து நன்ரூய் படித்து, ஒன்றே குலம் ஒரு வனே தேவன் என்ற உயர்ந்த நோக்குடன், ஒல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர்இனம். எல்லாரும் இந்நாட்டு பக் கள் என்று உறவுகொண் டாடி,

அபிப்பிராய பேத மகாத்மியம்

இன்று பற்பல கட்சிகள், கொள்கைகள், விவா தங்கள் இருப்பதற்கு 'அபிப் பிராய பேதம்'தான் கார ணம். நாம் ஒரு பொருளைப் பற்றிஒருவித அபிப்பிராயம் கொள்ள மற்ரொருசாரார், பிறநாட்டார் வேறுவித அபிப்பிராயம் கொண்டவர் களாக இருக்கிறார்கள்.

புரோனிஸ்லோ (Bronis law) என்பவர் ஒரு நாள் 'மனித மாமிசம்' உண்ணும் கனிபால் (Cannibal) சாதி யைச் சேர்ந்த ஒருவனுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்

"குசிங்கன்"

தார். "இப்பொழுது ஐரோப்பாவின் மகாயுத்தம் நடந்து கொண்டிருக்கிறதே நீங்கள் கொன்று குவிக்கும் இவ்வளவு பிணங்களையும் எவ்வாறு உண்ணுகிறீர்கள்" என வினவினன். அவர் அவ னது நாகரிகமின்மையையும் அறியாமையையும் கண்டு நகைத்துக் கொண்டே "நாங்கள் மனித மாமிசம் சாப்பிடுவதில்லை" என்ரூர். அவன் அதிசயத்துடன் வியந்துகொண்டே "என்ன காட்டுமிராண்டிகள் நீங்கள், எவ்வித குறிக்கோளும் இல் லாமல் மனிதரைக் கொல் கிறீர்களே" என்ரூன்.

"ஒற்றுமையாக உழைத்
திடுவோம் நாட்டில்
உற்ற துணைவராய்
வாழ்ந்திடுவோம்
வெற்றுரை பேசித் திரிய
வேண்டாம்—இன்னும்
வீணைப் புராணம் விரிக்க
வேண்டாம்"

என்று கவி மணி தேசிக விஞ யகம் கூறியபடி வாழ வேண் டும்.

நிலை பாராய்!

தீரத்து வித்தாம் சோழனின் தீரத்தைத்
தீயெனப் பற்றநல் பர்மாவும்
தூரத்து மலையாம் இமயத்து விற்கொடி
தூண்டவே துடித்த சேரனும்
சிரற்று வாழ்வினும் மாள்வது நன்றென
சிறிட்ட கரிகால் கண்டுமே
போரற்றுத் தேறவே வீறுற்று நிற்கும்
போர்வீரா பாரடா உன்னை!

அஞ்சாத குப்தரும் அஞ்சினர் தமிழர்க்கு
அயராத மௌரியரும் அயர்ந்தார்
கெஞ்சாத அக்பரும் மஞ்சுகொள் அசோகனும்
கெலித்தார் தமிழகம் மதித்தார்
துஞ்சாத கஜனியும் கோரிபாபர் அலெக்சும்
துடித்தார் தமிழனிற் பயந்தார்
மிஞ்சாத தமிழனை மிரட்டுதல் காட்டியே
மடக்கிட விட்டிடல் முறையோ?

யாருக்கும் பணியா பரம்பரை கண்டோன்
யாதுக்கும் கலங்கிலா நெஞ்சோன்
வீருக்கு அணியாய் இலக்கியம் கொண்டோன்
வீணரும் மதிக்குநிலை பூண்டோன்
போருக்கு முறைதனை போதிக்க முனைந்தோன்
பொல்லார் சோதிக்கக் களைக்கான்
பாருக்கு நற்பாடம் புகட்டிய தமிழோன்
பாழ்நிலை இங்குதான் பார்ப்பதோ?

—"கோசுதா"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்

மாதர் முன்னேற்றச் சங்கம்

தாராக்குண்டு கிராமத்தில் முஸ்லிம் மாதர் முன்னேற்ற சங்கத்தை கிராம முன்னேற்றப் பயிற்சியாளர் ஜனப் எம். ஏ. ஏ. தாவூது சமீபத்தில் அங்குராப்பணம் செய்துவைத்தார்.

ஜனப் எம்.ஏ.நூறு முஹம்மது, ஜனப் ஏ.எஸ்.எம்.அப்துல்கனி, ஜனப் எம். ஏ. எம். சஹீது ஆகியோர் சொற்பொழிவாற்றி பின் கீழ்க்காணப்படுவோர் சங்க நிர்வாகிகளாகத் தெரியப்பட்டனர். போஷகர்கள்: திருமதி என். ஜைகசோதி(ஆசிரியை) திருமதி லீலாவதி (மருத்துவமாது) தலைவி: திருமதி எம். சஹர் பான். உபதலைவி: திருமதி எம்.முஹம்மது மறியம், காரியதரிசி: செல்வி கே. சுபைதா, உபகாரியதரிசி: திருமதி ஏ. ஹாஜரா உம்மா, தனதிகாரி: ஏ எஸ். தங்க முத்து, மேலதிக நிருவாக சபை அங்கத்தவர்கள்: திருமதி ஏ. முஹம்மதும்மா, திருமதி எஸ். உம்முசஃதா, திருமதி ஏ. சுலைகா உம்மா, திருமதி ஏ. எம். பசறியா.

அம்பாரையில் சிவராத்திரி விழா

அம்பாரை அருள் நெறித் திருக்கூட்டத்தாரின் ஆதரவில் சென்ற 20-2-55-ல் "சிவராத்திரி விழா" வில்லுப் பிள்ளையார் கோவிலில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. செல்வி க. இரத்தினதேவி இனிய பாடல்கள் பாடி இசைவிருந்தளித்தார். "அன்பும் அருளும் அழகும்" என்ற பொருப்பற்றித் திரு.க.கணபதிப் பிள்ளை சொற்பொழிவாற்றினர். சங்கீத பூஷணம் திரு. க. தங்கராசா சங்கீத கச்சேரி நடத்தினர். பண்டிதர் த. கிருஷ்ணபிள்ளை மகா சிவராத்திரியின் சிறப்பையும் அதை எவ்வாறு அனுஷ்டிக்க வேண்டுமென்பதையும், அவ்வாறு அனுஷ்டிப்பதால் அடையும் பலனையும் விளக்கி ஓர் சொற்பொழிவாற்றினர்.

பிரயாணிகள் நல உரிமைச் சங்கம்.

வாழைச்சேனை கோறளைப் பற்று பிரயாணிகளின் நலன் கருதி இப்பகுதிப் போக்குவரத்து இடைஞ்சலை நிவர்த்திக்கும் முகமாக ஒருபொதுக் கூட்டம் வாழைச்சேனைக் கிராமக் கோட்டுக் கருகாமையில் திரு. சி. ப. இராசையா தலைமையில் கூடிற்று. கிழக்கு மாகாண மக்கள் புகையிரதத்திலும் இப்பகுதி பஸ்களிலும் பிரயாண வேளைகளில் படும் கஷ்டங்களை விளக்கிப் பலர் பேசினார்கள். ஈற்றில் பின்வரும் உத்தியோகஸ்தர்கள் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப் பட்டது.

திரு.எ.சண்முகம் தலைவராகவும், ஜனப் எஸ். ஏ. அறவி முத்து மரைக்கார் உபதலைவராகவும், திரு. என். தம்பிப் பிள்ளை தனதிகாரியாகவும், ஜனப் வை. எம். முஸ்தபா, திரு. என். தங்கத்துரை கூட்டுக் காரியதரிசியாகவும் பின் வருபவர்கள் கொமிட்டி அங்கத்தவர்களாகவும், எஸ். பி. இராசேந்திரம், திரு. எஸ். ஆறுமுகம், திரு. கே. கதிர்காமத்தம்பி, திரு. கே. ஆறுமுகராசா, திரு. யூ. முகம்மதுத்தம்பி, திரு. எம். எம். சரீப், முஸ்லிம் கே. நல்லதம்பி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழாசிரியர் சங்கம்

தம்மங்கடவைப் பகுதித் தமிழாசிரியர் சங்கக் கூட்டம் சென்ற 19-2-55ல் மாணிக்கம்பிட்டி அரசினர் தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் உபதலைவர் திரு மு. இராசதுரை தலைமையில் கூடப்பெற்றது. சங்க காரியதரிசி திரு சி. இராமநாதரால் சென்ற கூட்ட அறிக்கை வாசிக்கப் பெற்றுச் சபையோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டபின் "சங்கம் எப்படி இயங்கவேண்டும்" என்பதுபற்றி ஆசிரியர் திரு க. முத்தையா பேசினார். ஆசிரியர்கள் திரு வி. இளையதம்பி, திரு சி. கந்தர், ஜனப் ஏ. எம். மொகமட் ஆகியோரும் பேசினர்.

பொலநறுவைப் பகுதித் தமிழ்ப் பாடசாலைகளிடையே விளையாட்டுப் போட்டி ஒன்று நடாத்தத் தீர்மானிக்கப்பட்டது. அதற்காகிய ஏற்பாடுகளைச்செய்ய திரு சி. இராமநாதர், திரு வி. இளையதம்பி ஆகிய இருவரும் நியமிக்கப் பெற்றனர்.

முஸ்லிம் முன்னேற்றச் சங்கம்

திருகோணமலை புதுமடம் முஸ்லிம் முன்னேற்றச் சங்கத்தின் தொடக்க விழா வை. எம். எம். ஏ. மண்டபத்தில் சென்ற 18-2-55ல் தற்காலிக தலைவர் ஜனப் இ. இபுராமுசா தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஜனப் ப. அ. ஜமால்தீன் உபதலைவர், ஜனப் பீ. தீனுர்ஹான், செயலாளர்: எஸ். எச். சதக்கத்துல்லா, கே. சீனி முஹம்மது, பொறுப்பாளர்: கே. அப்துல் காதர். பொதுக்குழு உறுப்பினர்கள்: எம். அபுல்ஹசன், ஆ. ம. புஹாரி, கே. முஹம்மது சரிபு, எம். அபுதாஹிர், நெ. அப்துல்காதர், பி. சகாப்தீன், ஏ. கே. அப்துல் காதர் ஆகியவர்கள் தெரிவு செய்யப்பட்டபின் தலைவர் நன்றியுடன் கூட்டம் முடிவடைந்தது.

அண்ணா பகுத்தறிவு மன்றம்

அண்ணா பகுத்தறிவு மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் கடந்த 12-2-55ல் கொள்ளுப்பிட்டி காலிவீதி நிர் 159ம் இலக்க இல்லத்தில் திரு மா. யோ. தேவதாசன் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது புதிய செயற்குழு உறுப்பினர்களாக தோழர்களான: எம். சின்னையா, எஸ். எஸ். சுப்பையா, எஸ். நயினர், பெரியார் சுந்தரம் பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின. (1) எதிர் வரும் ஆகஸ்ட் மாதத்தில் மன்றத்தின் ஆண்டுவிழாநடத்துவது. (2) மன்றச்சொற் பயிற்சி ஆசிரியராக தோழர் மா. யோ. தேவதாசனை நியமிப்பது. (3) பொங்கல்விழா வரவு செலவு கணக்குகளை ஒப்புக் கொள்வது. மேற்கண்ட தீர்மானங்களை ஆதரித்து தோழர்களான திரு எம். உமர், வை. மு. அழகேசன், எம். எஸ். குமார், டி. எம். தமிழ்வேந்தன், எம். கே. தமிழ்மாறன், தி. பரமசிவம் ஆகியோர்கள் பேசியபின் செயலாளர் கே. கே. தமிழ்நாதன் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

மாணவர் தேர்ச்சிச் சங்கம்

பெரிய கிண்ணியா மாணவர் தேர்ச்சிச் சங்கக் கூட்டம் சென்ற 17-2-55ல் அரசினர் ஆண் பாடசாலை மண்டபத்தில் தலைமையாசிரியர் திரு எம். ரி. காசிநாதர் தலைமையின்கீழ் ஒ. சேகு முகம்மதுவின் கிரு அத்துடன் ஆரம்பமானது.

காரியதரிசி அவர்களால் சென்ற கூட்ட [illegible] வாசிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. நாடகங்கள், பாட்டு, பேச்சு, கதை முதலியன மாணவர்களால் நடாத்தப்பட்டன. பின் நடப்பு வருடத்துக்கு தனதிகாரியாக எம். ஈ. எச். தௌபீக் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அடுத்து மாணவர்களின் வேண்டுகோளின்படி "மாணவ உதைபந்தாட்டச் சங்கம்" அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பின் கூட்ட முடிவில் கீழ்க்காணப்படுவோர் சங்க உத்தியோகஸ்தர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: ஜனப் நூர்தீன், (கிழக்கு மாகாண வித்தியாதரிசி) திரு சண்முகநாதன், (திரிகோணமலைப் பகுதி பரிசோதகர்) பிரதம தலைவர்கள்: திரு எம். ரி. காசிநாதர், ஜனப் ரி. ஏ. எம். இஸ்காக், திரு எம். இராசையா, தலைவர்: எஸ். ஏ. முத்தலிபு, காரியதரிசி: ஏ. ஆர். செய்னுதீன், தனதிகாரி: எம். ஐ. எம். இவ்ருகீம், பரிசோதகர்: ஏ. ஆர். முகைதீன், கெப்டன்: கே. ஏ. சுக்கூர்.

பகுத்தறிவு சங்கம்

இராமநாதபுரம் மாவட்டம் கள்ளிப்பட்டு பகுத்தறிவு சங்கத்தின் மாதாந்தரப் பொதுக் கூட்டம் கடந்த 6-2-55ல் திரு கே. எஸ். ராசையா தலைமையில் கூடியது.

சங்கச் செயலாளர் திரு. ப. பெரியசாமி பேசுகையில் 6-3-55ல் நடைபெறப் போகும் மாதாந்தரப் பொதுக்கூட்டத்தில் புதிய உத்தியோகத்தர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று அங்கத்தினர்களுக்கு அறிவித்தார்.

கடந்த மாத நிகழ்ச்சியும் வரவு செலவும் முறையே படிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

'மதம் மக்களுக்கு செய்த நன்மையென்ன', 'யார் தாழ்ந்தவன்', 'பகுத்தறிவு' 'நேர்மை' யென்னும் பொருள்கள்பற்றி திருவாளர்கள்: ஆர். மாணிக்கம், எஸ். மாதவன், எஸ். கே. ஜெகநாதன், அ. வேலு முதலியவர்களால் அரிய சொற் பெருக்கு நிகழ்த்தினர்கள்.

கடைசியாக செயலாளர் திரு. பெரியசாமி நன்றி நவில கூட்டம் இனிது முடிவடைந்தது.

சன சமூக நிலைய வருடாந்த விழா

இளவாலை சென் ஜேம்ஸ் சன சமூக நிலைய 2வது வருடாந்த விழா சென்ற 12-2-55ல் வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு வி. வீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

முகாந்திரம் வி. மகேசன், திரு. துரைரத்தினம், திரு. அ. அமிர்தலிங்கம், திரு ஏ. டி. வேதாபரணம் ஆசிரியர், திரு மு. காசிவிசுவநாதன், திரு வி. வீரசிங்கம் முதலியோர் சொற்பொழிவாற்றினர். சங்கானை பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனப் எம். எம். ஹுசைன் அவர்களும் சமுகளித்தார்.

மாணவர்களின் பேச்சுப் போட்டியும் நடைபெற்றது. நிர்வாக உத்தியோகஸ்தர்களும் தெரியப்பட்டனர். அக்கிராசனர்: திரு பி. பாக்கியநாதன், காரியதரிசி: திரு கே. அந்தோனிப்பிள்ளை, தனதிகாரி: திரு இ. சாமிநாதன். நிர்வாக சபை அங்கத்தவர்கள் 8 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

உ. வே. சாமிநாதையர் நூற்றாண்டு விழா

முற்போக்கு வாலிபர் சங்கத்தின் ஆதரவில் 20-2-55ல் கொட்டாஞ்சேனை பிரின்ஸ் கல்லூரி மண்டபத்தில் திரு. நாராயணன் தலைமையின் கீழ் நடைபெற்றது.

"சாமிநாதையரின் தமிழ்த் தொண்டு" என்ற பொருள்பற்றி திரு அ. தங்கையாபேசினர்; "கம்பனும் ஒட்டக்கூத்தரும்" என்ற பொருள்பற்றி திரு. செல்வராசா பேசினர். மற்றும் திரு. இராகவன், திரு. அந்தோனி, திரு ஜோசப் ஆகியோர் சாமிநாதையரின் தமிழ்த் தொண்டு பற்றி புகழ்ந்து பேசினர்.

தலைவரவர்களின் நன்றியுரையோடு விழா இனிதே கலைந்தது.

ஓவிய கலா நிலையம்

யாழ்ப்பாணம் ஓவிய கலா நிலையத்திற்கு சென்ற 15-2-55ல் கலைஞர்கள் டி. கே. எஸ். சகோதரர்கள் சமுகமளித்தனர்.

யாழ்ப்பாண மேயர் திரு. காதி எம். எம். சுல்தான் தலைமை தாங்கிச் சபையைச் சிறப்பித்தனர். அவ்வமயம் கலைஞர் திரு. டி. கே. சண்முகம், கலாநிலைய ஆசிரியர் தமது சேவையை வெறும் அழகுக் கலையாக மட்டும் வளர்க்கவில்லை. அறிவூட்டலுக்கும் ஆக்க வேலைகளுக்கும் பயன்படுத்தினர்கள் என்றும், கலைவளர்ச்சிக்கு மகத்தான உதவியளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

அம்பாள் சன சமூக நிலையம்

பண்ணாகம் வடக்கு அம்பாள் சன சமூக நிலைய கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் 20-2-55ல் மகாசிவராத்திரி விழா கொண்டாடப்பட்டது. அன்றுகாலை எட்டு மணி தொடக்கம் அருகாமையிலுள்ள அம்பாள் ஆலயத்தில் நாற்பத்தெட்டு அன்பர்கள் சமய தீட்சை பெற்றனர். மாலை பஜனையும் கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெற்றது. பின்னர் அருகாமையிலுள்ள சாந்தை விநாயகர் ஆலயத்தில் விசேஷ பூசையும், கூட்டமும், பிரார்த்தனையும் நடைபெற்றது. கூட்டத்தில் அனேக பெரியார்கள் சொற்பெருக்காற்றினர்.

மனிதவர்க்கத்தின்

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

வெள்ளையர்களின் சராசரி ஜீவியகாலத்திலும் பார்க்க 10 வருடங்கள் குறைவு. அவர்களின் மரண விகிதம் வெள்ளையர்களின் மரண விகிதத்திலும் 19 சத வீதம் கூட. சிசுச்சாவு 55 சதவீதம் அதிகம்.

அமெரிக்க வாலிபர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் எந்தவித இராணுவ சேவைக்கும் தகுதியற்றவர்கள் என்று 'யூ. எஸ். நியூஸ் அன்ட் வேல்ட் றிபோர்ட்' என்ற பத்திரிகை எழுதுகிறது. வாலிபர்களிடையே காணப்படும் பலவீனமும், சுகாதாரக் குறைவுமே இதற்குக் காரணம் என்று அது மேலும் கூறுகிறது.

-'பிளிட்ஸ்'

'சுதந்திரன்'

சந்தா விபரம்

வருட சந்தா	ரூபா 7-50
ஆறு மாத சந்தா	ரூபா 4-00

விபரங்களுக்கு எழுதவும்:-
சர்குலேஷன் மானேஜர்,
'சுதந்திரன்'
194ஏ, தட்டாதெரு, கொழும்பு-12

இந்த எழுத்துக்கள்!

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் புதிய 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும்சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

நவீன முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக நிறுவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

நாம் இப்பத்திரிகையில் உபயோகிக்கும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத் தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும் விலைப் பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக்கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிமுதல் மகத்தான ஆரம்பம்!

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் மற்றுமொரு பிரமாண்டமான வெளியீடு!

காமினி சபையர் குயின்லன் வெம்பிளி

(கொழும்பு) (வெள்ளவத்தை) (நுககொடை) (கண்டி)

ஜூபிட்டர் மானெல்

(குருணாகலை) (மொரட்டுவை)

இன்னும் பல திரைகளில்

இன்றைய சிங்கள சமூகத்தின் ஒப்பரிய ஓர் கதையான

★ அசோகா

மிஸ் புஷ்பாஜனட், சுமதிபிபீலே, மிஸ் பிரேமகாந்தி, ஆனந்த வீரக்கூன் நடித்தது.

வெள்ளிமுதல் குதூகல ஆரம்பம்!

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் மகத்தான மற்றுமோர் புதுமை வெளியீடு!

கிங்ஸ்லி விஜயா வெலிங்டன்

(கொழும்பு) (மட்டக்களப்பு) (யாழ்ப்பாணம் & திருகோணமலை)

தமிழ்ச் சினிமாவில் புதுமையிலும் புதுமையே என அங்கலாய்த்த அபிமானிகளுக்கு ஏ. வி. எம்.மின் அன்பளிப்பு!

நடனமோ, சங்கீதமோ இல்லாத முதல் தமிழ்ப் படம்!

தமிழ்ப் பட உலகில் புதியதோர் சகாப்தத்தை ஏ. வி. எம். அமைத்துள்ளார்கள்!

சுதந்திர நாட்டைக் காட்டிக்கொடுக்க முயலும் கணவனை தாய்நாடா ஒரு பெண்ணின் வாழ்வில் முக்கியமானது?

இந்தச் சிக்கலான வினவிற்கு பதிலை

புதுமைநிறை அந்த நாள் பதில் தரும்!

சிவாஜி கணேசன், பண்டரிபாய், சூர்யகலா, ஜாவர் சீதாராமன் நடித்தது.

டைரக்ஷன்: "பெண்" படப் புகழ் பாலசந்தர்.

மைலன் (கொழும்பு)

வெற்றிகரமான 12வது வாரம்!

எம். ஆர். ராதா, ஸ்ரீ ரஞ்சனி நடிக்கும்

ரத்தக் கண்ணீர்

இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 109 இல் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு 1955 மார்ச் 6ந் திகதி பிரசுரம் செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org